# மங்கையர் மலர்

டிசம்பர் '87 ரூ. 4.




## பெண் ஊழியர் வங்கி சிறப்பிதழ்

# உங்கள் கேசத்திற்கு முழுப் பராமரிப்பு இப்பொழுது அளிக்கலாம்.



உங்கள் கேசத்தைப் பட்டு இழைபோல் ஆக்குங்கள்.

அதற்கு மினுமினுப்பு, மற்றும் பளபளப்பு ஊட்டுங்கள்.

மென்மையான கோகுல் ஹெர்பல் ஷாம்புவின் விசேட பராமரிப்புடன் அதனைக் கொஞ்ச விடுங்கள். இந்த ஷாம்புவில் உங்கள் கேசத்தைப் பதப்படுத்த அடங்கியுள்ளன, மருதாணியின் இயற்கை சாறு; கேசம் அடர்ந்து வளர, மற்றும் கேசத் திற்கு ஊட்டமளிக்க புரத சத்து. எனவே கேசம் ஆரோக்கியமாகத் தோற்றமளிக்க, வைட்டமின் சிகிச்சை பெறுகிறது.

இந்த ஷாம்பு, பெரும் பாலானவற்றைவிடசிறப்பாக உழைக்கிறது; சிறந்த விளைவுகளைத் தருகிறது. இன்றே உபயோகித்துப் பாருங்கள்; நாங்கள் கூறுவது நிச்சயமாக நிரூபணமாகும்.




## கோகுல்
ஹெர்பல் ஷாம்பூ

உங்கள் கேசத்திற்குப் பரிசுத்தம், பதம் மற்றும் பராமரிப்பு அளித்திட.




# கல்யாணச் சந்தையிலே...

கல்யாணச் சந்தையில் மட்டும்
விலைபோவோம் நாங்கள்நாங்கள்;
வல்மாட்டின் கழுத்தினைப்போல்
அகமெல்லாம் புண்கள்புண்கள்!

அன்னைதான் ஊட்டியபரிவும்
அருந்தகப்பன் அறிவின் சிறப்பும்
மின்னிடப் பணிபுரிகிறோம்;
போற்றத்தான் கேட்கிறோமோ?

பத்துமணிக்குள் பணியிடம் வந்து
பக்தியுடன் பணிபலசெய்து
சித்து விளையாடிச் சிரமெல்லாம்
சிரமத்தால் வலிக்கும்கேளீர்!

மக்கடைக்குப் போவதில்லை;
அரசிவலுக்கு நேரமில்லை;
போக்குவதற்குப்பொழுதுபோதாத
எமக்கெதற்கு வீணரட்டை?

சேவைக்கென இன்முகம்;
பணுவாயினும் பரமவிருப்பம்;
தேவைக்கு உதவமட்டும்
தேடிப் போனால் 'தோழ'ரில்லை!

இடமாற்றல் சுடினந்தானே;
இருவேறு குடும்பங்கள்தாமே!

கடவுளின் மனைவியெனினும்
கடுந்தவமே ஊர்மாற்றந்தனக்கே!

தேர்விலே வெற்றிபெற்றும்
பதவிகள் கைவிட்டோம்!
ஊரில்லா ஊர்களுக்கே
உத்தரவு பெறுவதாலே!

அறிவிலே தனித்துக் காண்பின்
அடுத்தது இன்னல்தானே;
எறிபடும் சேவிகள் தாமே;
பொடிவைத்த பேச்சுக்களிங்கே!

வேலைக்கு வந்து விட்டால்
உணர்வுகள் மரக்கவேண்டும்!
வேலைப்போல் "கிசுகிசுக்கள்";
வேர்துடிக்க எமைத்தின்னும்!

அத்தனை இடர்களுமிங்கே
சம்பளத்தில் மறைந்துபோகும்;
'வித்தைக்காய்' அடுத்தநாளில்
'ரோபோவாய்'க் கூடோடும்!

கல்யாணச் சந்தையில் மட்டும்
விலைபோவோம் நாங்கள்நாங்கள்;
வல்மாட்டின் கழுத்தினைப் போல்
அகமெல்லாம் புண்கள்புண்கள்.

— விஜயபாரதி





# எங்க வங்கியிலே

## கட்டைவிரலை போட்டோ எடுக்கணுமா?

ஒருமுறை எங்கள் வங்கிக்கு படிப்பறிவில்லாத கிராமவாசி ஒருவர் பணம் டெபாசிட் செய்ய வந்திருந்தார். வங்கியில் பொதுவாக படிப்பறிவில்லாதவர்கள் கணக்கு வைத்துக் கொள்ள வேண்டுமென்றால், அவர்கள் இடதுகை பெருவிரல் ரேகையைப் பதிவு செய்து கொள்வதுடன், அவர்களின் பாஸ்போர்ட் புகைப்படத்தையும் பெற்றுக் கொள்வதுண்டு. அந்த கிராமவாசியிடம் கைரேகை பெற்றுக் கொண்டு கணக்குப் பதிவு செய்து கொண்டு புகைப்படம் எடுத்து வரும்படி கூறினோம். அவர் தன்னுடைய இடதுகை பெருவிரலைக் காட்டி, "இதை மட்டும் போட்டோ (புகைப்படம்) எடுத்துக் கொண்டு வந்தால் போதுமா?" என்றார்.

இதைக் கேட்டு வங்கியிலிருந்த அனைவரும் மௌனமாகச் சிரித்துக் கொண்டோம். காரணம், அவர், நாங்கள் சத்தம் போட்டு சிரிப்பதைப் பார்த்து, தப்பாக நினைத்துக் கொண்டு டெபாசிட் செய்த தொகையை எடுத்துக் கொண்டு போய் விட்டால் என்ன செய்வது? பின்னர் அவரிடம் நிலைமையை விளக்கிச் சொல்லி பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம் எடுத்துக் கொண்டு வரச் சொன்னோம்.

- வசந்தி நடராஜன்.

## ஜிலேபி கொண்டுவா!

வங்கியில் புது மானேஜர் அன்றுதான் பொறுப்பேற்றிருந்தார். எங்களுக்கு ஜெனரல் லெட்ஜர் பாலன்ஸ் புக் (General Ledger Balance Book) தினப்படி கணக்கு புத்தகம் உண்டு. அதை கருக்கமாக GLLB— ஜிலேபி என்று விளையாட்டாகச் சொல்லுவதுண்டு. நான் பியூனிடம் 'ஜிலேபியை கொண்டு வாருங்கள்' என்றேன். அப்போதுதான் தன் கேபினை விட்டு வெளியே வந்த மானேஜர், பியூனிடம் 'ஜிலேபியையா கேட்கிறார்கள், மத்தியானம் பார்ட்டியில் கண்டிப்பாக வாங்கித் தருவாராம் என்று சொல்லுங்கள்' என்று சொல்ல அனைவரும் குபீரென்று சிரித்தோம். ஜிலேபி என்று குறிப்பிடுவது GLLB—ஐதான் என்று சொன்னதும், அவரும் சேர்ந்து, "நல்ல பெயர் வைத்திருக்கிறீர்கள், போங்கள்." என்று சிரித்தார்.

— ஸ்வர்ணலதா.

## நேரடியாகவே பேசலாமே!

தேங்காய்பட்டிணம் என்ற கிளையிலிருந்து எங்கள் கிளைக்கு உமாராணி என்ற ஊழியர் மாற்றலாகி வந்தார். எங்களது வங்கி இரண்டு மாடிகளைக் கொண்ட பெரிய செஸ்ட் பிராஞ்ச் என்பதால் இன்டர்காம் வசதியுண்டு. புதியதாக வந்த உமாவிற்கு

## பாங்கில் ஒரு கொலு

இந்த வருடம் ஸ்டேட் பாங்கின் தி.நகர் கிளையில் கொலு வைத்ததுடன் இல்லாமல் தினம் ஒரு சுண்டல் என்று செய்து வெற்றிலை பாக்கு வேறு கொடுத்திருக்கிறார்கள்.

இதென்ன பாங்கில் வெட்டி வேலை என்று முகத்தைச் சுளிப்பவர்களுக்கு ஒரு செய்தி. இந்தக் கொண்டாட்டத்தினால் பாங்கின் டெபாஸிட் கணிசமாக உயர்ந்திருப்பதுடன் புதிய கஸ்டமர்கள் நூறு பேர்களுக்கு மேல் கணக்குத் துவங்கியிருக்கிறார்களாம்.

அந்தக் கிளையின் மானேஜர் திரு. குப்புசாமியிடம் கேட்டபோது—

"வருடத்திற்கு ஒரு முறை நாங்கள் டெபாஸிட் வீக் என்று கொண்டாடி அதிகப்படி கான்வாஸ் செய்வது வழக்கம் தான் என்றாலும் இந்த வருடம் நவராத்திரி கொண்டாடலாம் என்று இங்கு வேலை பார்க்கும் பெண்கள் யோசனை தெரிவித்தனர். நான் சரியென்றதுதான் தாமதம். அவரவர்கள் வீட்டிலிருந்து பொம்மைகள், பலகைகள், என்று கொண்டு வந்து படிகட்டி கொலு வைத்து அலங்காரம் செய்து விட்டனர்.

அத்துடன் இல்லை. வீடு வீடாக சென்று கொலுவுக்கு அழைத்துச் சுற்றி இருப்பவர்களை வரவழைத்து வெற்றிலை பாக்கு சுண்டல் என்று (அதுவும் பெண்கள் தங்கள் வீட்டிலிருந்து கொண்டுவந்ததுதான்) அமர்க்





# நடந்ததை நினைச்சா....

மேல் மாடியில் வேலை. ஓரிரு நாட்கள் ஓடியது. இன்டர்காமில் பேச வேண்டும் என்கிற ஆசை உள்ளுக்குள். ஆனால் எப்படி பேசுவது என்பது தெரியாது. மற்றவர்கள் பேசுவதைக் கவனித்துக் கொண்டிருந்தவர் இன்று எப்படியும் பேசிவிட வேண்டும் எனத் தீர்மானித்துவிட்டு, கீழே இருக்கும் 'கரண்ட் அகௌண்ட்' தோழி லதாவிடம் பேச முனைந்தார். ரிஸீவரை எடுத்தார். ஒரு பட்டனை அழுத்தினார். மறுமுனையில் சப்தம் நின்றது. ரிஸீவர் எடுக்கப்பட்டது. உடனே இவர் ''ஹலோ ஐ அம் உமா ஸ்பீக்கிங். அவ் ஆர் யூ?'' என்றார்.

''என்ன உமா நான் ரவி பேசறேன் நேரடியாகவே கேட்கலாமே''—என நான்கு சீட்டுக்கள் தள்ளி அமர்ந்திருந்த ரவி என்கிற தமாஷ் பேர்வழி ஆபீஸர் கேட்டது தான் தாமதம்: வெட்கக்குறிகள் முகத்தில் படர 'டப்'பென்று வைத்து விட்டார்.

விஷயம் எங்களுக்குத் தெரிந்தும் விசாரித்தோம். எந்த பட்டனை அழுத்தினாலும் பேசலாம் என்று நினைத்து அழுத்தி விட்டாராம். விழுந்து விழுந்து சிரித்தோம்.

— ஆற்காடு எழிலன்.

## பெண் முன்னேற்றம் பேச்சில்தானா?

எங்கள் வீட்டிற்கு அருகில் உள்ள ஒரு தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில் புதிதாக சிறு சேமிப்புக் கணக்கு ஒன்றைத் துவக்குவதற்காகச் சென்றிருந்தேன்.

அந்த வங்கியின் மேலாளர் உங்களுக்கு அந்த நாட்சியாக வேறு ஒருவர் சாட்சியாகச் சிபாரிசுக் கையெழுத்திட்டால் தான் என் பெயரில் கணக்கு ஆரம்பிக்கப்படும் என்றார். அதே வங்கியில் பணியாற்றும் எனக்குத் தெரிந்த பெண் ஊழியர் என் சார்பில் கையெழுத்திடுகிறேன் எனக் கூற, அதிகாரி அவரை மறுக்க, அதே வங்கியில் பணியாற்றும் ஆண் ஊழியர் இவரை எனக்குத் தெரியும் எனக் கூறி என் சார்பில் கையெழுத்திட அதிகாரி மறு பேச்சின்றி ஒப்புக் கொண்டார். பெண்ணுக்குப் பெண் உதவக் கூடாதா?

அந்த அதிகாரி இத்துடன் விட்டாரா?

நான் காசோலையுடன் கூடிய கணக்கைத் துவக்குகிறேன் எனத் தெரிந்ததும் உங்கள் கணவரிடத்திலிருந்து ஒப்புதல் கடிதம் வாங்கி வாருங்கள் என்றார். இருவருக்கும் பலத்த வாக்கு வாதத்திற்குப் பின் வீட்டுச் சேமிப்புக் காசோலை எனும் பத்து தாள்கள் உள்ள புத்தகத்தைக் கொடுத்தார்.

எவ்வளவோ விஷயங்களில் பெண்கள் முன்னேற்றத்தைப் பற்றிப் பேசுவது வெறும்வாய் அளவில்தானா? ஒரு சிறு சேமிப்புக்கே இவ்வளவு தொல்லைகளா? வங்கிகளின் சேவையைப் பற்றி வெறும் விளம்பரங்கள் செய்வதுடன் சரியா?

— டி. விஜயலட்சுமி, குடியாத்தம்.



களப்படுத்தி விட்டனர்.

இதற்கு நடுவில் வந்தவர்களுடன் சாமர்த்தியமாகப் பேசி, டெபாஸிட் பிடித்து அக்கவுண்ட் ஓபன் செய்யச் சொல்லி கான்வாஸ் செய்தும் விட்டனர்.

வந்திருந்த ஒரு பெண் கஸ்டமர் சொன்னார், ''பாங்கிற்குள் நுழையும் போது எங்கே போவது, எப்படிக் கேட்பது என்று பயம் இருக்கும். இந்த மாதிரி பண்டிகைகள் எல்லாம் செய்தால் அவர்கள் நம் வீட்டுப் பெண்கள் என்று பாசம் ஏற்பட்டு விடுவதால், என்ன ஆனாலும் இந்த பாங்கை விட்டுப் போகக் கூடாது என்ற பிடிப்பு வந்து விடுகிறது'' என்றார்.

— கிரிஜா ராகவன்.

## ஐம்பது பைசான்னு நினைச்சேன்!

நாம் வாடிக்கையாளர்களுக்கு உதவப் போய் அது சமயத்தில் நம்மைத் தர்மசங்கடமான நிலைமையில் ஆழ்த்துவதுண்டு! ஒரு நாள் ஒரு செல்வந்தர் வீட்டுப் பெண்மணி என்னிடம் வந்து ரூபாய் பத்தாயிரம் எடுக்கவேண்டுமென்றும், சீக்கிரமாகச் செல்ல உதவுமாறும் கேட்டார். நான் வேறு செக்ஷனில் இருந்ததால் சேமிப்பு வங்கிக்குச் சென்று காசோலையை நிரப்பிக் கொடுத்து, அடையாளவில்லை (டோக்கன்) ஒன்றையும் அந்தப் பெண்மணியிடம் கொடுத்து, என்னிருக்கைக்குச் சென்று விட்டேன். அவரது பெயர் கூப்பிடப்பட்டதும், சென்று ரூபாயைப் பெறச் சென்றவர் கையில் அடையாளவில்லை கொடுக்கப்படவில்லை என்று சொல்லி என்னிடம் இருக்கிறதா என்று கேட்க வந்தார். நான் அவரிடம் கொடுத்ததாகச் சொல்லியும், கேட்காமல் அவரிடம் இல்லை என்றே சாதித்து விட்டார். நான் பதறிப் போனேன். வேறு யாரிடமும் அந்த வில்லை இல்லை. அவரோ தனது கைப்பையையே காலி செய்து காண்பித்தார். எனக்கு ஒன்றுமே ஓடவில்லை.

என் மீது அந்த வாடிக்கையாளர் கோபமாகப் பேசினார். இக்கட்டான நிலைமையில் இறைவனை வேண்டுவதைத் தவிர வேறு வழியில்லை எனக்கு.

திடீரென அவர், "ஸாரி! எனது இடது கையில் அவ்வில்லை இருப்பதை நான் இவ்வளவு நேரமும் உணரவில்லை. அது ஒரு 50 பைசா நாணயம்னு நினைத்திருந்தேன்" என்றார். அதற்குப் பின்னர்தான் எனக்கு மூச்சு வந்தது. என்னைத் தேடி என் இருக்கைக்கே அனேக வாடிக்கையாளர்கள் வருவதையும், அவர்களுக்கு நான் உதவுவதையும் கண்டு, எனது சக ஊழியர்கள் "உங்களது **Over enthusiasm**' எங்கே சென்று முடியுமென்று உங்களுக்குத் தெரியாது" என்று அன்பாக எச்சரித்ததுண்டு. இருப்பினும், எனது இலட்சியம் சிறந்த முறையில் சேவை செய்து நற்பெயர் வாங்க வேண்டுமென்பதே. எனக்கு என் பத்தாண்டு கால அனுபவத்தில் நல்ல பெயரே இறைவன் அருளால் கிடைத்திருக்கிறது!

— ஜெயந்தி சுந்தரராஜன்.



மதுரை ஸ்டேட் பாங்கு மண்டல அலுவலகத்திலும் கொலு வைத்து, இசை கச்சேரிகளையும் வைத்துத் தடபுடல் படுத்தி விட்டனர். கொலுவுக்கு வந்தவர்களுக்கு வெற்றிலை பாக்கு, பழம், குங்குமம், சுண்டல் அத்தனையும் உண்டு. செல்வி. ஜெகதாம்பாள், திருமதி. உஷா ராணி இவர்களின் உதவியும் இதற்குப் பெரிதும் காரணம்.

— மதுரை ராஜசேகரன்.

## குழந்தையுடன் ஆபீஸுக்கு!

இருகோடுகள் படத்தில் நாகேஷ் குழந்தையுடன் ஆபீஸ் வருவார். அதேபோல், நான் வேலை செய்த கிளையில் நடந்தது. 'ஷிஃப்ட்' கிளையில் மாலை ஆனால் தன் பையனை ஒரு பெண்மணி வங்கியிலேயே வைத்துக் கொண்டிருப்பாள்.


கொஞ்சம் கோபித்தால் "என்ன சார் செய்வது, வீட்டில் பார்த்துக் கொள்ள ஆளில்லை. வேணுமானால் உங்கள் வீட்டிலேயே வைத்துக் கொள்ளுங்கள்." என்று பாதி சீரியஸாகவும் பாதி கிண்டலாகவும் பதில் அளிப்பாள். (ஏற்கனவே இந்தப் பெண்மணி தன் ஒரு வயசுக் குழந்தையை பறி கொடுத்ததால் எல்லாருக்கும் அவளிடம் இரக்கம் உண்டு.)

கவுண்டரில், லெட்ஜரோடு, தன் பையனையும் கவனிக்க வேண்டிய பொறுப்பு அவளுக்கு. பையன் சாது. ஆனால் ஒரு சமயம், திடீரென்று பாங்க் வவுச்சரைக் கிழித்துப் போடும் நிலைமை வந்ததும், அக்கவுண்டண்ட்ஸ் எல்லாருமாகச் சேர்ந்து ஏஜெண்





தனிநபர் வங்கித் தேவைகளை
அறிந்து கொண்டு மேலும் நல்ல
முறையில் உங்களுக்கு சேவை
செய்ய நாங்கள்
"வாடிக்கையாளர் தொடர்பு மாதம்"
கொண்டாடுகிறோம்.




**மதுரை வங்கி லிமிடெட்**

- உங்கள் வங்கி

S.V. சண்முகவடிவேலு

சேர்மன்


நெஸ்டம் பேபி ஸிரியல்.
ஆரம்பத்திற்கு பொருத்தமானது.
வளர்ச்சிக்கு உன்னதமானது
நெஸ்டம்®
ரைஸ்
Nestlé
Nestum
baby cereal
Rice
mix with milk



டிடம் முறையிட்டோம். எங்கள் வேண்டுகோளை அவர் நன்கு புரிந்து கொண்டு, அந்தப் பெண்மணிக்கு அலுவல நேரத்தை மாற்றித் தந்தார். சிறிது காலத்திலேயே அவனும் பதவி உயர்வு அடைந்து டெல்லி சென்று விட்டான்.

— பரஞ்ஜோதி.

## இங்கு கே. ஆர். விஜயா வருவாரா?

நான் பணிபுரியும் விஜயா வங்கி விஜய தசமி அன்று ஆரம்பித்ததால் அப்படிப் பெயர் பெற்றது. எங்கள் வங்கியில் தூத்துக்குடி அருகில் ஒரு கிராமத்திலிருந்து ஒருவர் வேலைக்குச் சேர்ந்தார். அவரிடம்

''என்ன, உங்களுக்கு பேங்க் பிடித்திருக்கிறதா?'' என்று நாங்கள் கேட்ட போது,

''ரொம்பப் பிடித்து இருக்கிறது. எங்கள் ஊரில் கூட எல்லோரும் இது கே. ஆர். விஜயாவோட பாங்க் ரொம்ப நல்ல பாங்க் என்று சொன்னார்கள். அந்தம்மா அடிக்கடி பாங்குக்கு வருவார்களா'' என்று விசாரிக்க,

ஒரு சீனியர் ஊழியர் ''உனக்கு யாரோ தப்பா சொல்லி இருக்காங்க. இது ஏ. விஜயாவோட பாங்க் அப்பா'' என்று சீரியஸாக முகத்தை வைத்துக் கொண்டு சொல்ல அவரும் ''அப்படிங்களா'' என்று அப்பாவித்தனமாகக் கேட்க எங்களால் சிரிப்பை அடக்கவே முடியவில்லை.

— மீனலோசனி பட்டாபிராமன்.

## வங்கி மோதிரம்!

நகை மீது கடன் வாங்குவதற்காக என் சகோதரி வங்கிக்கு வந்திருந்தார். ஒரு செயின், இரண்டு வளையல்கள், ஒரு வங்கி மோதிரம் ஆகியவற்றை வைத்து ரூ.5000/= கேட்டார். நான் செயினும், வளையலும் போதுமானதாக இருக்கும் என்று அருகிலிருந்த ஆபீஸரிடம் கொடுத்தேன்.

அவற்றை எடை பார்த்த ஆபீஸர், கடன் தொகைக்கு நகைகளின் எடை குறைவாக இருப்பதை அறிந்து சமயோசிதமாக, ''அது வங்கி மோதிரம்.. கொடுத்திடுங்க'' என்று சிரித்துக் கொண்டே மோதிரத்தையும் வாங்கிக் கொண்டார். அவருடைய சிரித்துக் கொண்டே அதையும் கொடுத்து கடனைப் பெற்றோம்.

— நளினி பாலசுப்பிரமணியன்.

'முகம் ஒரு மாதிரி இருக்கே... என்ன விஷயம்?'

எதுவும் பேசாமல் வெறித்துப் பார்த்தாள் ஈஸ்வரி.

பெண்களும், பிள்ளையும் அவங்கவங்க குடும்பத்தோட லீவுக்கு இங்கு வந்து கொட்டமடித்துவிட்டு போய் விட்டார்கள். வீடு 'வெறிச்' சென்று ஆகிவிட்டது. அது தான் காரணமோ?

''உனக்கு மட்டும்தான் மனசுக்கு வருத்தமா? எனக்குக் கூடத்தான். அதுவும் அந்த வாண்டு அர்ஜுன் பேசற பேச்சை நினைச்சா..... காதுலயே ஒலிச்சுண்டு இருக்கு....''

இப்போதும் ஈஸ்வரி மௌனமாய் இருந்தாள்.

''ஏன் ஈஸ்வரி.. வாயே திறக்க மாட்டேன்றே... உடம்பு சரியில்லையா என்ன?''

''உடம்புக்கு என்ன?... கல்லு குண்டாட்டம் இருக்கேன்...''

''பொய்... உனக்கு என்னமோ வருத்தம். அதனாலதான், மூஞ்சியை உப்பின ஊத்தப்பம் போல் வெச்சுண்டு இருக்கே......''

''இத்தனை வயசுக்கு மேல எம் மூஞ்சி எப்படி இருந்தா உங்களுக்கென்ன?

''அட.... அதென்ன அப்படி சொல்லிட்டே.. நான் ரிட்டயர் ஆயிட்டேன்றது நியாபகம் இருக்கோல்லியோ.. இனிமே உம் மூஞ்சியை மட்டும்தானே பார்த்துண்டு இருக்கணும்....

அவள் மனதின் இறுக்கத்தை தளர்த்த விரும்பினார் கணேசன்.

''போறும் நிறுத்துங்க... ஒரு மாசமா சொல்லிண்டு இருக்கேன். உடம்பு வலி. எத்தனை மாத்திரை போட்டுண்டாலும் சரியாகலை. சனியன் பிடிச்ச அந்த கட்டிலையும், மெத்தையும் மாத்தி தொலைங்கன்னு. காதுல வாங்கிக்கறீங்களா?....''

''சீச்சி.. அது நம்ம கல்யாணத்துக்கு சீரா வந்த கட்டில். அசல் ரோஸ்வுட்ல பண்ணது. ஆகி வந்த கட்டில். அதைப் போய் சனியன் அது இதுன்னு உளர்றியே...''

உங்களுக்கு எல்லாத்துக்கும் விளையாட்டு. நீங்கதான் மனசுல இன்னும் வாலிபன்னு நினைச்சுண்டு, வாக்கிங் ஸ்டிக் கூட எடுத்துக்காம நடந்து போறேள். ஆனா.. அந்த கட்டிலுக்கு வயசாயிடுத்துன்னு சொல்லி அழறது. ரெண்டு காலும் கொட கொடன்னு ஆடிண்டு. அந்தண்டை இந்தண்டை திரும்பறச்சே முறிஞ்சு விழுந்துடுவேன்னு அலர்றுப்பல பெரிசா கிறீச்சிடறது. சகிக்கலை. அதுவும் நடு ராத்திரி நிசப்தத்தில் அதுங் கிரீச்சுக்கு பயந்துண்டே — கேக்கறவா ஏதாவது நினைச்சுக்க போறாளேன்னு ஒரே பக்கமா அசிங்கமா ஒருக்களிச்சுண்டு படுத்துண்டு இருந்துட்டு, கார்த்தால எழுந்தா — அந்த பக்க கையையும், கால்லயும் இடுப்புலயும் எடுக்கற வலி.. பகவானுக்குதான் வெளிச்சம்....

''நல்லா இருக்கே நீ சொல்றது ... நாளுக்கு நாள் நீ காத்தடிச்ச பலூன் போல உப்பிண்டு போறே. எல்லா கட்டிலும் தான் கதறும். இதுல கால் மட்டும் தானே ஆடறது. சைடுல ஆணி அடிச்சுட்டா சரியாயிடும்....''

''போறும் ஜோக். நமக்குக் கல்யாணமாகி முப்பத்து மூணு வருஷமாகறது. அந்த காலத்துலயே, எங்கல்யாணத்துக்கு ஏகமா செலவாயிடுத்துன்னு எங்கப்பா பாதி இலவம் பஞ்சும் பாதி பருத்தி பஞ்சுமா போட்டு கட்டையாட்டம் மெத்தை தைச்சு குடுத்துட்டா. இத்தனை வருஷத்துல ஒரே ஒரு நாளாவது, மெத்தை தைக்கறவனை கூப்பிட்டு அதை பிரிச்சு அடிச்சு, புது பஞ்சு போட்டு எதுவாவது செஞ்சிருப்பீங்களா. அதுலயே படுத்து, உருண்டு மூணு பிள்ளை பெத்து, அதுங்களையும் அதுலேயே விட்டுண்டு, அதுங்க வேற அதுல ஒண்ணுக்கு போய் அது அப்படியே காஞ்சு... கறையேறி சர்வேஸ்வரா...! இப்போ துணியாட்டம் தேஞ்சு, பஞ்செல்லாம் இஷ்டமான மூலைக்கு போய் பதுங்கிண்டு, அடையாட்டம் ஆகி... என்னத்தை சொல்றது. வேலை செஞ்சுட்டு



அசந்து போயவந்து, கைகாலை தொப்புனு போட்டுண்டு 'அக்கடானு' படுத்துக்கலாம்னு கிடையாது. அப்படி தொப்புனு போட்டுண்டா அந்த கட்டில் பலகைகல இடிச்சுண்டு முதுகெலும்புதான் உடையும்....''

''இப்ப என்ன பண்ணணும்றே...''

''இத்தனை நாள் தான் குழந்தைங்க படிப்பு, அவா உத்யோகம், கல்யாணம்னு பணம் சேர்க்கணும்னீங்க. இப்போ எல்லோரும் அவாவா குடும்பம்னு நல்லா இருக்கா. ஒரு டன்லப் மெத்தை வாங்கினா என்ன குறைஞ்சிடும்?

''உங்ககிட்ட பணம் இல்லையா?... ஊரிலேந்து நெல்லு போட்டு வர பணத்துலயாவது வாங்கி தாங்களேன். இருக்க போற மீதி நாளையாவது நிம்மதியா கழிக்கிறேன். எனக்குன்னு இதுவரை என்னத்தை கேட்டிருக்கேன் உங்க கிட்ட.....''

''இத்தனை வயசுக்குமேல டன்லப் மெத்தை வாங்கினா பார்க்கறவா சிரிக்க போறாளே...''

''உங்களுக்கு வாங்க இஷ்டமில்லை. அதை நேர சொல்றதுதானே அதை விட்டுட்டு சிரிப்பா, அழுவான்னு நீங்களா எதுக்கு கதை விடறீங்க....

அந்த இடத்தில் நிற்க பிரியப்படாதவள் போல் உள்புறம் சென்றுவிட்டாள் ஈஸ்வரி.

கணேசன் யோசித்துப் பார்த்தார்.

வாஸ்தவம்தான். கட்டில் மட்டுமில்லை. மெத்தையும் ஏகமாய் பாழாகி இருந்தது. சமயத்தில் அவருக்கே வெறும் தரையில் படுத்து விடலாமா என்று கூட நினைப்பு தோன்றும். குண்டும் குழியுமாய் கெட்டி பட்ட பஞ்சு உருண்டைகள் உடம்பை உறுத்தும். பெயரளவுக்கு தான் அது மெத்தை. இந்த முறை கிராமத்தில் விளைச்சல் நன்றாய் இருக்கிறது. பென்ஷன் 'அரியர்ஸ்' வேற வந்திருக்கிறது. இந்த சமயத்தில் வாங்கவில்லை என்றால், பின்னால் ஒருவேளை ஈஸ்வரி தனக்கு முன் இறந்துவிட்டால் அவருக்குள் ஒரு குற்ற உணர்வு ஊசியாய் குத்தும். டன்லப் மெத்தையுடன் ஒரு ஸ்பிரிங் கட்டிலும் வாங்கிவிட முடிவு செய்தார்.

ஈஸ்வரியை திடீரென ஆச்சரியத்தில் ஆழ்த்த நினைத்து அவளிடம் சொல்லிக் கொள்ளாமல் கடைக்குப் போனார்.

பேரம் பேசி முடித்து, நல்ல ஸ்பிரிங் இரட்டை கட்டில் ஒன்றும், இரண்டு 4½ டன்லப் மெத்தைகளும், அவைகளின் மேல் விரிக்க பாம்பே டையிங் பெட்ஷீட் இரண்



டையும் வாங்கி, ஒரு வண்டியில் ஏற்றி அனுப்ப சொன்னார். அந்த கடைக்காரனிடமே பேசி, தன் வீட்டில் இருக்கும் அந்தக் கால நல்ல ரோஸ்வுட் கட்டிலின் மகாத்மியத்தை எடுத்து சொல்லி கூட்டி குறைத்து கடைசியில் 700 ரூபாய்க்கு அதை கொடுக்க இசைந்து, புது கட்டில் கொண்டு வரும் வண்டியிலேயே பழைய கட்டில்களை அனுப்பி விடுவதாய் சொல்லி — மொத்த விலையில் 700 ரூபாய் தள்ளி மீதிக்கு செக் கொடுத்துவிட்டு — உல்லாசமாய் விசிலடித்தபடி வீடு திரும்பினார் கணேசன்.

கட்டிலும், மெத்தைகளும் வீட்டிற்கு வரும் சமயம் ஈஸ்வரி கோவிலுக்குப் போயிருந்தாள். அவளை ஆச்சரியத்தில் ஆழ்த்த போவதை நினைத்து புன்னகைத்தபடி கணேசன் அவசரமாய் புது கட்டிலை அறையில் போட்டு, பழைய கட்டில்களை திருப்பி அனுப்பி புதிய பெட்ஷீட்களை விரித்து (மல்லிகையும், ஊதுவத்தியும் மட்டும் தான் மறந்துவிட்டிருந்தார்) ஏறக்குறைய முதலிரவு அறையைப்போல் அந்த அறையைச் சுத்தமாக்கிவிட்டு, ஈஸ்வரிக்காக காத்திருந்தார்.

அவள் உள்ளே நுழைந்ததும் நுழையாதது மாய் ஆவல் மீறிட்டவராய்—

''இதபார்..... இத்தனை நாளா அடிக்கடி சொல்லுவியே.. சாகச்சேதான் கட்டைல வெச்சு தூக்கிண்டு போவா. ஆனா இப்பவே நான் இந்த மாதிரி மெத்தைனு பேருக்கு இருக்கற கட்டைலதான் தினம் படுத்துண்டு, உடம்பு புண்ணாகி வலி எடுத்து அவஸ்தை படறேன்னு. அந்த ரூமுக்குப் போய்ப்பார். உங்கப்பா மாதிரி ஏனோ தானோன்னு வாங்கலே. பர்ஸ்ட் கிளாஸ் டன்லப் மெத்தை. ஜாயிண்ட் கியிண்ட் எதுவும் போடாதது. தலைகாணி ஒண்ணே நூத்தம்பது ரூபா ஆகறது. அது மட்டுமில்லை, கட்டிலை பார்.... ஸ்பிரிங்..... படுத்துண்டா சும்மா தாலாட்டறு மாதிரி இருக்கும். இனிமே உடம்பு வலி, அது இதுனு முனக மாட்டயே..'' என்றார்.

ஈஸ்வரிக்கு முகம்பூரா பிரகாசமாகியது. மெத்தையில் அமர்ந்து, அது அவளை அணைப்பது போல் தனக்குள் வாங்கிக் கொண்ட சுகத்தில்... வெளியே போய் விட்டு வந்த காலை கூட அலம்பாமல், அப்படியே படுத்துக் கொண்டாள். ஏகப்பட்ட சுகமாய் இருந்தது.

''பழைய மெத்தையை என்ன பண்றது?....''

''வேலைக்காரிக்குக் குடுத்துடலாமா?''

''ஐயோ... வீடு வீடாய் போய் சொல்லி சிரிப்பா சிரிப்பா. அதை மெத்தைனு நீங்க தான் மெச்சிக்கணும். பேசாம மடிச்சு (சுருட்ட முடியாது) மேல 'அட்டக்'ல போட்டு வெச்சுடலாம். யாராவது திடீர்னு நிறைய விருந்தாளிங்க வந்துட்டா எடுத்து போட்டுக்கலாம். பழைய கட்டிலை வித்துட்டீங்களா?.... நல்லகாலம்....''

ஒரு வாரமாய் சுகமான தூக்கம்தான். உடம்பு வலி எல்லாம் கூட மறைந்து போய் விட்டதாய் ஒரு பிரமை. இப்பொழுதெல்லாம் மத்தியான வேளையில் கூட கூடத்து ஊஞ்சலில் படுப்பதில்லை ஈஸ்வரி. டன்லப் மெத்தையில் தான்.

திடீரென முழிப்பு கண்டது. கால் நுனியில் ஒரு வலி தோன்றி வேகமாய். இடுப்பு, கழுத்து என்று பரவியது ஈஸ்வரிக்கு. என்னவாக இருக்கும்? இனிமேல் கட்டில் மேலோ மெத்தை மேலோ படுபோட முடியாது. விடிந்ததும் டாக்டரிடம் போவது என்று முடிவு செய்தாள்.

''ஒரு மாசமாகவே முதுகுவலி இருக்கு டாக்டர். குனியச்சே, நிமிரச்சே அதிகமாகும். வயசானதால இருக்கலாம், இல்லை... ஒரு வேளை வாய்வு பிடிப்பாய் இருக்கலாம்னு நினைச்சேன். நேத்திக்கு ரொம்ப ஜாஸ்தியாயிடுத்து. கழுத்து, காலு, இடுப்புனு எல்லாம் ஒரே வலி. ராத்திரி பூரா தூக்கமே இல்லை....''

முறையான பரிசீலனைக்குப் பின் எக்ஸ்ரே எடுத்துவிட்டு அவர்களை மறுநாள் வரச் சொன்னார் டாக்டர். தற்காலிகமாய் வலிநிவாரணியை கொடுத்தனுப்பினார்.

மறுநாள்.....

''வாங்கம்மா... உங்களுக்கு பயப்படும்படி ஒண்ணுமில்லை. இந்த வயசுல வர வியாதிதான். ஸ்பான்டிலைமன்னு சொல்லுவா. வீட்டில எதுல படுத்துக்கறீங்க..''

''ஏன்... ஸ்பிரிங் காட்ல, டன்லப் மெத்தையில தான்...'' என்றாள் பெருமையாய்.

''அதான் கேட்டேன். அந்த காலத்துல தரைல படுத்துண்டு ஒரு மரக்கட்டைய — தலைமாட்டு கட்டைன்னு சொல்லுவா — அதை தலையணையா வெச்சுண்டு தூங்கினா, தொண்ணூறு வயசுவரை ஒரு தொந்தரவும் இருந்தது இல்லை அவாளுக்கு. இப்போ ஸ்பிரிங்காட், நுரை மெத்தைனு என்னென்னமோ வந்துடுத்து. மனுஷனோட வாழ்க்கையில் வசதி பெருக பெருக, வியாதிகளும் புதுசு புதுசா வரது. உங்களுக்கு முக்யமா ஸ்பிரிங் கட்டிலும், அந்த மெத்தையும் கூடவே கூடாது....''

''டாக்டர் அந்த கட்டிலும் மெத்தையும் வாங்கி ஒருவாரம்தான் ஆச்சு. அதுக்கு முன்னெல்லாம் கட்டையாட்டம் படுக்கைல தான் படுத்துண்டு இருந்தேன். அப்பவும் உடம்புவலி இருந்ததே...''

''அதான்மா... உங்களுக்கு ஸ்பான்டிலைஸ் இருக்கு. இந்த கட்டிலும் மெத்தையும் அதை அதிகமாக்கிடுச்சு புரியுதா, இனிமே வெறும் கட்டில்ல.... அது கூட வேண்டாம் வெறும் தரைல ஒரு ஜமுக்காளத்தை, விரிச்சுண்டு படுத்துண்டு, தூங்குங்கோ. நான் சொல்ற மருந்தை சாப்டுண்டு, சொல்லித்தர பிசியோதெரபி எக்ஸர்ஸைஸ பண்ணுங்கோ... ஒரே மாசத்தில் உங்ககிட்ட சொல்லிக்காம ஓடிடும் இந்த வியாதி...''

எல்லாவற்றிற்கும் கொடுப்பினை வேண்டும் என்பார்களே... இப்போது புரிந்தது ஈஸ்வரிக்கு அதன் அர்த்தம்.

---

பாங்க் மானேஜர்: ''ஜாயிண்ட் அக்கவுண்ட் ஆரம்பிக்கணும்னு சொன்னீங்களே, யாரோடு சேர்ந்து ஆரம்பிக்க போகிறீர்கள்.''

நடிகை: ''யாராவது பணக்காரருடன் தான்.''

— ப்ரியா பாலு.




Bournvita
நல்ல வளர்ச்சி
போர்ன்விடா பயிற்சி!
அன்னையர், அறிவர்! கேட்பரீஸ் போர்ன்விடா
கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின்
ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா
குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை
பாலின் குணத்துடன் அளிக்கிறது.
தினமும் போர்ன்விடா அளிக்கப்படும்
குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும்
கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு
ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும்
அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு
எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.
அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட
இன்றைய வளர்ச்சி.
கேட்பரீஸ்
போர்ன்விடா
Cadbury's
Bournvita
MILK
Bournvita
Cadbury's
Bournvita
Rs. 2/-
LESS
MILK
Bournvita
The Tastier Food Dri

# யூனியனில் பெண்கள் அதிகம் இல்லாதது ஏன்?

எந்த ஒரு யூனியனிலும் நடைபெறும் போராட்டங்களில் அதன் அங்கத்தினர்கள் பெருமளவு பங்கு கொண்டால்தான் வெற்றி பெற முடியும். ஆனால் வங்கிகளில் அதன் வளர்ச்சியில், போராட்டத்தில் பெண்கள் பங்கு பெறுவதில்லை. பொதுக்கூட்டம், டெமான்ஸ்ட்ரேஷன் போன்றவற்றில் கலந்து கொள்ள பெண்கள் முன்வருவதில்லை என்பது பெரும்பாலான ஆண்களின் குற்றச்சாட்டு. இதற்கு என்ன காரணம்?

**மீனுகுமாரி, கனரா பாங்க்**

தினமும் யூனியன் ஆபீஸில் உட்கார்ந்து வேலை செய்தால் வீட்டை யார் பார்த்துக் கொள்வது? பெண்கள் வேலை செய்வதில்லை என்பது குற்றச்சாட்டானால், ஆண்களில் எத்தனை பேர் வேலை செய்கிறார்கள்! டெமான்ஸ்ட்ரேஷன், ஊர்வலம் இவைகளில் பெண்கள் கலந்து கொள்வதில்லை என்பது உண்மைதான். சில பேர் உண்மையான ஈடுபாட்டுடன் கலந்து கொள்ள முன்வந்தாலும் மற்றவர்கள் "போகலாம் வா" என்றால் சரி என்று போகத்தான் தோன்றும். யூனியனில் இருப்பவர்கள் எல்லா பெண்களிடமும் பேசி, எல்லோரையும் ஒன்றாகக் கலந்து கொள்ளச் சொல்லட்டும் அப்போதுதான் எல்லோருக்கும் இன்வால்வ்மெண்ட் வரும்.

இன்னொன்று, பெண்கள் கலந்து கொள்வதில்லை என்று குறைகூறும் ஆண்கள் அவரவர் வீட்டுப் பெண்கள் இந்த மாதிரி யூனியன் ஆபீஸில் உட்கார்ந்து விட்டு வந்தால் பொறுத்துக் கொள்வார்களா என்று சிந்திக்க வேண்டும்.

**வெங்கடாசலம், அஸிஸ்டண்ட் செகரெட்டரி, தமிழ்நாடு பாங்க் ஊழியர் சம்மேளனம்— செண்ட்ரல் பாங்க் ஊழியர் யூனியன்.**

'பெண்களின் மேல் சுமத்தப்படும் இந்தக் குற்றச்சாட்டை அப்படியே நான் ஏற்றுக் கொள்ள மாட்டேன். நம் சொஸைட்டியில் பெண்களை ஒருவிதக் கட்டுப்பாட்டில்தான்



* மீனுகுமாரி



* வெங்கடாசலம்

வைத்திருக்கிறோம். அவர்களை யூனியன் ஆபீஸில் வந்து ஆறு மணி வரை வேலை செய்யச் சொல்வது சாத்தியமான விஷயமில்லை.

ஊர்வலம், கோஷ்டிகள் போன்றவற்றில் பெண்கள் கலந்து கொள்வது இப்போது அதிகரித்திருக்கிறது. இது வரவேற்கத்தகுந்த மாற்றம். பெரும்பாலான ஆண்களே கலந்து கொள்ளாத போது பெண்களைக் குற்றம் காட்டுவது என்ன நியாயம்? மெதுவாக அவர்களிடம் பேசி இதில் ஈடுபடுத்த வேண்டுமே தவிர குற்றம் சாட்டுவதில் பலனில்லை.

அவர்கள் கலந்து கொள்ளாததால் அவர்களுடைய பிரச்சினைகள் கவனிக்கப்படாமல் இல்லை. பாங்கில் பணிபுரியும் பெண்களின் வசதிக்காக அங்கங்கே 'குழந்தைகள் காப்பகம்' திறப்பது பற்றி எங்கள் சம்மேளனம் யோசித்து வருகிறது. இதற்கு நிறைய ஐடியா கொடுத்து இதைச் சிறந்த முறையில் நடத்த எங்களுக்கு அவர்கள் உதவ வேண்டும் என்பதுதான் என் ஆசை''

ஆனால் இப்படி இவர்கள் சொன்னாலும் கூட யூனியனின் நடவடிக்கைகளில் அதிகம் பெண்கள் கலந்து கொள்வதில்லை என்பதில் ஆண்களுக்குக் கோபம்தான். 'நாங்கள் கோரிக்கைகளை முன் வைத்துப் போராடுகிறோம். அதனால் வருகின்ற லாபம் இவர்களுக்கும்தானே. ஆனா போராட்டம்னு வர்றப்போ மட்டும் ஐயோ நாங்க எப்படி வருவோம்னு சொல்றாங்க' என்கிறார்கள்.

வங்கி யூனியன்களிலும் மிகக் குறைந்த பெண்களே இருப்பார்கள். யூனியன் நடவடிக்கைகளில் ஆர்வமாகக் கலந்து கொண்டு, பொறுப்பான பதவிகளுக்குப் போட்டியிடுபவர்கள் இன்னும் குறைவு.

''இதற்கு நம்முடைய பெண்களை வளர்க்கும் முறை காரணமாக இருக்கலாம். சின்ன வயதில் இருந்தே அவர்களுடைய திறமையை வளர்க்கிறதில்லை. நீ இன்னொருத்தரைச் சார்ந்துதான் இருக்கணும்னு சொல்லிடறாங்க. இதனாலே பெரியவங்களா ஆனப்புறமும், கூட்டத்துல தங்களுடைய திறமைய காண்பித்து முன்னாடி நிக்கறதில்லை.

அதுவும் பேங்க் வேலைன்னா கேட்கவே வேணாம். நல்ல சம்பளம், நல்ல சூழ்நிலை. கிளார்க் பதவிய விட்டே மேலே வர்றதில்லை. அப்படி வந்தா வேலை நேரம் அதிகமாகி குழந்தைகள், குடும்பம் பாதிக்கப்படும்னு ஒதுங்கிடறாங்க. அப்புறம் இவங்க எங்கே போராட்டத்துல கலந்துக்கிறது?''

என்கிறார் யூனியனின் நடவடிக்கைகளில் சுறுசுறுப்பாக இருக்கும் ஒரு வங்கி அதிகாரி.

— கிரிஜா ராகவன்.





# மேகலை போல் மேனியில் சரியும் மென்மலர்க் கூந்தல்

பல நூற்றாண்டுகளாகப் பலனளித்து வரும் மருதோன்றி, செம்பருத்தி, கீழாநெல்லி, கரிசலாங்கண்ணி மற்றும் 25 மூலிகை மருந்துகள், தேங்காய் எண்ணெய், ஆலிவ் எண்ணெய், பசும்பால் ஆகிய இயற்கை ஊட்டச் சத்துக்கள் கொண்டது டாம்ப்கால் மூலிகைக் கூந்தல் தைலம்.

உங்கள் கூந்தல் அடர்ந்து, நீண்டு, மென்மையாகச் செழித்து வளரவும், இளநரை, பொடுகு, பேன் ஆகியன அகலவும் தொடர்ந்து டாம்ப்கால் மூலிகைக் கூந்தல் தைலம் பயன் படுத்துங்கள்.

## டாம்ப்கால்

மூலிகை கூந்தல் தைலம்

தமிழக அரசு நிறுவனத் தயாரிப்பு

# புக் ஷெல்ஃப்

**அம்மன் அறுசுவை சமையல்**

121 வகை சமையல் குறிப்புக்கள் — ஆசிரியர் ஸ்ரீமதி காமாக்ஷி — விலை ரூ. 9.00

(ஸ்ரீ கோமதி அச்சகம், 41, சூரப்ப முதலி தெரு, சென்னை — 5.)

**நல்ல நாள் பார்ப்பது எப்படி?**

வாரம், திதி, இராகு காலம், எமகண்டம், கரிநாள் போன்றவற்றை விளக்குகிறார் மயிலை பூபதிராஜன் விலை ரூ. 8.00

**அபாயம், தொடாதே!**

பட்டுக்கோட்டை பிரபாகரின் நாவல் — விலை ரூ. 15.75

(இரண்டு புத்தகங்களின் பதிப்பாளர் — இமயப் பதிப்பகம், 20, பெருமாள் தெற்கு வீதி, நாகப்பட்டினம் — 611 001.)

**ஒரு நாளிதழ் உருவாகிறது**

நாளிதழ் வரலாறு மற்றும் எப்படி உருவாகிறது என்பது பற்றி து. தமிழரசி, ஜி. எஸ். விஜயலெட்சுமி, என். ரெங்கநாதன் விளக்குகிறார்கள். விலை ரூ. 13.00

(சங்கப் பலகை வெளியீடு, 32, கக்கன் வீதி, ஷெனாய் நகர், மதுரை — 625 020.)

**தரையைத் தொடாத தருக்கள்**

'போன்சாய்' எனும் மரம் வளர்ப்பைப் பற்றிப் படங்களுடன் விளக்குபவர் சோனு விலை ரூ. 45.00

(கமல் வெளியீடு, 19, இராம் பாரதி தெரு, அம்பத்தூர், சென்னை — 53.)

**சத்துள்ள சமையல் — பலகார வகைகள்**

கபாப், அவல் கிச்சடி போன்ற சமையல் குறிப்புகள் — தொகுப்பு: தமிழ்வாணன். விலை ரூ. 6.00

**ஸ்வீட்ஸ் வகைகள்**

கேரட்பூரி, அவல் கேசரி போன்றவை — ஆசிரியர்: தமிழ்வாணன். விலை ரூ. 5.00

**விதவிதமான முட்டைச் சமையல்**

பஞ்சாப் முட்டை மசாலா, ஸ்பானிஷ் ஆம்லெட் போன்றவை — ஆசிரியர் — இராம சுப்பிரமணியன். விலை ரூ. 3.90

**சமையலறைக் குறிப்புகள்**

குக்கர், கிரைண்டர், ஃபிரிட்ஜ் பயன்படுத்தும் முறை, தரமான பொருட்கள் வாங்குவது எப்படி போன்றவை. தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 7.25

**வற்றல், வடாம், அப்பள வகைகள்**

தொகுப்பு: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு. விலை ரூ. 4.50

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர்: மணிமேகலைப் பிரசுர ஆசிரியர் குழு, 4, தணிகாசலம் செட்டி ரோடு, தி. நகர், சென்னை — 17.)

**கம்பன் பாடிய வண்ணங்கள்**

இலக்கிய மாணவர்களுக்கு ஓர் அரிய நூல் — ஆசிரியர்: புலவர் இரா. திருமுருகன். விலை ரூ. 15.00

**முல்லாவின் சிரிப்புக் கதைகள்**

பேராசிரியர்: மு. சாயபு மரைக்காயர். விலை ரூ. 6.00

**வாழ்க்கைக்கு மதத்தைப் பயன்படுத்துவது எப்படி?**

பி. சி. கணேசனின் வாழ்க்கைக்கு வழி காட்டும் நூல். விலை ரூ. 7.00

**அறிவியல் ஆயிரம் (மூன்றாம் பகுதி)**

மெழுகுவர்த்தி நீள்வட்டமாக சுவாலை விட்டு எரிவதேன்? போன்ற சுவாரஸ்யமான செய்திகள். ஆசிரியர்: என். ஸ்ரீனிவாசன். விலை ரூ. 14.00

**வழிகாட்டும் சாதனையாளர்கள்**

கிரன், சகுந்தலா நடராஜன் போன்ற சாதனையாளர்களின் வாழ்க்கை. ஆசிரியர்: க. க. இராமலிங்கம். விலை ரூ. 11.00

(ஐந்து புத்தகங்களின் பதிப்பாளர் வானதி பதிப்பகம், 13, தீனதயாளு தெரு, தி. நகர், சென்னை — 17.)

**சங்கத் தமிழ் நூல்கள்**

பத்துப் பாட்டு, எட்டுத் தொகை. ஆசிரியர்: ஆதிரையர். விலை ரூ. 23.00

(சுவாமிமலை பதிப்பகம், 2, முத்துகிருஷ்ணன் தெரு, தி. நகர், சென்னை — 17.)

**பாட்டருவி**

அழகுத் தமிழ்க் கவிதைகளின் தொகுப்பு: ஆசிரியர்: தி. நா. அறிவு ஒளி. விலை ரூ. 25.00

(தமிழ் ஆய்வரங்கம், 2/25, எட்டாவது தெரு, இலை வு 2 (என். எச். II) மறைமலை நகர் — 603 209, செங்கை மாவட்டம்.)

**ஸ்ரீ ராகவேந்த்ர விஜய:**

ஸ்ரீ ராகவேந்திர விஜயத்தின் வடமொழி மூலம் தமிழில். விலை ரூ. 6.00

(ஸ்ரீ ராகவேந்திர நிலையம், 23, கங்கையம்மன் கோவில் லேன், இராயப்பேட்டை, சென்னை — 14.)

---

# பழக்கமாகிவிட்ட இந்த கஷ்டம்!



"ஒரு ஆபீஸரின் மனைவியாக இருந்து விட்டு, இன்றைக்குக் கடைநிலை ஊழியரா வேலை பார்க்கறதுக்கு நான் வெட்கப்படவே யில்லை. அவர் திடீர்னு இறந்துட்டப்ப என் நாலு குழந்தைகளையும் இழுத்துக்கிட்டு இன்னொருத்தர் வீட்டுக்குச் சாப்பாட்டுக்குப் போய் நிக்கறதுதான் கேவலம். உழைச்சு சம்பாதிக்கறதுல கேவலமில்லே..."

என்கிறார் பேங்க் ஆஃப் மதுரையில் ஸப்—ஸ்டாப் எனப்படும் கடைநிலை ஊழியராக வேலை பார்க்கும் திருமதி ஜெயலட்சுமி. இவருடைய கணவரைப் போலவே திடீரென்று ஹார்ட் அட்டாக்கில் இறந்த மற்றொரு கிளார்க்கின் மனைவி சாவித்ரியும் இதையேதான் கூறினார்.

நாள் முழுவதும் கவுண்டர் கவுண்டராக நடக்கவும், காப்பி, டீ வாங்கி வரவும், பணப் பெட்டிகளைத் தூக்கவும் கூடத் தயங்குவதில்லை இவர்கள்.

"வீட்டை விட்டு வெளியே வராமலேயே தான் இருந்தேன். கறிகாய் கூட அவர்தான் வாங்கி வருவார். ஒன்றுமே தெரியாம இருந்த நான் இன்றைக்கு ஊர் முழுவதும் செல்ல வேண்டிய வேலைதான். படிக்காததினால்தான் இந்தக் கஷ்டம். இல்லையென்றால் நானும் ஒரு கிளார்க்காகச் சேர்ந்திருப்பேன். பரவாயில்லை. இந்த அளவிற்காவது



நானும், என் குழந்தைகளும் தன்மானத்தோடு வாழ முடிகிறதே. அதுவே போதும் எனக்கு!" என்கிறார் திருமதி ஜெயலட்சுமி.

பேட்டி: பவித்ரா



# இதோ ஒரு வனிதையர் வங்கி!

சென்னை நகரிலேயே, பாண்டி பஜாரில் 25 வருடங்களாக இயங்கி வரும் இந்தப் 'பெண்கள் வங்கி'யைப் போல வேறெங்கும் கிடையாது என்கிறார்கள். இது ஒரு சிண்டிகேட் பாங்க்கின் ஒரு கிளை. 1963-ல் திருமதி பிரேமா ராவ் என்பவரை உயர் அதிகாரியாகக் கொண்டு துவங்கப்பட்ட இந்த வங்கியில் பணிபுரியும் 45 பேரில் 38 பேர் பெண்மணிகள். 'கோ-டவுனி'ல் சென்று மேற்பார்வையிடுதல், வழக்கு மன்றங்கள் சம்பந்தப்பட்ட வேலைகளைக் கவனித்தல் போன்றவற்றுக்காக இரண்டு ஆண் அதிகாரிகளும், ஆயுதம் தாங்கிய கண்காணிப்பாளர் ஒருவரும், நான்கு பியூன்களும் தவிர மற்றவரெல்லாம் இங்கு மங்கையரே.

மானேஜர் திருமதி பரிமளா ஜகன்னாதன் பெருமிதத்துடன் கூறுகிறார். "பொதுவாகவே பெண்களுக்கு வேலையில் கவனம், குறித்த வேலையைக் குறித்த நேரத்தில் முடித்துவிடும் பாங்கு இவை அதிகம். மேலும் இவர்களுடைய முதல் உலகம் இவர்களது குடும்பமே. எனவே சரியானபடி அலுவலக வேலைகளை முடித்துவிட்டு இல்லத்துக்குக் கிளம்புவதில் இவர்கள் குறியாக இருப்பதால் பணிகள் யாவும் அந்தந்தக் கால வரையறைக்குள் கச்சிதமாக முடிக்கப்பட்டு விடுகின்றன. தேநீர் இடைவேளைகள் தேராக இழுப்பதில்லை. சிகரெட் செருகல்களுக்கோ சற்றும் இடமே இல்லை.

"பெண்களுக்கே இயற்கையாக இருக்கும் உள்ளுணர்வு எச்சரிக்கைகளும், நாசூக்காகக் காரியத்தை முடிக்கும் திறனும் பல சந்தர்ப்பங்களில் உதவிக்கு வந்திருப்பதை நினைவு கூறுகிறார், சப்-மானேஜர் திருமதி ஹேமலதா சங்கர். தன் மகனின் கல்விச் செலவுக்காக வாங்கிய பெரிய கடன் தொகையைத் திருப்பித் தராமல் தட்டிக் கழித்துக் கொண்டே வந்த ஓர் அதிகாரியின் அலுவலக நண்பர் எதேச்சையாக அவரே 'தானாக ராஜினாமா' செய்யப் போகிறார் என்ற தகவலைத்தர, உள்மனது உடனே அபாய அறிவிப்புகள் அலற, நேரில் சென்று அந்த அதிகாரி ராஜினாமா செய்யும்போது கூடவே இருந்து, பக்குவமாகப் பேசி, அவர் அலுவலகத்திலிருந்து கிடைத்த பிராவிடெண்ட் தொகையிலே கடனையும் அடைக்கச் செய்து, பின் மீதியிருந்த கணிசமான தொகையைத் தங்கள் வங்கியிலே 'டெபாசிட்' செய்ய வைத்த அன்றைய அனுபவம் இன்றும் புன்னகையை மலர வைக்கிறது.

வேலை பார்ப்பவர்கள் யாவருமே பெண்களாக இருப்பதால் கூச்சமின்றிச் சந்தேகங்களைக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம் என்கிறார் இவ்வங்கியின் வாடிக்கையாளர்களில் ஒருவரான திருமதி.ச.ரமணம்மா. "வங்கியின் செயல்முறை பற்றி 'அ'னா 'ஆ'வன்னா கூட அறிந்திராத நான் இப்போது 'செல்லான்'களை நிரப்புவது, டிமாண்ட் டிராஃப்ட் மூலமாகப் பணத்தை இன்னோரிடத்திற்கு அனுப்புவது, செக்கைப் பூர்த்தி செய்து, டோக்கனைப் பெற்றுக் கொண்டு பணத்தைப் பெற்றுக் கொள்வது, 'செக்'கின் மாற்றுப் புறத்தில் எந்தெந்த இடங்களுக்குப் பணத்தைக் கொடுக்கிறோம் அல்லது எந்தெந்த இடங்களிலிருந்து பணத்தைப் பெற்றுக் கொள்கிறோம் என்று குறிப்பது போன்ற விஷயங்களில் இப்போது 'எக்ஸ்பர்ட்' ஆக்கும்" என்று அடித்துச் சொல்கிறார்.

— நிர்மலா

# விளக்கேற்றி வைப்போம்!

**கா**ர்த்திகை தீபம் வருகிறது. ஆனால் திரு விளக்கின் பெருமை நம்மில் பலருக்குத் தெரியாது. பகவானுக்கு எண்ணெயிட்டு விளக்கேற்றினால் விசேஷம். அதுதான் நமக்குத் தெரியும். நமக்குத் தெரியாத, சாஸ்திர ரீதியாக விளக்கம் அநேகம் உண்டு.

தீபத்தில் லட்சுமி நித்திய வாசம் செய்கிறாள் என்கிறது பாகதேய புராணம்.

**இந்த விளக்கை எப்படியெல்லாம் ஏற்றலாம், எப்படியெல்லாம் ஏற்றக் கூடாது? எந்த எண்ணெய் விட்டால் என்னென்ன பலன்? எந்தத் திக்கில் வைக்க வேண்டும்?**

கார்த்திகை முழுவதும் மாலையில் வாசலில் விளக்கேற்றி வைத்தால் லக்ஷ்மீ கடாட்சம்! மார்கழியில் அதிகாலை வேளையில் விளக்கேற்றி வைத்தால் லக்ஷ்மி கடாட்சம் பெருகும்.





பெரிய பூசணிக்காய் உடைக்க வேண்டும் என்றால் பெண்கள் செய்யக் கூடாது.

### விளக்கின் சிறப்புகள்:

ஜைனர்கள் பலிதீபம் என்று பெயரிட்டு ஏற்றுவார்கள். குஜராத்தி மராட்டியர்கள் வீட்டில் எப்போதும் விளக்கு எரிய வேண்டும். இல்லாவிட்டால் வறுமை வலுக்கும் என்ற கொள்கை கொண்டவர்கள். இப்போதெல்லாம் இதையொட்டி, எண்ணெய் விலை ஏற்றத்தினால் பகவான் சன்னதியில் சின்னதொரு 'பல்ப்' எரியவிட்டிருக்கிறார்கள் சிலர்.

### விளக்கு ஏற்றும் முன் என்ன செய்ய வேண்டும்?

முதலில் கையலம்பிக் கொண்டு, புதுத் திரியிட்டு, குங்குமம் (ஐந்து முகம் அல்லது ஜோதியானால் நான்கு புறம்) இட்டு பூ சாத்தி, திருவிளக்கு ஸ்லோகம் சொல்லிக் கொண்டே ஏற்ற வேண்டும். "முத்துப் போல் எரிய வேண்டும்." பார்ப்பதற்கு அழகாக இருப்பது ஒருபுறம், எண்ணெய் நெடுநேரம் நின்று எரியும் என்பது ஒருபுறம்.

கார்த்திகை மாதம் மூன்று நாட்கள் அதிகமான விளக்குகளை ஏற்றுவோம். பரணி நட்சத்திரம் பரணி தீபம், கார்த்திகை தீபம், (அண்ணாமலை தீபம்) மிகவும் விசேஷமானது.

எண்ணெய் என்ன விலை விற்றாலும் நம் பெண்கள் விளக்கேற்றும் போது மன மகிழ்ச்சியோடு ஏற்றவே செய்கிறார்கள். விளக்கை ஏற்றும் போதே மனத்தில் நம்மையறியாத குதூகலமும் உண்டாகிறது என்பது நமக்குப் புரிகிறது. இனமும் சாதாரணமாக விளக்கேற்றும் போது போடும் திரிகள் கூட பல விஷயங்களைச் சொல்கிறது நமக்கு. தேவையான பிரார்த்தனைகளுக்கேற்ப திரி போடலாம்.

தாமரைத் தண்டில் திரி போட்டால் மூன்று ஜென்ம பாபம் போகும்.

வாழைத் தண்டு நறுக்கும் போது வரும் நூலைத் திரியாக்கிக் காய வைத்துப் போட்டால் குல தெய்வ குற்றம், சாபம் போகும்.

வெள் எருக்கின் பட்டையில் திரி செய்தால் துர் தேவதை விலகும், விநாயகரின் அருள் கிட்டும்.

புது மஞ்சள் சேலைத் துண்டில் திரி போட்டால் தாம்பத்ய தகராறு நீங்கும்.

புது வெள்ளை வஸ்திரத்தில் பன்னீரை விட்டு உலர விட்டுப் போடலாம். எல்லாப் பலனும் கொடுக்கும். சில வீடுகளில் திரி இல்லை என்றால் வெள்ளைத் துணி, கட்டிய வேஷ்டி இவற்றில் திரி திரிப்பார்கள். இது விளக்குக்கு ஆசாரக் குறைவு. நல்ல பஞ்சில் திரி திரிக்கலாம். பெண்கள், மைசூர், பெங்களூர் ஆகிய ஊர்களில் இந்தத் திரிகளைக் கூட நாள் பார்த்து, பகவத் ஸ்மரணை செய்து கொண்டேதான் திரிக்கிறார்கள்.

### திரி போட்டு விட்டோம். ஏற்றும் முன் என்னென்ன திசைகள் ஏற்றவை?

கிழக்கு முகமாக ஏற்றினால் துன்பங்கள் நீங்கி, ஜனவசீகரம் உண்டாகும். மேற்கு கிரகதோஷம், பங்காளிப் பகை போகும். வடக்குப்புறம் ஏற்றினால் திரண்ட செல்வம், கல்வித் தடை, சுபகாரியத் தடை போகும். தெற்கு முகமாக ஏற்றுவது மிகவும் பாபம். எமனுக்கு ப்ரீதி. துஷ்ட தேவதை ஓடிவரும்.

### என்ன எண்ணெய்?

விஷ்ணுவுக்கு, மகாலட்சுமிக்கு நெய் விளக்கு மிகவும் ப்ரீதி. (நெய் என்ன மலிவா என்கிறீர்கள். (விலை என்பது வேறு விஷயம்! விசேஷங்களை முதலில் பார்க்கலாம்.) இதை உத்தேசித்துத்தான் ரங்கநாதர் கோவிலில் நெய் தீபம், நெய் தீவட்டிதான் இன்றும் ஏற்றப்படுகிறது.

வேப்பெண்ணெய், நெய், இலுப்பெண்ணெய் மூன்றும் கலந்து ஏற்றினால் ஐஸ்வர்யம் உண்டாகும். குல தெய்வ ப்ரீதி.

நெய், விளக்கெண்ணெய், வேப்பெண்ணெய், இலுப்பெண்ணெய், தேங்காயெண்ணெய் இந்த ஐந்து எண்ணெய் வகைகளையும் கலந்து ஒரு மண்டலம் வடக்கு முகமாக ஏற்றி ஸ்ரீதேவியைப் பூஜித்தால் மந்திர சக்தி உண்டாகும். (ஆதாரம்: தேவி புராணம்).

விளக்கெண்ணெய் விட்டு ஏற்றினால் தேவதா வசியம், புகழ், தாம்பத்திய சுகம் உண்டாகும். ஆதி காலத்தில் இந்த எண்ணெயைத்தான் விளக்கேற்ற உபயோகித்தார்கள்.

நல்லெண்ணெய் சகல கஷ்டங்களையும் நீக்கும். நவக்ரஹ ப்ரீதி. நம்மை ஆட்டு ஆட்டென்று ஆட்டும் சனீஸ்வரன் குளிர்ந்து பொங்கு சனியாகி விடுவான்.

சில வீடுகளில் மற்ற எண்ணெய்களை விட மலிவு என்று கடலை எண்ணெய் விடுகிறார்கள். கடுகு எண்ணெயை வடக்கில் சில வீடுகளில் விடுகிறார்கள். இரண்டும் தவறு.

பாமாயில் வந்திருக்கிறது. 'விளக்குக்கு விடலாமே' என்று நான்கு மணி நேரம் க்யூவில் நின்று வாங்கிப் பெருமாள் விளக்கேற்றுகிறோம். இதுவும் சரியில்லை. பாபத்தைச் சம்பாதிப்பதுதான்.

இந்த எண்ணெய்களால் மூதேவி நித்ய வாசம் செய்து, கடன், துக்கம் சம்பவிக்கும் என்பது சாஸ்திரம் மட்டும் அல்ல பல அனுபவ உண்மையும் கூட.

**பலன்கள் :**

ஒவ்வொரு குடும்பத் தலைவியும் தன் குடும்பம் வம்சம் இரண்டும் மேன்மை, சுகம், புகழ், லட்சுமி கடாட்சம் இவை பெருகி நிற்கவே விரும்புவாள். தீப விளக்கு வெள்ளியால்தான் இருக்க வேண்டும் என்று இல்லை. மண் அகல் ரொம்பவும் விசேஷம். மகாலட்சுமி யாருக்கும் இல்லையென்ற நிலைவு ஏற்படக் கூடாது என்பதற்கே இதையும் மனதார ஏற்கிறாள்.

வெள்ளி, ஸ்வர்ணம், பஞ்சலோகம், பித்தளை இவை பூஜை செய்ய ஏற்ற விளக்குகள்.

பெரும்பாலான வீடுகளில் இப்போது எவர்சில்வர்' விளக்கு ஏற்றுகிறார்கள். நமக்கு வசதி இல்லை என்றோ, திருட்டு பயம் என்றோ நினைத்து இதை ஏற்றுவதை விட பித்தளை மிகவும் விசேஷம்.

ஒரு முகம் ஏற்றினால் மத்திம பலன், இரு முகம் ஏற்றினால் குடும்ப ஒற்றுமை, மும்முகம் ஏற்றினால் புத்திரசுகம், கல்வி கேள்விகளில் விருத்தி, நான்கு முகம் பசு, பால், பூமி இவைகளையும், ஐந்து முகம் ஏற்றினால் சர்வ பீடை நிவர்த்தி, ஐஸ்வர்ய லட்சுமி கடாட்சம் பெருகும் என்று சுகர் உபதேசிக்கிறார்.

விளக்கு பூஜை வழிபாடு சமயம் ஐந்து முகம் ஏற்றுமுன் திருவிளக்கைக் கீழே வைக்கக் கூடாது.

ஒரு தட்டில் (மரம் விசேஷம்) பச்சரிசி, மஞ்சள் கிழங்கு ஆறு, பாக்கு 9, வெற்றிலை 3, ஒரு பிடி அவல் இவைகளைப் பரப்பி அந்தத் தட்டில் விளக்கை ஏற்றி வழிபட்டால் சர்வ தோஷம் நீங்கும் என்று பாகவத புராணம் சொல்கிறது.

வாயினால் ஊதி விளக்கை அணைப்பது கூடாது. தீபதானம் செய்தால் அத்தனை விசேஷம். அதுவும் கார்த்திகை ஏகாதசியில் தீபதானம் செய்வதும் விசேஷம். தீபதானம் செய்தவர்களுக்குக் கண் பார்வை கெடாது என்று சாஸ்திரம் சொல்கிறது.

திருக்கார்த்திகை தீபத்திற்கு நைவேத்தியம் கூடச் செலவு அதிகமில்லை. எளியவர்களாலும் முடியும் என்ற எண்ணத்திலேயே பொரி உருண்டையையும், அவல் உருண்டையையும் ஏற்கிறாள் தீபலட்சுமி. என்றால் தீபலட்சுமியின் தியாகம் நமக்குப் புரிய வேண்டாமா?

கார்த்திகை தீபங்கள் வரிசையாக ஏற்றி, எல்லா வீட்டிலும் துன்பம் நீங்க, திருவிளக்கு மாதாவை வழிபட்டு லட்சுமி கடாட்சம் பெறலாமே!

— சரோஜா ரங்கராஜன்

# கிஃப்ட் செக்கா? வேண்டாம்!


சென்ற மாதம் எனது நெருங்கிய உறவினருக்குத் திருமணம் நடந்தது. ரூ.501/—க்கு 'கிஃப்ட் செக்' எடுத்து வரும்படி என் மகனை கே.கே.நகர் ஐ.ஓ.பி.க்கு அனுப்பினேன். ரூ.501/—க்கு செக் மட்டும் கொடுத்து அனுப்பினார்கள். ஆனால் அதைப் போட 'கவர்' கொடுக்கவில்லை. என் மகனை கேட்டதற்கு, 'கிஃப்ட் செக்' எழுதிக் கொடுத்த பெண் தன்னுடன் வேலை செய்பவரிடம் கவரை கேட்டாள். அவரோ, 'கவர் இல்லையா? ஆர்டர் பண்ணனும்' என்று மிகவும் கேஷுவலாக சொல்லிவிட்டார் என்றான்.

சரி கிஃப்ட் செக்குக்கு உண்டான பிரத்யேக கவர்தான் இல்லை. அவசரத்திற்கு ஐ.ஓ.பி. கவரையாவது ஒன்றை கொடுத்திருந்தால் நான் அவசரமாக செல்ல வேண்டிய திருமணத்திற்குத் தாமதமாக செல்லாமல் நேரத்திற்கு சென்றிருப்பேன். பிறகு, கிஃப்ட் செக் கவரைத் தேடி அலைந்தேன் பாருங்கள் "போதும்டா அப்பா. கிஃப்ட் செக்" என்று ஆகிவிட்டது.

— ராஜம் ராமசாமி.



# பல் டாக்டர்களுக்கும் கிராம்புத் தைலத்தின்மீது முழு நம்பிக்கை.



ஆயுர்வேதமாயினும் சரி, ஆங்கில மருத்துவமாயினும் சரி, அனைவரும் இதன் குணத்தைப் புகழ்கிறார்கள். பல் டாக்டர் மருத்துவமனையிலும் இது முக்கிய பங்கு வகிக்கிறது.

ஒரு காலத்தில், பல்லில் சிறிது வலி ஏற்படினும் உடனே நம் நினைவுக்கு வந்தது கிராம்புத் தைலம். சரியான விகிதத்தில் இப்போது கிராம்புத் தைலத்தை நீங்கள் பெறுகிறீர்கள் ப்ராமிஸ் டூத்பேஸ்ட்டில். அதனால்தான் ப்ராமிஸ் டூத்-பேஸ்ட் மூலம் நீங்கள் பிரஷ் செய்கையில், இத்தைலம் உங்கள் பற்களின் இடுக்குகளில் புகுந்து, பற்களின் வேர்வரை சென்று பலவீனப்படுத்தும் கிருமிகளை அழிக்கிறது. கிருமிகளிலிருந்து விடுதலை பெற்று உங்கள் பற்கள் எப்போதும் ஆரோக்கியமாயும், உறுதியாயும் பளபளப்பாயும் விளங்குகின்றன.

ப்ராமிஸின் ஒப்பற்ற ஃபார்முலாவின் காரணத்தால் இத்தைலம் வாயில் துர் நாற்றம் ஏற்படுத்தும் கிருமிகளை உடனடியாக அழிக்கிறது. உங்கள் சுவாசத்தில் புத்துணர்ச்சி வழங்குகிறது.

உங்கள் பற்களை ஆரோக்கியமாகவும், பளபளப்பாகவும் திகழச் செய்திடுங்கள். வாயில் ஒப்பற்ற புத்துணர்ச்சி பெற்றிடுங்கள். ப்ராமிஸ் டூத்பேஸ்ட் உபயோகியுங்கள்.




**Promise**

கிராம்புத் தைலத்தின் அருமையான படைப்பு—ப்ராமிஸ் டூத்பேஸ்ட்

பல்ஸாரா—
டூத்பேஸ்ட் நிபுணர்கள்

CHAITRA - B BLS 851 TAM

# பொன் முட்டை வாத்து

**ம**ரகதவல்லிக்குத் திடீரென்று விழிப்பு வந்தது.

காரணம், அந்த பெட்ரூமில் அணைக்கப் படாத டியூப்லைட். அதன் ஃப்ளோரசண்ட் வெளிச்சம் அவளுடைய மெல்லிய இமைத் திரைகள் வழியே பிரவேசித்து ஏற்படுத்திய சலனம்.

கண்களைக் கசக்கினாள். பார்த்தாள். கட்டி லின் இன்னொரு விளிம்பில் சுந்தரராஜன் கிடந்தான். கால்களை வீ போல் அகலமாய் விரித்து, இரையைக் கண்ட மீன் போல் வாயைப் பிளந்து, பொண்டாட்டியைப் போல அவன் மார்போடு அணைத்துக் கொண்டிருந்த பிராந்தி பாட்டில், அவன் வாழ்க்கையைப் போல் காலியாக இருந்தது.

ச்சீ, மனுஷனா இது!

'ஏய், என்னடி முணுமுணுக்கிறே!' என்று எழுந்துவிடப் போகிறது!

எழுந்தாள். கட்டிலுக்குக் கீழே கால் களைப் போட்டு இறங்கினாள். சுற்றி வந்து அவன் கால்களை நெருக்கினாள். சாலையில் மிதித்து வந்த சேற்றைக் கூடக் கழுவாமல்... விளக்கைக் கூட நிறுத்தாமல்...


இவளோடு படுத்து, இவனுடைய வியர் வையைப் புடைவைத் தலைப்பால் ஒற்றி ஒற்றி எடுத்து, உதிர்ந்து போன மல்லிகை களை மறுநாள் விடியலில் வெட்கத்தோடு விலக்கி...

ஆச்சரியம்... இவனுக்கு ஒரு குழந்தை யைப் பெற்றுப் போட்டது ஒரு விபத்தான ஆச்சரியம்.

விளக்கை அணைத்துவிட்டு ஹாலுக்கு வந்தாள்.

டீ. வி. ஸ்டாண்டை ஒட்டி மாளவிகா சுருண்டு படுத்திருந்தது. சொப்பனத்தில் ஏதோ ஒரு சந்தோஷம் — சிரித்துக் கொண் டிருந்தது.

'என்னடி, சிரிக்கிறே நாயே! அம்மாவோட சேர்ந்துக்கிட்டு ஆட்டம்போட றியா?' போதையில் பெற்ற மகளென்று



உறைக்கவா போகிறது — என்ன அடி அடித்து விட்டான்?

மாளவிகாவை அதன் படுக்கைக்கு இழுத்து விட்டாள். கன்னத்தை வருடியதும், சிணுங்கிப் புரண்டு அவன்மேல் கையைப் போட்டுக் கொண்டது.

நோ டியர், இருட்டில் கூட ஆதரவு தேடாதே.

மரகதவல்லி அந்தக் கையை விலக்கிக் கீழே வைத்தாள்.

வெற்றுத் தரையில் கைகளை முட்டுக் கொடுத்துப் படுத்தாள்.

டிக்... டிக்... டிக்... டிக்... டிக்... டிக்... பகல் நேரத்தில் கடிகாரம் இத்தனை இரைச்சலாகவா சத்தம் போடுகிறது. இல்லையே... அப்புறம் இப்போது மட்டும் ஏன்?

அந்தப் பெண்டுலம் லெஃப்ட், ரைட், லெஃப்ட், ரைட் போட்டுக் கொஞ்சம் கொஞ்சமாக வளர்ந்து விசுவரூபம் எடுத்து டொங், டொங் என்று அவள் மண்டையில் அடித்தது. கடிகார முட்கள் கேலி பேசிக் கொண்டே பாலே சுழற்சி போல் வேகமாகச் சுழன்று, நேரமாச்சு, எழுந்திரு... நேரமாச்சு, எழுந்திரு...

தூங்க முடியவில்லை. எழுந்து விட்டாள்.

பாத்ரூமில் நுழைந்து பேஸ்ட்டை பிதுக்கிக் கொண்டதும், அந்த டிக் டிக் பதுங்கி விட்டது.

மரகதவல்லியின் தொடர் தினம் ஆரம்பித்து விட்டது — என்றுதான் நினைத்தாள், அன்றைக்கு எதிர்கொள்ளப் போகும் சம்பவங்களைப் பற்றி ஆருடம் இல்லாததால்...

**அ**ம்மா... அம்மா.''

லெட்ரீனிலிருந்து மாளவிகாவின் குரல் அலறி வந்தது.

''என்னடீ?'' மரகதவல்லி பதிலுக்கு அலறினாள். சனியன் பிடித்த பால் எத்தனை நேரமாய்ப் பொங்காமல் அடம் பிடிக்கிறது!

''கதவைத் திறக்க முடியலேம்மா! வாம்மா...'' மாளவிகா பயத்தில் கிரீச்சிட்டது.

மரகதவல்லி கிட்சனிலிருந்து புடைவை தடுக்க விரைந்தாள். லெட்ரீன் கதவை எட்டி உதைத்ததும், கதவு அதன் ஈரப் பிடியிலிருந்து விலகித் திறந்தது. அழத் தயாராய் நின்றிருந்த மாளவிகா பதறிக் கொண்டு வெளியே வந்தாள்.

''எத்தனை தடவை சொல்லியிருக்கேன், கதவை அழுத்திச் சாத்திக்காதேன்னு?'' என்று இரையுமுன், ப்ஸ்ஸ்ஸ் என்று கிட்சனிலிருந்து எச்சரிக்கை.

பால் பொங்கி விட்டது! பொங்கி காஸ்ஸ்டவ்வின் உணர்ச்சி மிகுந்த பர்னர் துளைகளை மூடி...

பட்டென்று ஆத்திரத்துடன் இறக்கி வைத்த போது, பால் தளும்பி இன்னும் சிதறியது.

நோ, பதறாதே, ப்ளீஸ் பதறாதே.

நெற்றியின் இருபுறமும் விரல்களால் அழுத்திக் கொண்டு கொஞ்ச நேரம் சுவரில் சாய்ந்து நின்றாள்.

ஹால் கடிகாரம் 7.40 என்று கைகளைச் சேர்த்திருந்தது.

சுந்தரராஜன் கட்டிலில் ஒரு கொட்டாவியை விடுதலை செய்து புரண்டு படுத்தான்.

மாளவிகா தன் டவலை எடுத்துக் கொண்டாள். பாத்ரூமில் நுழைந்தாள். சோப் பெட்டியில் சுத்தமாய் ஒன்றும் இல்லை. புது சோப்பை அம்மாவிடம் கேட்டு வாங்க யோசனை செய்தாள், ஒரு நாள் சோப் இல்லாமல் குளித்தால் என்ன? பாத்ரூம் கதவை எச்சரிக்கையோடு சாத்திக் கொண்டாள்.

கிட்சனில் மரகதவல்லி ஒரு ரோபோவைப் போல் செயல்பட்டுக் கொண்டிருந்தாள்.



சுபா

குக்கரைத் திறந்து, சாம்பாரை இறக்கி, பெல் அடித்துக் கூப்பிட்ட நியூஸ் பேப்பர் ஆளிடம் 'நாளைக்கு வாயேன்பா' சொல்லி, டிபன் பாக்ஸ்களைக் கழுவி, அறுந்துப் போட்ட பால் கவர்களுக்கு முத்தியிலிருந்து தலையை நீட்டிய கரப்பானை விரட்டி, அவசரத்தில் திறக்க முடியாததால் ஆத்திரத்தோடு பெருங்காயத்தையே நிராகரித்து, ஒரு பக்கம் மாளவிகாவின் டிபன் டப்பா; இன்னொரு புறம் தன் டிபன் டப்பா இரண்டிலும் அவசர தயிர் சாதத்தைத் திணித்து, தண்ணி லாரி வந்திருச்சு என்று காலனியில் கிளம்பிய அலறலைக் கேட்டதும் காலிப் பாத்திரங்களைத் தூக்கிக் கொண்டு இரண்டு மாடிகளையும், சூப்பர்சானிக் வேகத்தில் இறங்கி, கூட்டத்தில் இடிபட்டு, விரல் நசுங்கி...

இன்னும் சில கமாக்களுக்கு அப்புறம் அவள் நிமிர்ந்த போது, ஹால் கடிகாரம் இரக்கமேயில்லாமல் மணி 8.10 என்று கை விரித்திருந்தது.

பாய்ந்து அறைக்குள் நுழைந்தாள். மாளவிகா தானே கூந்தலைப் பின்னிக் கொள்ள முயற்சி செய்து, சிக்கலாய் நின்றிருந்தது. அப்படியே அதை இழுத்து அர்ஜன்ட்டாய் மூன்று கால் போட்டு விட்டாள். முகத்தின் பவுடர் திற்றலைச் சரி செய்த போது, சுந்தரராஜன் சோம்பல் நெறித்துவிட்டு எழுந்தான். விலுக்கென்று கட்டிலில் இருந்து குதித்து இறங்கினான். பிரஷ்ஷை எடுத்துக் கொண்டு பாத்ரூமுக்குப் பாய்ந்தான்.

அரைத்து விட்ட கூட்டுகளுக்கு தேவையான தேங்காய் இல்லாது பற்றாக் குறையால் கூட்டு நீர்த்து போய், நீர் பிரிந்து கூட்டின் மேல் தெளிந்து நிற்கிறதா? (தவிக்க வேண்டாம். கணவரின் கேலி பேச்சுக்களை சகித்துக் கொள்ள வேண்டுமேயென்று) தெளிந்த இந்த நீரை எடுத்து ஒரு பேசினில் விடுங்கள். இரண்டு புது பிரட் ஸ்லைசுகளை (ஓரம் நீக்கி) இந்த நீரில் 10 நிமிடம் ஊற வைத்து மசித்து கூட்டில் கலந்து விடுங்கள்.

அரைத்து விட்ட சாம்பார் நீர்த்து போனாலும் இது போல் செய்யலாம். குறைந்த தேங்காய் இருக்கும் நேரத்தில் இந்த பிரட் ஸ்லைசு டிரீட்மெண்ட்'' கூட்டுகளை கெட்டியாக்கி, சுவையூட்டும்.

— ஜெயலட்சுமி.

மரகதவல்லி கிட்சனுக்கு ஓடினாள்.

தயார் செய்து வைத்த இட்லிகளையும் சட்னியையும் டைனிங் டேபிளில் அவசரமாக எடுத்து வைத்தாள். ஒரு டம்ளரில் காப்பியைக் கலந்து மூடி வைத்தாள். மறுபடி தன்னறைக்கு ஓடினாள். இடுப்பில் இருந்த புடைவையைக் களைந்து, அதாலேயே முகத்தை அழுந்தத் துடைத்து, கழுத்து வியர்வையைத் தேய்த்து விட்டுக் கொண்டு, ஆபீஸுக்கான புடைவையை எடுத்து விசிறி சுற்றிக் கொண்ட போது, டைனிங் டேபிளிலிருந்து சுந்தரராஜனின் குரல் வந்தது.

''இன்னிக்கும் இட்லிதானா?''

''ஆமாங்க..., சட்னி வச்சிருக்கேன்...''

''வச்சிருக்கேனா! ஏன் மகாராணியால எடுத்துப் பரிமாற முடியாதா?''

''ப்ளீஸ்ங்க. எட்டரை மணி பஸ்ஸை விட்டா ரொம்ப லேட்டாயிடுங்க. கொஞ்சம் அட்ஜஸ்ட் பண்ணிக்கங்க...'' திரும்பிப்பார்க்காமல் சொல்லிக் கொண்டே மாளவிகாவின் யூனிஃபார்ம் கொக்கிகளை மாட்டினாள்.

ஹாலுக்கு வந்தாள்.

''இன்னிக்கு ரொம்ப நேரமாயிடுச்சுங்க... மாளவிகாவை ஸ்கூல்ல கொண்டு விட்டுடறீங்களா?'' நாற்காலிக்கடியிலிருந்து எடுத்து செருப்புகளைத் தட்டினாள்.

சுந்தரராஜன் மேஜையில் விரலால் தட்டினான்.

''இங்கே கவனி... முதல்ல புருஷனுக்கு டிபன் கொடுத்திட்டு அப்புறம் ஆபீஸுக்குப் போ...''

மரகதவல்லி தன் வாட்சைத் திருப்பிக் காட்டினாள்.

''எட்டு இருபத்தெட்டுங்க. ரெண்டு நிமிஷத்துக்குள்ள எக்ஸ்பிரஸைப் பிடிக்கணும்...'' கதவைத் திறந்தாள்.

''நில்லுடி.''

படீரென்று கதவை அறைந்து மூடிவிட்டான். காலனி முழுக்க வேடிக்கை பார்க்க ஆரம்பித்து விடும்.

இன்றைய எக்ஸ்பிரஸைச் சத்தியமாகப் பிடிக்க முடியாது என்ற கசப்பு நெஞ்சில் ஓடியது.


சுந்தரராஜன் எழுந்திருந்தான்.

''உன் பொண்ணை, ஸ்கூல்ல கொண்டு போய் விட நான் என்ன ரிக்ஷாக்காரன்னு நெனைச்சியா? உன் புருஷன்டி...''

''உங்களுக்கு ஆபீஸ் அவசரம் இல்லேயேன்னுதான்...''

நான்கே எட்டில் அவளை நெருங்கிக் கன்னத்தில் பளீரென்று அடித்தான்.

''பொட்டைக் கழுதைக்கு இத்தனை திமிர் கூடாதுடி... நாலு மாசமா எனக்குச் சம்பளம் இல்லேன்னதும், உனக்குக் கொழுப்பு ஏறிப் போச்சு இல்லே? என்னை ஏன்டி வேலேலேர்ந்து சஸ்பெண்ட் பண்ணுனான்? இந்த தரித்திரம் பிடிச்ச குடும்பத்துக்காக ஆயிரம் ரூபா ஆபீஸ் பணத்தில கை வச்சதுக்காகத்தானேடி?''



மங்கல
சௌபாக்கியத்தின் சின்னம்




# ஐடெக்ஸ்

## குங்குமம் டீலக்ஸ்

matt finish

ஐடெக்ஸ்
48 ஆண்டுகளாக
உங்கள் நம்பிக்கையின்
மகத்தான சின்னம்

அரவிந்த் லாபரடரீஸ் சென்னை 600 033

Imageads 2510


Sakthi Hall
BRASSIERS
பெண்மையின்
இளமைக்கு இனிமை
சேர்க்கும் புதுமை
உண்மை!!!
சக்தி ஹால் பிரா
சக்தி ஹால்
68, இரண்டாவது
அக்ரஹாரம்
சேலம்-636 001
போன்: 65887

"ஒரு பைசான்னு, ஒரு பைசா நீங்க எங்களுக்காக எடுக்கலே. தண்ணி போட்டுட்டு ஊர் சுத்தறதுக்காக..." வாக்கியம் பாதியிலேயே நின்றது — சுந்தரராஜனின் அடுத்த அடி கன்னத்தில் வீசப்பட்டதும்.

"நாயே... மேல பேசாதேடி... இப்ப எனக்கு டிபன் போடப் போறியா, இல்லையா?" அடிக்குரலில் உறுமினான்.

மாளவிகா அப்பாவின் தொடையில் குத்தினாள். "அம்மாவை ஏம்ப்பா அடிக்கறீங்க?" என்றாள் கண்ணீரோடு.

மரகதவல்லி மகளை தன் முதுகுக்குப் பின்னே இழுத்துக் கொண்டாள்.

"ப்ளீஸ்.. நான் சொல்றதைக் கொஞ்சம் காது கொடுத்து கேளுங்க.. நான் ஒர்க் பண்றது ஒரு பாங்க்லே.. அதுவும் பொறுப்பான காஷியர் போஸ்ட்... ஒன்பது மணிக்கு பாங்க் கஸ்டமர்ஸுக்கு திறக்கறதுக்கு முன்னால, நான் போய் காஷைத் திறந்தாகணும்."

"பாங்க்பத்தின லெக்சரெல்லாம் எனக்கு வேண்டாம்.. டிபன் போட முடியுமா, முடியாதா?"

"நேரமில்லீங்க, ப்ளீஸ்"

"புருஷனுக்கு செய்யாதடி.., கவுண்டர்ல வந்து நிக்கறவன் கிட்ட இளிச்சு இளிச்சுப் பேச."

"சோறு போடறதே அந்த வேலை தானேங்க?"

"சரி, நான் சொல்றதையும் கேட்டுக்க. இப்ப நீ கௌம்பிப் போனு, சாயந்திரம் நீ வீட்டுக்கு திரும்பறப்போ, உன் புருஷன் இங்கே இருக்க மாட்டான்... அப்புறம் உன்னோட சாய்ஸ்"

கடிகாரம் எட்டே முக்கால் என்று அறிவிப்பதற்காக ஒரு முறை டிங் என்று மணி அடித்தது.

அதற்கு மேல் மரகதவல்லி காத்திருக்கவில்லை. சட்டென்று மாளவிகாவை இழுத்துக் கொண்டு, வெளியேறி கதவை அவன் முகத்தில் சாத்தி விட்டு படிகளில் பரபரவென்று இறங்கினாள்.

அதிர்ஷ்டம் எதிரே ஆட்டோவாக வந்தது. கை தட்டி நிறுத்தினாள்.

மாளவிகாவை அதன் ஸ்கூல் வாசலில் இறக்கி விட்டு (சாயந்திரம் ஸ்கூல் விட்டதும் மேரி வீட்ல போய் இரு.. நான் வந்து கூட்டிட்டுப் போறேன்) பாங்கிற்கு விரட்டச் சொன்ன போது மணி 8:55.

**பா**ங்க் கிளை இருந்த தெரு முனையில் ஆட்டோ திரும்பும் போதே ஏதோ விபரீதம் என்று புரிந்தது.

பாங்க் வாசலில் மானேஜரும், அக்கவுண்டன்ட்டும், கையில் ஹெல்மட்டோடு யாரோ ஒரு இளைஞனும் நின்றிருந்தார்கள்.

ஆட்டோவிலிருந்து இறங்கியதும், மானேஜர் வாட்சைப் பார்த்தார். "ஒன்பது அஞ்சு ஆவுது.. என்னம்மா இப்படி லேட் பண்ணிட்டே?"

"ஸாரி சார். பஸ் பிரேக் டவுன்."

"இவர் அரை மணி நேரமா பதறிட்டு இங்கியே நிக்கறாரு.. அர்ஜன்ட்டா பணம் எடுக்க வந்தாரு. பாவம்.. கமான். ஹர்ரி அப்.."


அந்த இளைஞன் நிற்க முடியாமல் கால் மாற்றி கால் பதறிக் கொண்டு, மரகதவல்லியை சற்றே கோபத்துடன், சற்றே பரபரப்புடன், "ப்ளீஸ், சீக்கிரம் பணத்தை பே பண்ணுங்க மேடம்.. என் ஒய்ஃப் ஹாஸ்பிடல்ல, சிஸேரியன் ஆப்பரேஷன் பெட்ல கெடக்கா.. எங்க பணத்தை, எங்க அவசரத்துக்குஎடுக்கமுடியலே.." என்றுவிரட்டினான்.

மரகதவல்லி காஷ் ரூமுக்குள் ஓடினாள்.

கவுண்டர்களில் இருந்த அத்தனை ஸ்டாஃபும் அவளையே பார்வையால் தொடர்ந்தார்கள்.

மானேஜர் காத்ரேஜ் ஸ்ட்ராங் பீரோவில் தன் சாவிகளை முதலில் பிரயோகித்தார். அவரை அடுத்து மரகதவல்லி தன்னிடமிருந்த சாவிகளைப் போட்டுத் திருப்பினாள்.

உள்ளேயிருந்த பணப் பெட்டியை இழுத்து வெளியே காலடியில் வைத்துக் கொண்டாள். காஷ் கண்ட்ரோல் புத்தகத்தில் எடுத்த தொகையை குறித்து இனிஷியல் வைத்தாள்.



அவரைக்காயில் எறும்பு வராமலிருக்க, ஒரு பிளாஸ்டிக் பையில் அவரைக்காயுடன் இரண்டு பச்சை மிளகாயையும் சேர்த்து வைக்க வேண்டும்.

— மீனு ரமணி.

அவள் பூட்டியதும், மானேஜர் தன் பங்குக்குப் பூட்டினார்.

"மொதல்ல அந்த கஸ்டமருக்கு பே பண்ணும்மா... லெட் ஹிம் கோ."

வலைக் கூண்டு கவுண்டரில் நுழைந்து கதவைச் சாத்திக் கொண்ட போது, அவன் ஹெல்மெட்டை அணிந்து கொண்டு தயாராக எதிரே நின்றிருந்தான். மரகதவல்லி உட்காரக் கூட இல்லை.

பேமெண்ட் ஸ்க்ரோல் புத்தகத்திலிருந்து செக்கை உருவிப் பார்த்தாள்.

ஆயிரம் ரூபாய்.

"எல்லாம் டென்ஸாகக் கொடுங்கள்"

அவள் ஒரு கட்டைத் தூக்கிப் போட்டதும். டோக்கனை எறிந்து விட்டு அள்ளிக்

கொண்டு ஸ்கூட்டருக்கு ஓடினான்.

மாகதவல்லியின் நெஞ்சில் கூட்ஸ் வண்டியின் தடக் தடக் தடக்.

எட்டரை மணி பஸ்ஸைப் பிடித்திருந்தால் இந்த கடைசி நிமிஷ டென்ஷன் இல்லை. வியர்வை பெருகி, ரவிக்கையை உடம்போடு ஒட்டியிருந்தது.

மின்விசிறியை சுழல விட்டாள்.

காஷ் பாக்ஸிலிருந்து பணத்தை எடுத்து கவுண்ட்டரின் இழுப்பறையில் ரகவாரியாக அடுக்கிக் கொண்டாள். உயரமான நாற்காலியை செளகர்யமான கோணத்தில் இழுத்துப் போட்டுக் கொண்டாள்.

அதற்குள் அடுத்த பேமெண்ட். உடனே அடுத்தது. உடனே அதற்கடுத்தது.

பியூன் வந்து கவுண்ட்டருக்குப் பின்னால் நின்றான்.

''ஃப்ரீயானவுடனே மானேஜர் வரச் சொன்னாரு, மேடம்.''

எட்டு பேமெண்ட்களுக்கு அப்புறம் கொஞ்சம் சுவாசம் விட முடிந்த நேரத்தில் மேனேஜரின் அறைக் கண்ணாடிக் கதவைத் தள்ளி நுழைந்தாள்.

போனில் இருந்தவர் எதிரே உட்காரச் சொல்லி சைகை செய்தார். போன் உரையாடலை முடித்ததும் நிமிர்ந்தார்.

''ஏம்மா நேத்து ரஜ்னீஷ் எலெக்ட்ரிகல்ஸ் கம்பெனிக்கு ஸாலரி பேமெண்ட் கொடுத்தியா?'' முன் வழுக்கை பளபளக்க கேட்டார் மேனேஜர்.

''ஆமா சார்.. ஏன் சார்?''

''அவங்க புது கரன்ஸி கேட்டாங்களாம். இல்லேன்னு சொல்லிட்டியாம்?''

''ஆமா சார்...''

''என்ன ஆமா சார்.. போன வாரம் ரிஸர்வ் பாங்க்லேர்ந்து வாங்கிட்டு வந்த புது பத்து ரூபா நோட்டுல்லாம் என்ன ஆச்சு?''

''சார்.. நீங்க தானே ப்ரியா எக்ஸ்போர்ட்ஸ் பேமெண்ட்டுக்கு புது நோட்டு தரச் சொன்னீங்க...!''

''எல்லாத்தையுமா தூக்கிக் கொடுத்தேன்? காஷை மேனேஜ் பண்ணத் தெரியாம இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்கப் போறேம்மா? யூஸி, உனக்கு வீட்ல

[redacted]

தயிரில் தக்காளித் துண்டுகள், சக்கரை, ஏலத்தூள் சிறிது உப்பு சேர்த்து ஸ்வீட் பச்சடி செய்யலாம். விருப்பமானால் வாழைப்பழம், ஆப்பிள் துண்டுகளையும் சேர்க்கலாம்.

— விஷி

[redacted]

ஆயிரம் பிரச்னை இருக்கலாம்— ஐ யாம் ஸாரி— பட் ஆபீஸ்ல உனக்கு பொறுப்பான வேலை. கான்ஸன்ட்ரேஷன் வேணும்.''

மாரகதவல்லிக்கு கண்களில் மெலிதான நீர் திரளும் போல் இருந்தது. ச்சீ, அழாதே. அசிங்கம்.

''நான் சொல்றேன்னு தப்பா நெனைச்சுக்காதே.. எக்ஸ்ட்ரா அலவன்ஸ் வருதேன்னு ஆசைப்பட்டு நீ காஷியர் போஸ்ட்டுக்கு வந்திட்டே. உன்னால சமாளிக்க முடியாட்டி, பேசாம அலவன்ஸை ஸரண்டர் பண்ணிட்டு ஆர்டினரி க்ளார்க்கா மாறிடு...''

''ஐ கேன் மேனேஜ் சார்'' என்றாள் சற்றே கோபத்தோடு.

''கேஷியர்னா மொதல்ல பங்க்சுவாலிட்டி முக்கியம். இந்த வாரம் இது மூணாவது தடவை நீ லேட்டா வர்றது.. வெல், யூ கேன் கோ...''

கவுண்டருக்குத் திரும்பிய போது, மூன்று பேமெண்ட்கள் சேர்ந்து விட்டிருந்தன.

தொண்டை வறண்டு போயிருந்தது. நெஞ்சில் துக்கம் ஆட்டுக்குட்டி போல் முட்டியது.

ஆத்திரத்தோடு யோசிக்காமல், நிதானமாக அலசியபோது, மானேஜர் சொன்னதில் நியாயம் தெரிந்தது.

எதிரில் நிழலாடியதும் நிமிர்ந்தாள்.

காக்கிச் சட்டை போட்டு, யார் இது?

''சில்லறை வேணுமா?''

''ஆட்டோ டிரைவரும்மா.. மறந்திட்டீங்களா? காலைல அவசரத்தில டிபன் பாக்ஸை ஆட்டோவிலயே மறந்து வச்சுட்டீங்கம்மா...'' என்று கவுண்ட்டரின் வட்ட ஓட்டை வழியே உள்ளே நீட்டினான். வரேம்மா.''

அவன் விலகிச் சென்று மூன்று நிமிடங்களுக்கு அப்புறம் தான் மரகதவல்லிக்கு பிரக்ஞையே வந்தது. கண்களில் ஈரமாயின.

**ம**ணி பதினொன்றரை ஆன போது, அடி வயிற்றில் திடீர் வலி, மரகதவல்லிக்கு எச்சரிக்கை மணி. மாதம் மூன்று நாட்கள் அவளை வதைத்து விட்டுப் போகும் வலி.

ஐயையோ, இன்றைக்கு அது வரப்போகிறதா? ஹாண்ட் பேகைத் திறந்து புரட்டித் தேடினாள். அவள் முன்னெச்சரிக்கையாகக் கொண்டு வரும் நாப்கின்கள் ஒன்று கூட இல்லை!

உடனே டாய்லெட்டிற்குப் போக வேண்டும் போலிருந்தது.

''மேடம் என் பேமெண்ட் வந்திருச்சா?'' கவுண்ட்டரில் ஒரு ஆள்.

பாங்க்கின் மிக பிஸியான நேரம் ஆரம்பித்து விட்டது. அடுத்த அரை மணி நேரம் நாற்காலியை விட்டு அவளால் எழுந்திருக்க முடியவில்லை. அடி வயிற்றில் பூகம்பம் வெடித்துக் கொண்டே இருந்தது.

காஷியர் அலவன்ஸிற்கு ஒரு பெண் கொடுக்க வேண்டிய விலை எத்தனை!


மலர் என்பார்,
மதி என்பார்,
மயில் என்பார்.
எப்படி
அழைப்பினும்
கண்ணே,
ஈடில்லை எதுவும்
உனக்கு !
யங்
ஸென்ஸேஷன்ஸ்
ஸாரிகள் மற்றும் டிரெஸ் மெட்டீரியல்ஸ்
மஃபத்லால்
—நம்பிக்கைக்குப் பெயர் பெற்றது
மஃபத்லால்
ஃபேப்ரிக்ஸ்
Location Courtesy: The Taj Mahal Hotel, Bombay.
MF 635 D TAM

லன்ச் டயத்தில் பக்கத்துக் கடைக்குப் போய், சௌகர்யத்தை வாங்கிக் கொண்டு வந்தாள். லன்ச் ரூமில் போய் உட்கார்ந்தாள்.

ஒரே ஒரு ஓரத்தில் சுந்தரராஜனின் முகம் ஊசி போல் குத்தியது. டைனிங் டேபிளில் அவனுக்குப் பரிமாறாமல் கிளம்பி வந்தது நெஞ்சை குடைந்தது.

டிபன் பாக்ஸைத் திறக்காமலேயே பைக்குள் வைத்துக் கொண்டு எழுந்து விட்டாள். "ஏண்டி?" என்ற தோழிகளிடம் தயாரான நம்பகமான பொய், 'ஒரே தலைவலி.'

கவுண்டருக்குத் திரும்பியதும், பணத்தை பாலன்ஸ் செய்ய ஆரம்பித்தாள். பணத்தை ரகவாரியாக அடுக்கி, நூறு நூறு நோட்டுகளாகப் பிரித்து, தொகையை எழுதிக் கொண்டே வந்தாள். கடைசியில் இருப்புத் தொகையை சரி பார்த்த போது, உச்சி மண்டையில் பாட்டிலைப் போட்டு உடைத்தது போல் பகீர் என்றது.

ஆயிரம் ரூபாய் குறைவாய் இருந்தது.

எங்கே தப்பு பண்ணி விட்டேன்? ஒவ்வொரு கரன்ஸிக் கட்டையும் அவசரம் அவசரமாக சரி பார்த்தாள்.

கேஷ் ரிஜிஸ்தரில் தொகைகள் சரியாக எழுதியிருக்கிறேனா?

இரண்டு முறை கூட்டினாள். அதே தொகை தான் வந்தது.

நெஞ்சில் திகுதிகு என்று நெருப்பு பிடித்துக் கொண்டது. உடம்பு ரத்தம் எல்லாம் பூமிக்குள் ஓடி விட்டது போல் இருந்தது.

மறுபடியும், மறுபடியும், மறுபடியும், மறுபடியும்,

ஒவ்வொன்றாக சரி பார்த்தாயிற்று.

"என்ன ஆச்சு மரகதம்?"

"எனி பிராப்ளம்?"

"ஏதாச்சும் ஹெல்ப் வேணுமாம்மா?"

ஒவ்வொருத்தராய்க் கூடி விட்டனர். துக்கம் தொண்டையில் மையம் கொண்டது. வறண்டு போன நாக்கை கஷ்டப்பட்டுப் புரட்டினாள். "ஆயிரம் ரூபா ஷார்ட் ஆயிருக்கு"

"ஒன் தவுஸண்ட்! மை காட்!"

காலையில் அவளிடம் எகிறிய மேனேஜரிலிருந்து, கூப்பிட்டால் பத்து நிமிஷம் கழித்துத் திரும்பிப் பார்க்கும் பியூன் வரை, நிஜமான அக்கறையோடு, உண்மையான கவலையோடு அவளைச் சுற்றிக் கொண்டார்கள்.

"நிதானமா யோசிக்கப் பாரும்மா... டினாமினேஷனெல்லாம் கரெக்டா செக் பண்ணு." என்று மேனேஜர் பேசிக் கொண்டிருக்கும் போதே மரகதவல்லிக்கு மண்டையில் விளக்கு எரிந்து விட்டது.

"சார்.. நான் அர்ஜெண்ட்டா பணம் கொடுத்தது முதல் பேமெண்ட்டுக்குத் தான். அந்த சிஸேரியன் ஹஸ்பெண்ட்... ஆயிரம் ரூபாய்க்கு பத்து ரூபா கட்டு கொடுக்கறதுக்கு பதிலா இருபது ரூபாக்கட்டு தூக்கிக் கொடுத்திட்டேன்னு நெனைக்கறேன்.."

பளிச் பளிச் என்று எல்லாரும் நிமிர்ந்தார்கள். "எந்த ஹாஸ்பிடல்னு சொன்னான், ஞாபகமிருக்கா?"

"ஆந்திர மகிள சபான்னு சொன்னான்."

"ராஜு, நீ ஸ்கூட்டர்லே போய்ட்டு வந்திடு..."

ராஜு ஸ்கூட்டரை உதைத்துக் கிளம்பிய நேரம், எதிரே அந்த ஆட்டோ வந்து நின்றது. காலையில் வந்த அந்த இளைஞன் ஆட்டோவிலிருந்து இறங்கினான். அவன் கையில் ஒரு சாக்லேட் பெட்டி. முகத்தில் சிரிப்பு, பெருமை, சந்தோஷம்.

"ஐ யாம் ஸாரி.. எக்ஸஸ் பேமெண்ட் வாங்கிட்டேன்றதே ஒரு மணி நேரத்துக்கு முன்னால தான் எனக்கு உறைச்சுது... மார்னிங்லேர்ந்து பயங்கர டென்ஷன்.." என்று மன்னிப்புக் கோரும் குரலில் கேட்டுக் கொண்டே பாங்க்கினுள் நுழைந்தான்.

"நல்ல வேளை சரியான சமயத்தில் நான் பணத்தோட போய் சேர்ந்ததால தான் என் ஒய்ஃப் பொழைச்சா... ப்ளீஸ் ஸ்வீட் எடுத்துக்குங்க.. ஆண் குழந்தை.."

மரகதவல்லியின் காதுகள் இரண்டும் அடைத்துக் கொள்வது போல் இருந்தது. கண்கள் முன்னே பூச்சிகள் பறந்தன.

கிடைத்து விட்டது!

ஆயிரம் ரூபாய்! காலையில் நேரத்தோடு ஆபீஸ் வந்திருந்தால் இந்த டென்ஷனை நிச்சயம் தவிர்த்திருக்கலாம்.

தன்னுடைய அத்தனை டென்ஷன்களின், பதட்டங்களின், விரக்திகளின், பயங்களின் நடுவே, அந்த இளைஞன் முகத்தில் ததும்பிக் கொண்டிருந்த சந்தோஷம் இதமான இறகால் வருடிக் கொடுப்பது போல் இருந்தது.

ஒரு விமானத்தை ஓட்டிச் செல்பவனைப் போல், ரயிலை உரிய நேரத்தில் செலுத்துபவனைப் போல், இரவு பகல் பார்க்காமல் உழைக்கும் ஆஸ்பத்திரி டாக்டர் போல், இந்த காஷியர் பதவியிலும், மற்றவர்களின் அவசரத்தை, அவசியத்தை அனுசரித்துப் போகும் ஒரு பெருமை நிச்சயம் இருக்கிறது., இந்த கணம் எனக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது!

"கங்கிராட்ஸ்!" என்றாள் அந்த இளைஞனிடம், மனம் விட்டு சிரித்து.

**பே**ரி வீட்டில் மாளவிகாவை பிக்அப்

சிறிய வெங்காயத்தை சிறிதளவு வாணலியை சூடேற்றி பின் அதில் போட்டு சூடு வர புரட்டினால் அதன் தோலினை சுலபமாக உரிக்க இயலும்.

— சரஸ்வதி.

செய்து கொண்டு, மரகதவல்லி வீடு திரும்பிய போது, கதவில் பூட்டு தொங்கியது.

அவளிடமிருந்த சாவியால் திறந்து கொண்டு உள்ளே நுழைந்தாள்.

உடனே அந்தக் காட்சி அவளைத் தாக்கியது.

டைனிங் டேபிளில் தட்டு காய்ந்திருந்தது. ஒன்றரை இட்லி மிச்சம் இருந்தது. சட்னிக் கிண்ணம் திறந்திருந்தது.

ஃப்ரிட்ஜ் சரியாக மூடப்படாமல் குளிர்ப் புகை வெளியே நழுவிக் கொண்டிருந்தது.

எல்லாவற்றையும் விட, மேஜையில் சட்னிக் கிண்ணத்திற்குக் கீழே ஒரு தாள் படபடத்துக் கொண்டிருந்தது.

கையில் இருந்ததை அப்படியே உதறி விட்டு ஓடிப் போய் அந்த காகிதத்தை எடுத்தாள். சுந்தரராஜனின் கிறுக்கலான கையெழுத்து.

> உனக்கு புருஷனை விட பாங்க் முக்கியமாகிவிட்டது. என்னை மீறி நீ போனாய்.
>
> நானும் போகிறேன். திரும்பி வர மாட்டேன். தேடாதே!

அப்படியே சரிந்து உட்கார்ந்தாள்.

நிஜமாகவா, நிஜமாகவா?

மாளவிகா ஓடி வந்து அம்மாவின் கால்களைக் கட்டிக் கொண்டது. "என்னம்மா?"

அந்த காகிதத்தை அப்படியே சுருட்டி கைக்குள் அடக்கிக் கொண்டாள்.

தப்பு செய்து விட்டேனா?

கால்கள் பின்ன எழுந்தாள். மாளவிகாவை விலக்கி விட்டு, பெட்ரூமிற்குள் நுழைந்தாள்.

கட்டிலில் சுந்தரராஜனின் சில பாண்ட், ஷர்ட்கள் சிதறிக் கிடந்தன.

வேண்டியதை எடுத்துக் கொண்டு உண்மையிலேயே அவளையும், மாளவிகாவையும் உதறி விட்டு அவன் கிளம்பி விட்டானா?

நெஞ்சில் துக்கம் குமுற அலமாரியைத் திறந்தாள்.

இரண்டாவது தட்டில் அந்த பாட்டில் இருந்தது.

பிராந்தியை சுமக்கும் பட்டையான பாட்டில். ஆச்சரியமாக பாதி பாட்டில் வரை பிராந்தி மிச்சமிருந்தது.

சுந்தரராஜன் நிச்சயம் திரும்பி வரப் போகிறான் என்று தைரியம் சொல்லும் பாட்டில்.

மரகதவல்லி அவனுக்கும் சேர்த்து சமைக்க வேண்டும் என்ற துடிப்போடு கட்டிலில் அப்படியே உட்கார்ந்தாள்.

"ஏம்மா, திடீர்னு சிரிக்கறே?" என்று கேட்ட மாளவிகாவை நெஞ்சோடு இழுத்து அணைத்துக் கொண்டாள். கேள்விக்குப் பதில் சொல்லவில்லை.


---

பொதுவாகவே வங்கி வேலை என்றாலே "ஆஹா! கைநிறைய சம்பளம், சுலபமான வேலை" என்று எண்ணி பொறாமை கொள்ளும் பெண்கள் உண்டு. ஆனால் பெண் வங்கி ஊழியர்களுக்கும் பல பிரச்னைகள் உண்டு. அதிலும், கிராமப்புற வங்கிகளில் பணிபுரியும் பெண்களுக்குக் கேட்கவே வேண்டாம். பொதுவாகவே கிராமங்களில் பெண்கள் ஆண்களைவிட திறமை குறைந்தவர்களாகவும், ஆண்களுக்கு சமமாகப் பேசும் உரிமை பெண்களுக்குக் கிடையாது என்றும் கருதப்படுகிறது. நான் வேலை பார்க்கும் வங்கியும் ஒரு கிராமத்தில்தான் உள்ளது. அலுவலகத்தில் ஒரு பெண் எவ்வளவுதான் மற்றவரை விட திறம்பட வேலை செய்தாலும், பாராட்டே கிடைக்காததோடு, குற்றம் ஏதேனும் காணப்படுகிறதா என்றுதான் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அதிலும் சற்று மேல்மட்டத்துப் பெண்கள் வேலைக்கு வந்தால், எந்த சந்தர்ப்பத்தில் மட்டம் தட்டலாம் என்று காத்திருப்பார்கள் சக ஊழியர்கள். தனித்த பெண்ணாக வேலை பார்க்கும் பொழுது அவள் தன்னுடைய பிரச்னைகளை யாரிடமும் மனம் விட்டு விவாதிக்கவும் முடியாது.

கிராமப்புற வங்கிகளுக்கு பெரும்பாலும் படிப்பு வாசனையற்ற மக்கள்தான் வருவார்கள். அவர்களுக்கு, விஷயங்களை எடுத்துச் சொல்லி புரிய வைப்பதற்குள் போதும் போதுமென்றாகி விடும். பேசும்போதும், நாம் மிகக் கவனமாக, எரிச்சல் ஏற்பட்டால் வெளிக்காட்டாது பொறுமையாக பதில் அளிப்பது மிக முக்கியம். காஷியராக வேலை பார்க்கும் பொழுது மிகக் கவனமாக இருக்க வேண்டும். சில பேர் காஷ் செல்லானை பூர்த்தி செய்யத் தெரியாததால், பணத்தை மொத்தமாக ஒரு பொட்டலமாகக் கட்டிக் கொடுப்பார்கள். காஷியர் பணத்தை எண்ணும்போது ஒன்றிரண்டு நோட்டு குறைவதாகச் சொன்னால், லேசில் ஒத்துக் கொள்ளாமல் 'உங்களிடம்தானே எல்லாப் பணத்தையும் கொடுத்தேன்' என்று சாதிப்பார்கள். அவர்களுக்கு அமைதியாக எடுத்துச் சொல்லி குறையும் பணத்தை அவர்களிடம் இருந்து வாங்குவதற்குள் போதும் போதுமென்றாகி விடும்.

—பிரமீளா சுகுமார்.







# சமையல் அறையில் கரப்பான் பூச்சிகள்!

அழையா விருந்தாளியாக வரும் பல பூச்சிகள், அசுத்தமான பகுதிகளைக் கடந்தே சமையலறைக்குள்ளும் கால் வைக்கின்றன. ஆனாலும் அசுத்தம் செய்வதில் ஈ, எறும்பு, எலி, மூஞ்சுறு ஆகியவை கூட கரப்பான் பூச்சிகளுக்கு ஈடாவதில்லை. பகலில் எங்கிருந்தாவது எதிர்ப்பட்டு, விநாடிக்கு 26 செ.மீ. வேகத்தில் இவை ஓடுவதைக் கண்டு நீங்கள் அலறிக் குதிப்பதும் உண்டு. இரண்டாம் உலகப் போரின்போது, ஜப்பானிய நகரங்களைத் தரைமட்டமாக்கிய அணுகுண்டுகளாலும், அவற்றிலிருந்து வெளிப்பட்ட கதிர் வீச்சுக்(**radiation**) களாலும் கூட சிறிதும் பாதிப்பு அடையாமல் அங்கே உயிர் வாழ்ந்தவை கரப்பான் பூச்சிகள் மட்டுமே.

தாய்லாந்து, நாட்டுக் கிராமங்களின் கரப்பான் பூச்சிகளைக் கொண்டே பல வகைச் சமையல் தயாரிப்புக்கள், மருந்துகள் ஆகியவை செய்வார்களாம்! (உவ்வே!) கிடைத்த எதையும் உண்டு வாழும் கரப்பான் பூச்சிகளுக்குச் சாதகமாக நமது அசுத்தமான சுற்றுப்புறங்களும், பழக்கவழக்கங்களும் அமைந்து விடுமானால் கேட்கவே வேண்டியதில்லை. சாக்கடை, கழிவுநீர்த் தொட்டி, குப்பைத் தொட்டி, கக்கூஸ் ஆகிய எல்லாப் பகுதிகளிலும் நடமாடியபடி சமையலறைக்கும் ஒரு 'விசிட்' செய்வது இவற்றிற்கு மிகவும் பிடித்தமானது.

சமையல் பொருட்கள், சமைத்த உணவுகள், பாத்திரங்கள் ஆகியவற்றின் மீது ஏறி, இருட்டில் சுதந்திரமாக நடந்து திரியும் இவற்றின் கால்களிலும் உடலிலும் ஒட்டிக் கொண்டுள்ள நோய்க் கிருமிகளின் மூலம், போலியோ, வயிற்றுக் கடுப்பு, காலரா, டைபாயிட், மஞ்சள் காமாலை உட்பட இருபதுக்கும் அதிகமான தொற்றுநோய்கள் பரவும். அதோடு, ரேடியோ, டெலிவிஷம், மிக்ஸி, கிரைண்டர் ஆகிய மின் சாதனங்களுக்குள்ளும் இப்பூச்சிகள் குடியிருப்பதால் இவையும் பழுதடைவதுண்டு. மருந்துகளுக்காகவும், பழுது பார்ப்பதற்காகவும், செலவிட நேர்ந்து, உங்கள் சிக்கனத் திட்டங்கள் பலவும் பகற்கனவுகளாவது இப்படியும்தான்.

அசுரத்தனமான எண்ணிக்கையில் இனப்பெருக்கம் செய்யும் இப்பூச்சிகளுக்குப் பூச்சிக் கொல்லிகள் மிக அற்பமானவை. ஆனாலும் பல நாடுகள் கோடிக்கணக்கில் இவ்வாறு செலவிட்டுத்தான் பார்த்தன. தலைப் பகுதியையே வெட்டிவிட்டாலும் கூட இவை ஒரு வாரம் வரை உயிர் வாழ்வதோடு முட்டையிடுவதையும் நிறுத்துவ

## இம்மாத இல்லத்தரசி

### சமையல் கூப்பன்

**பொருள்: பொங்கல்**

**கடைசித் தேதி: 15.12.87**

................. என்ற தலைப்பில் சமையல் குறிப்பை இத்துடன் அனுப்பியுள்ளேன். இச்சமையல் குறிப்பு இதுவரை எந்தப் பத்திரிகையிலும், எந்தப் புத்தகத்திலும் வெளியானதல்ல என்று உறுதி கூறுகிறேன்.

கையொப்பம்

---

இல்லை. வரிசைக்கு எட்டு வீதம், இரண்டு வரிசையில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள இவற்றின் முட்டைகள் கரும்பழுப்பு நிறமாக, கடினமான உறையால் சூழப்பட்டு, பைபோன் வடிவில் வெளிப்படும்போது அதைப் பாதுகாப்பான மூலை முடுக்குகளில் கொண்டு ஒட்டவைத்துச் செல்கின்றன. இவற்றிலிருந்து வெளிப்படும் 16 குஞ்சுகளில் ஆணும் பெண்ணும் சரி பாதியான எண்ணிக்கையிலேயே இருப்பதுண்டு. முழுவளர்ச்சி அடையும் முன்னர் இவை பல வடிவங்களில் காணப்படும்.

கரப்பான்பூச்சிகளைக் கொல்வதற்காகக் கையில் கிடைத்த ஏதாவது ஒன்றை எடுத்து நாம் ஓங்கினால், அதன் மூலம் ஏற்படும் காற்றின் அசைவைக் கூட இவற்றின் உடலின் பின் பகுதியில் சிறு கொம்புகள் போல் நீட்டிக் கொண்டிருக்கும் உறுப்புக்களால் எளிதில் உணர்ந்து, எச்சரிக்கையடைந்து அடிபடாமலேயே இவை தப்பி ஓடும். அப்போது, இவற்றின் உடலிலிருந்து வெளிப்படும் ஒரு நாற்றத்தை உணர்ந்து மற்றவைகளும் ஓடிப்பதுங்கிக் கொள்கின்றன.

இனப்பெருக்கக் காலங்களில், பெண் இனப் பூச்சிகளின் உடலிலிருந்து வெளிப்படும் மற்றோர் இரசாயனப் பொருளின் வாசனையால் கவரப்படும் ஆண் பூச்சிகள் எங்கிருந்தாலும் வந்து கூடிவிடுகின்றன. செயற்கையாகத் தயாரிக்கப்பட்ட இதே இரசாயனப் பொருளைப் பொறிகளுக்குள் வைத்து இவை ஒவ்வொன்றின் மூலமும் 1000 க்கும் அதிகமான ஆண் பூச்சிகளை அழிக்கும் முறையை மேலைநாடுகளில் பின்பற்றுகிறார்கள். உணவுக் குழாயைச் சுருங்க வைக்கும் தன்மைமிக்க ஒரு வகைச் செயற்கையான புரதச் சத்தையும் பயன்படுத்திக் கரப்பான் பூச்சிகளைப் பட்டினிப் போட்டுக் கொல்லும் மற்றோர் முறையும் நடைமுறையில் உள்ளது.

இருட்டில் மட்டுமே நடமாடித் திரியும் இப்பூச்சிகளிடமிருந்து சமையல் அறையை மீட்டுக் கொள்ளச் சில எளிய முறைகளைப் பின்பற்றலாம்:

1. சுவர்களிலும், சமையல் மேடையிலும் காணப்படும் வெடிப்புகள், அம்மி, ஆட்டுக்கல் ஆகியவற்றின் கீழ் காணப்படும் இடுக்குகள் மற்றும் இருண்ட மூலை முடுக்குகள் போன்ற இடங்கள் ஈரக்கசிவுடன் இருக்குமாயின் கரப்பான் பூச்சிகளின் இருப்பிடமே இங்குதான். எனவே, இப்பகுதிகளும், நீர்க்கசிவுள்ள வாஷ் பேசின்களும் உடனடியாகச் சரி செய்யப்பட வேண்டும்.

2. சமைத்த உணவு, சமையல் பொருட்கள், சமையல் அறையில் பயன்படும் குப்பைத் தொட்டி ஆகியவற்றினுள் பூச்சிகள் புக விடாமல் இவற்றை மூடி வைத்தல் அவசியம்.

3. படுக்கைக்குச் செல்லும் முன் சிறிதும் சோம்பல் கொள்ளாமல், சமையல் பாத்திரங்கள் உட்பட தட்டுமுட்டுச் சாமான்களில் உணவுத் துணுக்குகள் இல்லாமல் கழுவி, சோப்புத் தண்ணீரிலும் அலசியபின் உரிய இடத்தில் அவற்றை வைக்கவும்.

4. பூச்சிக் கொல்லி மருந்துகளைச் சமையல் அறையில் பயன்படுத்துவதற்குப் பதிலாக போரிக் தூள் ஒரு ஸ்பூன், கோதுமை மாவு 4 — 5 ஸ்பூன், சர்க்கரை ஒரு ஸ்பூன் சேர்த்துக் கலந்தபின், சிறிது பால் விட்டுப் பிசைந்து சிறுசிறு உருண்டைகளாகச் செய்து கொள்ள வேண்டும். இவற்றைக் குழந்தைகளின் கையில் கிடைத்துவிடாத முன் எச்சரிக்கையுடன், கரப்பான் பூச்சிகளின் நடமாட்டப் பகுதியில் சில மாதங்களுக்கு ஒரு முறை போட்டு வைத்தாலே போதும். இக்கலவையை வெடிப்பு, கீறல் ஆகிய பகுதிகளிலும் பூசி அடைக்கலாம். மேற்கூறப்பட்டுள்ள முறைகளை அக்கம் பக்கத்திலுள்ளவர்களோடு சேர்ந்து பின்பற்றுதல் இன்றியமையாதது.

— "எஸ் ஏ சி"



இலவசம்
இப்போது பிஸ் உபயோகப்படுத்துவீர்
மிச்சப்படுத்துவீர்... அதிகமோ அதிகம்!
Lavender dew
The luxury soap with parfum de lavande
ஒரு இலவச லவண்டர் டியூ லக்ஷரி சோப் (குறிப்பிடப்பட்ட விலை ரூ. 6.40)—2.5 கிலோ பேக் ஸூப்பர் பிஜ் வாங்குந்தோறும்.
பிஜ் உபயோகிப்பீர்! உங்கள் சமையலறை பாத்திரங்கள், கண்ணாடிப் பாத்திரங்கள் தரை மற்றும் வாஷ் பேஸின், பளபளப்புடன் ஜொலிக்கும்.
இப்போது நீங்கள் புத்துணர்ச்சி பெற முடியும்—லவண்டர் டியூ கொண்டு. காரணம் அது இலவசம்—பிஜ் வாங்கும் பெண்டிருக்கு!
SUPER
BIZ
5-refill pack
multipurpose
CLEANING
POWDER
GODREJ SOAPS PVT. LIMITED
BOMBAY-400 079
MADE IN INDIA
NET WT.
2.5 kg.
A Godrej PRODUCT
LOCAL TAXES EXTRA PACKED:
MAX. PRICE Rs.

# என்ன ப்ரச்னைகள் இவர்களுக்கு?

வங்கியில் பெண்களுக்கு வேலை கிடைக்கிறது என்றால் அந்தப் பெண் அதிர்ஷ்டம் செய்த பெண்ணாகவே கருதப்படுகிறாள். வங்கியில் வேலை செய்யும் பெண்ணுக்குத் திருமண மார்க்கெட்டிலும் கிராக்கிதான்.

ஒரு வங்கி மேலாளர் ஒருவரிடம் பேசிக் கொண்டிருந்தேன். வங்கித் தேர்வுகளில் அதிகமாகப் பெண்கள் வெற்றி பெறுகிறார்களே இதற்குக் காரணம் என்ன? என்று அவரிடம் கேட்டேன். அவர் சொன்னார்:

"பெண்கள் எதையுமே கர்ம சிரத்தையுடன் செய்யக் கூடியவர்கள். படிப்பதைத் தெளிவாகப் படிக்கக் கூடியவர்கள். அது மட்டுமல்ல. அவர்களுடைய கையெழுத்தும் இயற்கையாகவே ஆண்களை விட அழகாக இருக்கும். ஆண்களைப் போல் வெளி உலகோடு அவர்களுக்கு நிறையத் தொடர்பு கிடையாது. எனவே அவர்களால் வங்கித் தேர்வுக்குத் தன்னைத் தயார்ப்படுத்திக் கொள்ள நிறைய நேரம் கிடைக்கிறது! அதனால் வெற்றி பெறுகிறார்கள்!"

வங்கியில் வேலை பார்க்கும் மேலாளர்கள், உதவி மேலாளர்கள், நடுநிலை ஊழியர்களாக (மேனேஜர், கணக்கர், கிளார்க்குகள்) பெண்கள் இருக்கிறார்கள். இவர்கள் ஆண்களை விடச் சிறப்பாகத்தான் பணி செய்கிறார்கள் என்றாலும் ஒரு வட்டார அளவிலோ அல்லது தலைமை அலுவலகத்திலோ, பொறுப்பான பதவியில் இவர்களைக் காண முடியவில்லையே?

இதைப் பற்றி ஒரு பெண் வங்கி ஊழியரிடம் கேட்டபோது அவருக்குக் கோபம் வந்து விட்டது.

"வேலை செய்வதில் நாங்கள் ஒன்றும் ஆண்களுக்குச் சளைத்தவர்கள் இல்லைதான். பணியில் இருக்கின்ற நாங்கள் சில குடும்ப வேலைகளின் காரணமாகச் சில விடுப்புக்களைப் போட வேண்டி வருகிறது. ஆண்கள் என்றால் அவர்களால் அதிக நேரம் உட்கார்ந்து கூட வேலை பார்க்க முடியும். அதாவது கணக்கு தணிக்கையின் போது இரவு நேரங்களில் அதிக நேரம் உட்கார்ந்து கொண்டு வேலை செய்ய முடியும். பெண்கள் என்பதால் சில பாதுகாப்புக்களைக் கருதி எங்களால் இரவு நேரங்களில் உட்கார்ந்து கொண்டு வேலை செய்ய முடியாது.

தாய்மை பெண்மைக்குக் கிடைத்த வரப் பிரசாதம்தான். தாய்மை அடைவதைப் பற்றிப் பெருமையாகத்தான் நாங்கள் நினைக்கிறோம். ஆனால் இந்தத் தாய்மைக் காலத்தின் போது மூன்று நான்கு மாதங்கள் குழந்தை பெறுவதற்காக விடுப்புப் பெற வேண்டியிருக்கிறது. இந்த விடுப்புக்கள் எங்களுடைய பதவி உயர்வைப் பாதிக்கின்றது. ஆண்களுக்கு அதிக விடுப்பு தேவைப்படாது. எனவே அவர்களால் எளிதில் பதவி உயர்வு பெற முடிகிறது.

திறமை என்று பார்த்தீர்களானால் ஆண்ணால் வங்கியில் என்ன செய்ய முடியுமோ அதை எங்களாலும் செய்ய முடியும். ஆனாலும் பதவி உயர்வு அவர்களுக்குத்தான் கிடைக்கிறது. அடிக்கடி பெண்களை ஊர் விட்டு ஊர் பணிக்காக மாற்ற முடியாது. பெரிய பதவிகளில் உள்ளவர்கள் அடிக்கடி மாற்றுதலுக்கு உள்ளாகக் கூடியவர்களே. எனவே பெண்களுக்கு உயர்ந்த பதவிகளைக் கொடுக்க முடியாது என்று சொல்லுகிறார்கள்." என்றார்.

ஒரு பெண்மணி வந்து தான் தனியார் வங்கி ஒன்றில் வேலை பார்ப்பதாகவும் வங்கி வேலை நேரங்கள் பெண்களுக்கு உகந்ததாகச் சில இடங்களில் இல்லை. இதனால் பெண்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகிறார்கள் என்றும் சொன்னார்.

"சில வங்கிகள் காலை 8 மணி முதல் 10 மணி வரையும் பின்பு மாலை 4 மணி முதல் 6 மணி வரையும் வாடிக்கையாளர்கள் சௌகரியத்திற்காகச் செயல்படுகிறது. வாடிக்கையாளர்கள் நோக்கில் இந்தப் பணி செய்யப்பட வேண்டிய ஒன்றுதான். ஆனால் இதுபோன்று செயல்படும் வங்கிகளால் அங்கு வேலை பார்க்கும் பெண்களுக்கு அதிகக் கஷ்டங்கள் இருக்கின்றன. 4 மணி முதல் 6 மணி வரை வேலை நேரம் என்றாலும் இந்த வேலை நேரம் முடிந்ததும் மற்ற அலுவலகங்களைப் போல் பையைத் தோளில் மாட்டிக் கொண்டு கிளம்பிவிட முடியாது. காரணம், அதற்குப் பின் அன்றைய கணக்கைச் சரி செய்துவிட்டு எழுத்து வேலைகள் இருந்தால் அதையும் முடித்துவிட்டுத்தான் கிளம்ப முடியும். பணம் கொடுக்கல், வாங்கல் இடமாக வங்கி இருப்பதால் அன்றன்றைய கணக்கை அன்றே முடித்தாக வேண்டும். ஆறு மணிக்கு மேல் கிட்டத்தட்ட ஒன்று அல்லது ஒன்றரை மணி நேரமாவது ஊழியர்கள் இருக்க வேண்டும். பெண்களுக்குப் பாதுகாப்பு உள்பட எத்தனையோ பிரச்னைகள் இந்த நேர மாற்றத்தால் ஏற்படுகிறது" என்று குறைபட்டுக் கொண்டார்.

ஆண்களைப் போல் வீட்டுக்குப் போனதும் ஜாலியாக தொலைக்காட்சியைப் பார்த்துவிட்டு பின்பு டைனிங் டேபிளில் வந்து உட்கார்ந்து கொண்டு பெண்களால் சாப்பிட முடியாது. காரணம் சமையல் வேலைகளைச் செய்ய வேண்டியவர்கள் பெண்களே. பணி முடிந்து சமையல் வேலை



களைச் செய்து பிறகு மற்ற வீட்டு வேலைகளைக் கவனித்து விட்டுப் படுக்கப் போகும் போது நிறைய நேரம் ஆகிவிடுகிறது. அடுத்த நாள் காலை எட்டு மணிக்கே வங்கி என்பதால் சீக்கிரமே வேறு எழுந்து காலை வேலைகளைச் செய்ய வேண்டும். ஒரு எந்திர வாழ்க்கையைத்தான் நாங்கள் மேற்கொள்ள வேண்டியிருக்கிறது'' என்று கஷ்டப்பட்டுக் கொண்டார் அந்தப் பெண்மணி.

இந்தக் கஷ்டத்தை நிவர்த்தி செய்ய ஒரே ஒரு வழிதான் இருக்கிறது. வீட்டு வேலைகளில் ஆண்களும் பங்கு எடுத்துக் கொள்ள வேண்டியதுதான். அது ஒன்றும் கேவலமில்லையே! பொருளாதாரத் தேவைக்காக வேலைக்குச் செல்லும் மனைவியின் பணம் தேவைப்படும் போது அவளின் வீட்டு சுமையில் பங்கு எடுத்துக் கொள்வது ஒன்றும் பாவமில்லையே என்றுதான் எண்ணத் தோன்றியது!

குறைபட்டுக் கொண்டவர்கள் மத்தியிலிருந்து சற்று வித்தியாசப்பட்ட படி ஒரு வங்கி பெண் ஊழியர் நம்மிடம் பேசினார். வங்கியில் வேலை செய்யும் பெண்களுக்கு அங்கு பணிபுரியும் ஆண்களைவிட பொதுவாக சமூகத்தில் ஒரு நல்ல பெயர் இருக்கிறதாம்!

லஞ்சலாவண்யங்களில் பெண்கள் சம்பந்தப்பட மாட்டார்கள் என்று பலரும் எண்ணுகிறார்கள். வங்கி ஊழியர்கள் குறிப்பாகப் பெண்கள் வேண்டியவர்கள் வேண்டாதவர்கள் என்று யாரையும் எடை போட மாட்டார்கள். சட்டம், நியாயம் இதன்படிதான் பெண்கள் செயல்படுவார்கள் என்று பலரும் நினைக்கிறார்கள்.

பொது மக்கள் அதிகம் தொடர்பு கொள்ளக் கூடிய இடம் வங்கி. மென்மையாக வரும் வாடிக்கையாளர்களிடம் பேச வேண்டியது வங்கி ஊழியர்களுக்கு இருக்க வேண்டிய தனிக் குணம். இந்த மனோதத்துவத்தைச் சரியாகப் புரிந்து கொண்டு இயற்கையாகவே செயல்படக் கூடியவர்கள் பெண்கள். பல கம்பெனிகளில் வரவேற்பாளர்களாகப் பெண்களைத்தான் போடுகிறார்கள். எனவே பொது மக்களோடு தொடர்பு கொள்ளக் கூடிய இந்த வங்கி தொழிலுக்கும் ஆண்களை விடப் பெண்கள்தான் ஏற்றவர்கள் என்று பெருமைப்பட்டுக் கொண்டார் அந்தப் பெண்மணி.

வங்கியில் பணிபுரியும் பெண்களுக்கென்று சில சௌகரியங்களும் இருக்கின்றன. ஓர் இடத்தில் இருந்து இன்னோர் இடத்திற்கு இவர்கள் மாற்றலாகும் போது ஒரு வாரம் விடுப்புக் கொடுக்கிறார்கள். மொத்தம் 12 மாதங்கள் பேறு கால விடுப்பு நான்கு முறைகளில் எடுத்துக் கொள்ளலாம். வங்கியில் பணிபுரிகிறவர்களுக்காக அவர்கள் வீடு கட்டிக் கொள்ளும் பட்சத்தில் எளிய முறையில் சுலபமான தவணை முறையில் கடன்கள் வேறு கிடைக்கிறது. இது எல்லாம் எங்களுக்குக் கிடைக்கும் சௌகரியங்கள் என்று அந்தப் பெண் பெருமைப்பட்டுக் கொண்டதோடு அந்தக் காலத்தில் எல்லாம் வட்டிக் கடைகளில் எல்லாம் பெண்கள் வேலை செய்ய மாட்டார்கள். கொடுக்கல் வாங்கல் கூட கிராமத்தில் ஆண்கள் செய்தால்தான் மதிப்பு என்ற நினைப்பு உண்டு. காலம் மாறி இப்போது கொடுக்கல் வாங்கல் தொழிலைச் செய்யும் வங்கிகளில் பணிபுரியும் பெண்களால் எதையும் திறமையாகச் செய்ய முடியும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது என்றார்.

வங்கிகளில் வேலை செய்வோருக்குப் பாதுகாப்புத்தான் பெரிய பிரச்னை. இந்தப்

பிரச்னை ஆண்களுக்கு உண்டு என்றாலும் பெண்களுக்குத்தான் அதிகம் என்றார் ஒருவர். பயந்த சுபாவம் கொண்ட பெண்கள் மிரட்டினால் உடனே பயந்து விடக் கூடியவர்கள். பரபரப்பான சூழ்நிலை உருவாகி ஒரு கொள்ளையடிக்கும் முயற்சி நடந்தால் பெண்கள்தான் அதிகம் குழம்பிப் போவார்கள். இந்த நிலையில் அவர்கள் கொள்ளையடிப்பவர்களால் தாக்கப்படலாம். பாங்கு உடைமைகளையும் அவர்கள் காப்பாற்ற வேண்டும். அதே சமயம் தங்களுடைய மானத்தையும் அவர்கள் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். கொள்ளையடிப்பவர்களால் அவர்களுக்கு எந்தவித அபாயமும் ஏற்படலாமில்லையா என்றார்!

இவர் இப்படிச் சொன்னதும் அவரிடம் ஒரு விஷயத்தை நாம் சொன்னோம். சில மாதங்களுக்கு முன் சென்னையில் ஒரு கருத்தரங்கில் பேசிய முன்னாள் மத்தியப் புலனாய்வுத் துறை டைரக்டர் காத்ரே ஒரு விஷயத்தைச் சொன்னார். வங்கி ஊழியர்கள் தங்களைக் காப்பாற்றிக் கொள்ளவும், வங்கி உடைமைகளைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஆளுக்கொரு கைத்துப்பாக்கியை வைத்துக் கொள்ள வேண்டும். கொள்ளையர்களை ஓடாமல் காயப்படுத்த இந்தத் துப்பாக்கிகளைப் பயன்படுத்தலாம்' என்றார் காத்ரே. இந்த யோசனை நாம் அந்தப் பெண்மணியிடம் சொன்னதும் அதை அவர் வரவேற்றார். இதற்காகப் பயிற்சி வகுப்பு கொடுக்கலாம் என்று ஒரு யோசனையைத் தெரிவித்தார்.

பேட்டி: **ஹரிதன்**

---


''சென்ட்''டினால் வந்த குழப்பம்

நான் வங்கியில் புதிதாகச் சேர்ந்த சமயம். தினமும் மதியம் லஞ்ச் முடிந்து மூன்று மணிக்கு சக அலுவலர்கள் ''சென்ட் போட்டாச்சா, இங்கே கொடுத்தனுப்பு'' என்று கேட்டுக் கொள்வார்கள. அதிலும் சீனியர் பெண் அலுவலர் பார்ப்பதற்கு மிக எளிமையாக, அடக்கமாக இருப்பவர் கூட ''சீக்கிரம் சென்ட் கொண்டு வாங்க'' என்று கடைநிலை ஊழியரைக் கேட்பார். எனக்குத் திகைப்பாக இருக்கும். இது பற்றிக் கேட்டால் தப்பாக எடுத்துக் கொள்வார்களோ? சென்ட் போட்டுக் கொள்வது ஒன்றும் தவறில்லையே என்று நினைப்பேன். ஆனால் ஏன் மதியம் மட்டும் அனைவரும் கேட்கிறார்கள் என்ற சந்தேகம் எழுந்தது.

நான்கைந்து தினங்கள் கழித்து தயக்கத்துடன் சீனியரைக் கேட்டேன். "ஓ! நீ புதியவளாக இருப்பதால் போட்டுக் கொள்ளும் சென்ட் என்று நினைத்து விட்டாய். இந்த Sent என்பது மற்றக் கிளைகளுக்கு அனுப்பும் தந்தி ரிஜிஸ்தரின் சுருக்கமான பெயர் Telegrams Sent Register'' என்று விளக்குகிறார் அனைவரும் இதைப் பற்றி கேள்விப்பட்டு ஆரவாரத்துடன் சிரித்தனர்.

— சுமதி.





பெண் வங்கி ஊழியர்களால் ஏற்பட்ட சிரமம்

நான் ஒருமுறை கோவையில் ஒரு வங்கிக்கு டிராப்ட் எடுக்கச் சென்றிருந்தேன். காசாளரிடம் பணம் செலுத்தி விட்டு, சிறிது நேரம் காத்திருந்தேன். டிராப்ட் எழுதும் பெண்மணி உடனே எழுதித் தராமல், அருகிலுள்ள பெண் ஊழியரிடம், முந்தைய நாள் வீட்டில் நடந்த கதைகளைப் பேசிக் கொண்டு மெதுவாக எழுதித் தந்தார். இறுதியில் எனக்கு டராப்ட் கைக்கு வந்து சேர இருபது நிமிடங்கள் ஆனது. எங்கள் ஊருக்கு வந்து என் கணவரிடம் (அவர் ஒரு வங்கி ஊழியர்) இது பற்றிச் சொன்னபோது, அவர், ''எங்கள் வங்கியில் இது போல நடக்காது. ஏன் தெரியுமா? எங்கள் வங்கியில் ஒரே ஒரு பெண் ஊழியர்தான் உள்ளார்' என்று ஜோக்கடித்தார். பல பெண்கள் வேலை செய்யும் இடத்தில் இது போல நடப்பது சகஜம். பெண் ஊழியர்கள் மற்றவர்களுக்குச் சிரமம் ஏற்படுத்தாமல், தங்கள் வேலைகளை முடித்து விட்டு பிறகு தங்களுக்குள் பேசிக் கொள்வது நல்லது.

ச. காஞ்சனா.

# 100% Security!

# High returns!!



# Hinduusthan Deposit Plans

## A Nationalised Bank's Cash Certificate & Registered mortgage of a Govt. approved Property

இந்தியாவிலேயே
முதன் முறையாக

வங்கிச் சான்றிதழும் ரிஜிஸ்தர்
செய்யப்பட்ட சொத்து
அடமான பாதுகாப்பும்
(பதிவு பெற்ற) இணைந்து
பாதுகாப்பு செய்யப்பட்ட
இருமடங்கு பாதுகாப்புடன்
மும்மடங்கு பயன் அளிக்கும்
பண முதலீட்டுத் திட்டம்

That's not all. You get a handsome interest at regular intervals of your choice. And in the end a surprise bonus too.

What's more? At the time of maturity if you desire to buy property from us you will get a rebate.

**Hinduusthan Deposit Plan have several schemes to suit your needs - short or long term. Choose any of them.**

*For further details contact :*

**HINDUUSTHAN FINANCE**

(A unit of Muralis Estat)

12, Ramaswamy Street, T.Nagar,
Madras-600 017. Phone : 441448

# நிவர்த்திகள்

ஒரு நீண்ட லிஸ்ட எழுதி வைத்துக் கொண்டு வரதனும், ஆனந்தியும் சரிபார்க்க வரிசையாய் அடுக்கி வைத்தாள் காமாட்சி. வண்டியில் ஏற்றியபின், அந்த லிஸ்ட் பேப்பரை ஆனந்தியிடம் கொடுத்து, சத்திரத்தில் இறக்கும் போதும் இதே போல் லிஸ்டை சரிபார்த்து இறக்க வேண்டும் எனக் கூறினாள்.

வீடு வெறிச் சென்றாகிவிட்டது.

காமாட்சி மெதுவாக நடந்து, பட்சணம் செய்த கொடியடுப்பு உள்ள அறையில் பிரவேசித்தாள். இன்னும் பட்சணங்களின் மணம் அகலாமல் சூழ்ந்திருந்தது. வெறும் அடுப்பும், அறையுமே மட்டும் இருந்தாலும், அந்தக் காலி அறையே மணம் நிறைந்து இருந்தது. நானும் இந்த அறையைப் போலத் தானே...........

''மாமி. பாரதிக்குக் கல்யாணம்னு கேள்விப்பட்டேன். ரொம்ப நல்ல இடமாமே. பாவம்! காமுவோட வாழ்க்கையையும் சேர்நது வாழட்டும் இந்தப் பொண்ணு. யார் தாரை வாத்துத் தரா. நீங்களும் மாமாவுந்தானே. பெரியவாளா நீங்க இருக்கச்சே வேறே யார் செஞ்சாலும் நிறக்காது. இல்லையா மாமி.''

''ஸ்......... மெதுவா பேசுடி பாகி.''

புரியாமல் விழித்தாள் பாகீரதி.

''பாகி! அந்தச் சின்னஞ்சிறுசு முட்டாக்கு போட்டுண்டு, வெள்ளைப் புடவையுமா, அதுவுமா நிக்கறச்சே, எனக்குப் புதுசு கட்டிண்டு மணையில உக்கார மனசு வரலேடி பாகி. ஏதோ, கடமைன்னு என் வயத்துல பொறந்ததுகளுக்கு அவரோட நின்னு செஞ்சுட்டேன். ஆனா இதுக்கு நிற்க மனசு ஒப்பலையேடி பாகி..... என்ன பண்ணுவேன் சொல்லு.''

''மாமி! சமாதானப் படுத்திக்குங்கோ. உடைஞ்சு போகாதீங்கோ. அப்புறம் காமுவுக்கு யாரு சொல்லுவா?''

''இன்னிக்கெல்லாம் இருந்தா முப்பத்து மூணு வயசு கூட இருக்காதுமே. கண்ணும், மூக்கும் என்னமா திருத்தி வச்சாப்புல ஜொலிக்கிறு. பார்த்துப் பார்த்து ஆங்கலேடி மனசு. இந்த சுப்புணி கடன்காரன் இப்படி இவளை மழுங்கடிச்சுட்டானே. போறவன், இவளை கட்டிகிறதுக்கு முன்னேயே போயிருக்கக் கூடாதா? ஒரே வயத்தெரிச்சலாப் போயிருக்குமே. இப்போ நித்யம் பார்த்துப் பார்த்து வயிறு எரிய வேண்டியிருக்கே. பாழும் யமன் இவ வாழ்க்கையை இப்படி முறிச்சு வாயிலே போட்டுண்டுட்டானேடி பாகி....''

ஏன் கேட்டோம் என்றாகி விட்டது பாகீரதிக்கு. மகனைக் கூட மறந்து மருமகளுக்காகக் கதறும் மாமியாரை அதிசயத்துடன் பார்த்தாலும், மனம் அவள் கால்களில் பணிந்தது இப்படியும் ஒரு பிறவியா என்று.

''பாகி, அவ மச்சினங்கள்ள யாராவது ஒருத்தரை தாரை வார்த்துத் தாங்கோன்னு சொல்லிட்டேண்டி. என்னால தாங்க முடியாதுடிம்மா.''

இத்தனையையும் மறைவிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த காமாட்சிக்கு மயிர்க்கூச்செடுத்தது.

உடம்பைச் சிலிர்த்துக் கொண்டாள். ஸ்வாமி அறையின் முன் நின்றாள். ஏற்றிய விளக்கு சுடர் விட்டுப் பிரகாசிக்க, அப்படியே விழுந்து வணங்கினாள்.

'ஈஸ்வரா! நீருவுக்கு நல்ல வாழ்க்கையைக் கொடு. என் மாமியாரைப் போலவே, இந்த வீட்டுப் பொண்களுக்கும் மாமியார் நல்லவளா இருக்கட்டும். ஒரு குறையுமில்லாம, க்ஷேமமா வாழட்டும்.

எழுந்து வாசற்புறம் வந்து நின்றாள்.

வாழைக் குலையுடனும், பூவுடனும் இரண்டு பெரிய வாழை மரங்கள் வாசலில் இருபுறமும் தூண்கள் போல் நின்றன. இடையில் மாமரத்திலிருந்து கொத்து, கொத்தாகவே இலைகளைப் பறித்துத் தோரணம் கட்டி தொங்க விட்டிருந்தான் வேடியப்பன்.

வீட்டிற்கும் வாசலுக்கும் இடையிலுள்ள இடத்தில் ஆனந்தி போட்டிருந்த மாக்கோலம், செம்மண் பூச்சுடன் கண்களைப் பறித்தது.

'ம்..... என்னமா கை வேலை செய்யறது. எவ்வளவு நல்ல பொண்ணா இருக்கு. இதுக்குப் போய் இப்படி ஒரு பெத்தவா கிடைக்கணுமா. போன ஜன்மத்துப் பாவம்......

கார் வந்து 'சர்' ரென்று நிற்க, கிரிஜாவும், வனஜாவும் ஓடி வந்தார்கள்.

''என்னடி, என்ன வேணும்? பிள்ளை வீட்டுக்காரா வந்துட்டாளா? ஏதாவது மறந்து போயிட்டேளான்ன.....''

''பாட்டி! நம்ம வீட்ல எல்லா கல்யாணமும் சேர்ந்து வறது பாட்டி. கிரிஜாவுக்கும் இனிமே மாசம் மூணு நாள் லீவு எடுக்கணும் பாட்டி.''

கிரிஜா 'சுர்' ரென்று முகத்தை வைத்துக் கொண்டு, பாட்டியை கீழ் நோக்குக் கண்களால் பார்த்தபடியே, உதட்டை மடித்து கடித்தபடியே நின்றாள்.

''இதெல்லாம் இப்படி கல்யாணத்துல நடக்கறது சகஜந்தான் வனி. சகுனம் கூடத் தெரியுமா கிரிக்குட்டி. இதோ இப்பவே வந்துடறேன் இரு.''

உள்ளே சென்று, அங்கு ஹாலில் போட்டிருந்த கோலத்தின் மேல் ஒரு மணையைப் போட்டாள். பாலும், பழமும் தட்டில்

கொண்டு வந்து வைத்தாள். ஆரத்தி கரைத்தாள்.

"வாம்மா கிரி. வனஜா நீயும் வா."

கிரிஜாவை உட்கார வைத்து, அவள் கையில் பாலும், பழமும் கொடுத்தாள். வனஜாவை ஆரத்தி எடுக்கச் சொன்னாள். வெட்கத்துடன் தலையைக் கவிழ்ந்திருந்த கிரிஜாவைப் பார்க்கப், பார்க்க சிரிப்பு வந்தது காமாட்சிக்கு.

"வனஜா! குழந்தைக்கு வேணும்கறதை எடுத்துக் குடுத்தியாம்மா. மாடிலே பாத்ரூமுக்குக் கூட்டிண்டு போ. எப்படி ஜாக்கிரதையாயிருக்கணும்னு சொல்லிக் குடும்மா."

"வாவேண்டி கிரி. சமயம் பாத்து உக்காந்தே பாரு. சீக்கிரமா வா. நான் சத்திரத்துக்குப் போகணும். அம்மா, பாவம் ஒருத்தியாவே என்ன செய்வா. ரெண்டு நாள் கழிச்சி வந்திருந்தா என்ன. அழையாத விருந்தாளியா நல்ல நாள் பாத்துண்டு 'போகக்'குனு வந்தாச்சு..."

கிரிஜா லேசான விசும்பலுடன் அழத் தொடங்கினாள். ஆசை ஆசையாய், அக்காவின் கல்யாணத்திற்காகக் காத்திருந்து என்ன? எந்த வேளைக்கு எந்த டிரஸ் என்று திட்டமிட்டு, அதற்குத் தகுந்தாற் போல் வளையல்கள், ரிப்பன் வாங்கி செட்டாய் அடுக்கி வைத்துக் கொண்டதென்ன? இப்போ கல்யாணத்துக்கே போக முடியாமல் ஒதுங்கும்படியாய் இப்படி ஒரு நிலைமை நமக்கு வந்துடுத்தே......

வெட்கம், ஆத்திரம், அவமானம் எல்லாமாக சேர்ந்து குமுறிக் கொண்டிருந்தவளுக்கு, வனஜாவின் வார்த்தைகள் கிளறி விட அழுகை வெடித்தது.

"ஏனி! என்னம்மா நீ இப்படி வாயப் பெருக்கறே. குழந்தை பாவம் மொதல்லயே பிரமிச்சிருக்கா. இன்னும் நீ கிளறிவிடாதே. பேசாம சொன்னதை செஞ்சுட்டு நீ போ. அப்புறமா சித்தி, பெரியம்மாவை வந்துட்டுப் போகச் சொல்லு. அம்மாவைக் கவலைப் படாம இருக்கச் சொல்லு. போ. போம்மா கிரி.......

வனஜா போனபின் கம்மென்று உட்கார்ந்திருந்த கிரிஜாவிடம் வந்தாள்.

"கிரிக்கண்ணு, சந்தோஷமாயிருக்கணும்மா. நீரு கல்யாணத்தைப் பாக்க முடியலேன்னு என்ன. வீடியோலே பாத்துட்டாப் போச்சு. இதுக்கெல்லாம் உம்முனு இருக்கலாமா........

"பாட்டி. ராத்திரி தனியா படுத்துக்க பயம்மாருக்குப் பாட்டி. அதுவும் இன்னிக்கு வீட்ல யாருமே இல்லியா. ரொம்பவும் பயமாயிருக்குப் பாட்டி........."

"அசடுன்னு அசடுதான். நாந்தான் இருக்கேனே. இராத்திரி உன்னோடயே படுத்துக்கறேன். கார்த்தாலே எழுந்து குளிச்சுட்டாப் போறது. அவ்வளவுதானே. கிரி. டிபன் சாப்பிட்டியா கண்ணு....."

"மைசூர்பாகு எவ்ளோ பெரிசா பண்ணியிருந்தா பாட்டி. அதுவும் போண்டாவும், சட்டினியும் ரொம்ப நல்லா பண்ணியிருந்தா. ராத்திரி சாப்பாட்டுக்கு சோமாசி பண்ணிண்டிருந்தார். போய் பாத்துட்டு வந்தேன். ஜோரா பண்றார் பாட்டி."

"போறது போ. யாராவது டிபன் கேரியர்ல கொண்டு வருவா. இடுப்பு, வயிறு, வலிக்கிறதாம்மா. வலிச்சா சொல்லு. கஷா



யம் வச்சுத் தறேன். ஹாட்—வாட்டர் பேக்குல வெந்நீர் போட்டுத் தறேன். இடுப்புக்குக் கீழே வச்சுண்டு சித்த நேரம் மல்லாக்கப் படுத்துக்கோ. வலி கொறையும்.''

''வேண்டாம் பாட்டி. பொறுத்துக்கறு மாதிரிதான் இருக்கு. நீரு கல்யாணம் பாக்க முடியலையேன்னுதான் வருத்தமாயிருக்கு பாட்டி.''

''வனஜா, ஜலஜா அவான்னாம் இல்லையான்ன. அவா கல்யாணத்தும் போது ஜமாய்ச்சுடுவியாம். இரு பெட்ஷீட் தறேன். போட்டுண்டு படுத்துக்கோம்மா கிரி.''

நீரஜாவின் கல்யாணமும், கூடவே கிரிஜாவின் திரட்டுக் குளியலுமாய் வீடு சகஜ நிலைக்கு வர ஒரு வாரம் பிடித்தது. அதிகம் யாரையும் கூப்பிடாவிட்டாலும், குறையில்லாமல், வந்த உறவினர்களையும், நீரஜா வீட்டினரையும் கூப்பிட்டு, கிரிஜாவிற்கான சடங்கை விருந்தோடு குறைவில்லாமல் செய்தாள் காமாட்சி.

திடீரென்று இந்த நாலைந்து நாட்களிலேயே ஒரு பெரிய மனுஷத்தனம் தானாக வந்து கிரிஜாவிடம் குடி கொள்ள, அதுவே ஒரு களையையும், அழகையும், கம்பீரத்தையும் தந்தது. வெட்கம் உடல் பூராவும் பரவியிருக்க, அவளின் அந்த சிரித்த முகத்திற்கு திருஷ்டி சுழித்தாள் காமாட்சி. பருவம்தான் ஒரு பெண்ணின் உடலில் எத்தனை மாற்றங்களை வர்ண ஜாலமாகச் செய்கிறது.

முதலில் அவசரத்தில் பார்த்ததினால், எல்லா உறவினர்களும் ஊருக்குச் சென்ற பின் இவர்கள் மட்டுமாக நீரஜாவின் கல்யாணத்தை வீடியோவில் பார்த்தார்கள். வரதனும் வந்திருந்தான். பொங்காலியும், வேடியும் ஓர் ஓரமாய் உட்கார்ந்தார்கள்.. ஆனந்தியையும் கூப்பிட்டு விட்டு வந்தான் கிரிஜா.

வீடியோ ஓட ஆரம்பித்தது.

''பாட்டி! நீருவைப் பாரேன். ஒம்பது கஜம் கட்டிண்டு தகாபுகான்னு எப்படி இருக்கா மாமி மாதிரி.''

''' அம்மா! நீ சின்னப் பொண்ணு மாதிரி எவ்வளவு நல்லாயிருக்கேம்மா. அப்பா தான், தொந்தி போட்டுட்டார்.''

''அட..... பொங்காலியும், வேடியும் எப்பிடி பல்லைக் காட்டிண்டு நிக்கிறு பாறேன் பாட்டி. ஏய் வேடி!· புது சட்டை, வேஷ்டியில நீதான் மாப்பிள்ளை மாதிரி சும்மா ஜம்முனு இருக்கே.....''

''போங்கய்யா, சும்மா'என்னைக் கிண்டல் பண்ணிகிட்டு'' நாணிக் கோணி சிரித்தான் வேடி.

திடீரென்று வனஜா கூவினாள்.

''பிரபுண்ணா, பிரபுண்ணா. ப்ளீஸ் ரீவைண்ட் பண்ணேன். வரது அங்கே யாரையோ பார்த்து கையால என்னமோ ஜாடை பண்றாப்புல இல்லே.....''

வரதுவின் முகம் வெளுத்தது. ஆனந்தியின் கண்களில் மிரட்சி.

ரீவைண்ட் செய்து, ஸ்லோ மோஷனில் போட்டபோது, ஆனந்தியிடம் அவன் என்னமோ ஜாடை காட்டுவதும், அவள் சிரித்துக் கொண்டே வெட்கத்துடன் தலையைக் குனிந்து, அவன் கையிலிருந்த ஏதோ சாமானைப் படக்கென்று பிடுங்கிக் கொண்டு வெளியே வரவும், காட்சிகளும் மாறின.

''பாட்டி! நீரஜா கல்யாணம், சும்மா சொல்லக் கூடாது, கூடவே எத்தனையோ பேருக்கு, எத்தனையோ விதத்துலே உதவியா இருந்திருக்கு. அதுக்கு சாட்சியா இந்த வீடியோ வேறே. சீக்கிரமா இன்னொரு கல்யாண சாப்பாடு எதிர் பார்க்கலாம்னு நினைக்கிறேன். என்ன வரதன் சார்? சௌகரியம் எப்படி? பிரபுண்ணாவை முந்திடுவே போலிருக்கு....''

கிண்டலாக அவன் பேசவும், எல்லாரும் சிரிக்க ஆனந்தி எழுந்து ஓட யத்தனிக்க, வனஜா அவள் கையைப் பிடித்து இழுத்து உட்கார வைத்தாள். வரதன் முகம் சிவந்து போயிற்று.

''பாட்டி, முறுக்கு, அதிரசம்லாம் என்னமா விழுந்திருக்கு பாட்டி கலர் கலரா. ப்பா..... ஃபெண்டாஸ்டிக்......''

தான் நேரில் பார்க்க முடியாததை, வீடியோவில் பார்த்துப் பார்த்து ரசித்தாள் கிரிஜா.

ரிஸப்ஷனில் மஹாதேவனும் சூட்டும், கோட்டும், டையுமாய் நின்றதைப் பிரபுவிலிருந்து அனைவரும் விதவிதமாய் விமர்சிக்க, பாரதி, கணவனைப் பார்த்து நாணத்துடன் சிரித்தாள்.

ஒருவருக்கு நடக்கும் கல்யாணம்தான் என்றாலும், எத்தனை பேருக்கு, எத்தனை வித சந்தோஷங்களை அள்ளித் தருகிறது. பெரியவர்கள் அறியாமலா இத்தனை சடங்குகளைக் கல்யாணத்தில் ஏற்படுத்தினார்கள்.

ஆயிற்று. பாரதியும், மஹாதேவனும் கிளம்பும் நாளும் வந்தது. நீருகல்யாணம், நீரு கல்யாணம் என்று சொன்னது போய், இப்போது கல்யாணம் ஆகி நிமிஷமாய் ஒரு மாதமும் ஓடி விட்டது.

''அம்மா! போய்ட்டு வரேம்மா. நீருவுக்கு ஏதாவது விசேஷம்னா எழுது. ஓடி வந்துடறேன். நீ இருக்கற தைர்யத்துலதாம்மா நான் நிம்மதியாயிருக்கேன். வரட்டுமாம்மா.''


''பாரதி, என்ன இந்த தடவைப் புதுசா போறியா? மாப்பிள்ளையை இந்தப் பக்கமா மாத்தலுக்கு எழுதித் தரச் சொல்லு. நீரு

---

உளுந்து தோசை செய்யும் பொழுது, உளுத்தம்பருப்புடன் ஒரு கப் ஜவ்வரிசியையும் கலந்து அரைத்தால், தோசை நன்கு வார்க்கவருவதுடன் (மெல்லியதாக) ருசியாகவும் இருக்கும். உளுத்தம்பருப்பையும் குறைத்து உபயோகிக்கலாம்.


— சத்யா

---




SPL





வுக்கு விசேஷம்னு தந்தியே குடுத்துடறேன். பிரபுவுக்குத்தான் இனிமே பாக்கணும். நீயும் பாரு. நானும் இங்கே சித்தப்பாட்டேயும் சொல்லிவிட்டிருக்கேன். நிச்சியமானு வரவேண்டியது தானே....."

மகளை அணைத்துக் கொண்டு அவள் பேசவும், பாரதியால் தாங்க முடியவில்லை. அதுவும் அம்மாவின் மனக் கிடக்கைகளை அறியாத அவளுக்கு, இந்த முறை அம்மா கொஞ்சமாக மனக் கதவைத் திறந்து விட்டதையே அவளால் தாங்க முடியவில்லை. அதன் பாதிப்பு இன்னும் அவளிடம் இருந்தது. அதன் விளைவே கண்ணீர்.

நீரஜா ஒருத்திதான் வீட்டில் இல்லையென்றாலும், அதுவே பெரியதாகத் தெரிந்தது.

நீரஜாவைப் பார்க்க வேண்டும் போல காமாட்சிக்கும் கூட மனசு துடித்தது. ஆனால் அடக்கிக் கொண்டாள். குழந்தைகள் சந்தோஷமாயிருந்தா சரி. உள்ளூர்ல இருக்கான்னு நாம சும்மா, சும்மா தொந்தரவு பண்ணக்கூடாது. வனஜா, ஜலஜா கூட காலையில சாப்பிடறச்சே எப்படி பேசினு. நாமளும் அதுக்கு எடம் கொடுக்கக் கூடாது. கொஞ்ச நாள் போனா சரியாப் போறது.

"பாட்டி! இத்தன நாள் நம்ம வீட்ல இருந்துட்டு, இப்ப திடீர்னு வேறே வீட்ல போய் இருக்கறது கஷ்டமாயிருக்காதா பாட்டி. மனசுல ஒண்ணும் தோணாதா. நீருவுக்கு அவாம் ஒத்துண்டிருக்குமோ."

வாயே திறக்காத ஜலஜாதான் கேட்டாள்.

"ஜலஜா! இப்ப இப்படிக் கேக்கற நீ. நாளைக்கே கல்யாணம் ஆனா, அந்த மனுஷனை விட்டு இம்மியளவு கூட நகரமாட்டே பாரு. அதுதான் ப்ரம்மா போடற முடிச்சு. அதுக்கு மகத்துவம் ஜாஸ்தி. அதனாலதான் இரும்பும், காந்தமுமா ஈர்ப்பு சக்தி ஏற்படறது. இப்ப என்ன தெரியும்? அப்புறமா இந்த பாட்டி உசுரோட இருந்தேன்னு உன்னைக் கேக்காமயா இருக்கப் போறேன்."

"பாட்டி! அப்படில்லாம் சொல்லாதே பாட்டி. எனக்கும் கல்யாணமாற வரைக்கும் நீ இருக்கணும். ஆமாம். நான் பகவான் கிட்டே தினமும் அதைத்தான் வேண்டிக்கப் போறேன். அதனால இனிமே நீ இப்படில்லாம் பேசாதே பாட்டி. ப்ளீஸ்....."

குரல் உடைந்து, பேச முடியாமல் தட்டில் இருந்த சாதத்தை சாப்பிடாமல் அளைந்து கொண்டிருந்தாள். கண்கள் சொரிந்த நீர் தட்டில் விழுந்து தெறித்தது. குனிந்த தலை நிமிரவில்லை ஜலஜா.

வனஜாவிற்கும் மனது நெகிழ்ந்து போனது.

"பாட்டி! பொறந்தவா எல்லாரும் ஒரு நாள் சாகத்தான் போறா. அதுக்காக நாம அதையே எதிர்பார்த்துண்டு இருக்கணுமா. அது வர போது வரட்டும். அதைப் பத்திப் பேசி நாம அனாவசியமா மனசை கஷ்டப்படுத்திக்கணுமா. ஜலஜா தான் ஒரு பேசா மடந்தை. அவளே என்னமோ வாயைத் தொறந்து பேசினாலே அதிசயமாயிருக்கற போது, நீ இப்படி அவ மனசைக் கஷ்டப்படுத்தணுமா. வயசானவதான் மொதல்லே போவான்னு என்ன நிச்சயம்? என்னமோ நானே போய்ட்டேன்னாக்க..."

"வனி... நிறுத்துடீ... மேல்கொண்டு பேசாதே..." ஜலஜாவும், கிரிஜாவும் வாயடைத்துப் போய் வனஜாவை விறைத்துப் பார்த்தனர்.

"பாட்டி! இப்போ நீ எப்படி பதர்றே. அந்த மாதிரிதானே நீ சொன்னாலும் எங்களுக்கு இருக்கும்? இப்ப புரிஞ்சுதா? இனிமே இந்த மாதிரி பேசாதே. ஜலஜா சாப்பிடக் கூட இல்லே பாரு. வயசானாலே இந்த மாதிரியெல்லாம் பேசணும்கறதை வழக்கமா வெச்சுண்டிருக்கேளே. அதெல்லாம் விடணும் பாட்டி. ஃபாரின்லே பாரு எண்பது வயசுக் கிழவனோ, கிழவியோ கூட புதுசா கல்யாணம் பண்ணிண்டு ஹனிமூன் போவா. அறுபது வயசுலேயும் பொம்மனாட்டிகள் குழந்தை பெத்துக்கறதை கேவலமா நினைக்கறதில்லே. இங்கே என்னன்னா, அம்பது வயசு ஆனவொண்ணேயே கிழட்டுத்தனத்தை வேணும்னே வரவழைச்சுண்டு, பேச்சுலயும், நடத்தையிலயும் காட்ட ஆரம்பிச்சுடறா......."

"வனிக்கா! அப்போ எதுராத்துல சஷ்டியப்த பூர்த்தின்னு அறுபதாம் கல்யாணம் பண்ணிண்டாளே. அந்த மாதிரி கெழவனு ஆனப்புறமாவா குழந்தை பெத்துப்பா. அய்யய்ய..... அப்போ, அப்பாவுக்கும், குழந்தைக்குமே வாயில பல்லேயிருக்காது. தமாஷ்தான். ஹி... ஹி..."

கிரிஜா சொல்லிவிட்டுச் சிரிக்கவும், எல்லாருக்கும் அந்த சிரிப்பு தொத்திக் கொள்ள ஜலஜாவும் நடந்ததை மறந்து கண்களைத் துடைத்தபடியே சிரித்தாள்.

வனஜாவின் பேச்சில் இருந்த உண்மைகளை உணர்ந்த காமாட்சிக்கு வியப்பான வியப்பு.

அம்மா.... டீ.. நான் பார்த்து, இதுகளோட அசிங்கத் துணியை மாற்றி, குளிப்பாட்டி, வளத்தது எல்லாம் பொய்யா போச்சே. என்னமா இதுகள் பேசறது. எவ்வளவு நல்லா புத்தி சொல்லிட்டா. இன்னும் நாம தெரிஞ்சுக்க வேண்டியது வேணது இருக்குடிம்மா. தகப்பன் சாமியா, எத்தனை புத்தி இந்த வனஜாவுக்கு. குழந்தை தீர்க்காயுசா நன்னாயிருக்கணும். இப்படி பேசுமோ. பகவானே அவ ஏதோ உளறின்னு விட்டுடுப்பா. ஒண்ணும் பண்ணிடாதே!"

மனத்தில் ஏதோ கலவரம் சூண்டது காமாட்சிக்கு.

—தொடரும்

தேங்காய்த் துவையல் அரைக்கும் பொழுது, சிறு துண்டு இஞ்சியையும் சேர்த்து அரைத்தால் துவையல் மணமாகவும், சுவையாகவும் இருக்கும்.

# இது பெண்களுக்கு மட்டும்!



உலகம் தாய்மைக்கு என்றுமே ஒரு தனியிடத்தை, தனிச் சிறப்பைத் தந்திருக்கிறது. என்னதான் பெண் விடுதலை இயக்கங்களும் பெண்ணுரிமை போராட்டக்காரர்களும் "பெண் என்ன பிள்ளை பெறும் இயந்திரமா?" என்று வாய் ஓயக் கத்தினாலும், ஒன்றிரண்டு குழந்தைகளைப் பெற்று அவர்களை நன்முக உருவாக்குவதே ஒரு சராசரிப் பெண்ணின் வாழ்க்கை இலட்சியமாக இன்றும் தொடர்ந்து இருந்து வருகிறது.

உரிய காலத்தில் வயதுக்கு வந்து, மாதவிலக்கு ஒழுங்காக வந்து, திருமணத்திற்குப் பின் உரிய காலத்தில் கருத்தரித்து, காலத்திற்கேற்றவாறு கருத்தடை முறைகளையும் பின்பற்றி, பின் உரிய காலத்தில் மாத விலக்கு எந்தவிதச் சிக்கலும் இல்லாமல் நின்று போக ஓர் ஒழுங்கான வரைமுறைக்கேற்றபடி தான் பெண்களின் உள்ளுறுப்புகள் அமைக்கப்பட்டுள்ளன. இது சீராக நடந்து விடும். ஒரு சில அதிர்ஷ்டக்காரப் பெண்களின் உடலில் எந்த விதமான ஆரோக்கியக் கோளாறும் இருக்காது. ஆனால் இந்த நீண்ட பயணத்தில் எங்காவது தடங்கல் ஏற்பட்டால் — அங்கே தான் பிறக்கின்றன பிரச்னைகள்.

சென்னை நகரின் பிரபல மகப்பேறு மருத்துவர் டாக்டர் ஈ.வி. கல்யாணிகூறுகிறார்.

"எப்போது ஒரு பெண்ணின் உடல் உறுப்புகள் கருத்தரித்து, மற்றொரு உயிரைத் தாங்கத் தயாராகின்றதோ அந்தப் பருவத்தைத்தான் 'Puberty' என்று குறிப்பிடுகிறோம். இப்பருவத்தைப் பொதுவாகப் பெண்கள் அடைவது பதினொரு வயதிலிருந்து பதினைன்கு வயதிற்குள். சில உயர்மட்டக் குடும்பங்களில், ஊட்டச்சத்து மிகுதியின் காரணமாக இதற்கு முன்னாலும் பெண்கள் வயதுக்கு வருவதுண்டு. சில வேளைகளில் இது 17, 18 வயது வரைத் தாமதமானாலும், மார்பக வளர்ச்சி, ஜனன உறுப்பின் வளர்ச்சி போன்ற மற்ற உடல் மாற்றங்கள் சாதாரணமாக இருந்தால் கவலைப்பட வேண்டியதில்லை. ஆனால் சினை உறுப்பில் கட்டி ஏதும் இருக்கிறதா என்று மட்டும் மருத்துவரிடம் சென்று சோதித்துக் கொள்ள வேண்டும். அப்படிக் கட்டிகள் இருந்தால், அது அறுவைச் சிகிச்சை மூலம் நீக்கப்பட்ட பிறகு மாதவிலக்கு வருவதில் பிரச்னை இருக்காது.

இந்தப் பருவத்துப் பெண்களுக்குக் கிராமப் புறங்களில், காலையில் எழுந்தவுடன் வெறும் வயிற்றில் வேப்பங் கொழுந்தை உப்புடன் கொடுப்பதையும், பருவத்துக்கு வந்தபோது உளுந்தங் களியில் நல்லெண்ணெய் ஊற்றிக் கொடுப்பதையும் கேள்விப்பட்டிருக்கிறோம்.

"உளுந்தங் களியா, இக்காலப் பெண்களுக்கா?" புருவத்தை உயர்த்துகிறார் சென்னை வி.எச்.எஸ்.ல் உணவியல் நிபுணராகப் பணியாற்றும் செல்வி.பி.குந்தளா. "ஏற்கெனவே "தலைமுறை இடைவெளி" என்ற பெயரில் இருபது வயதுக்கு மேற்பட்டவர்களைக் கூட இளக்காரமாகப் பார்க்கும் நம் இளைய தலைமுறை, 'களி, இளி' என்றெல்லாம் பேசினோமானால் நமக்குப் பைத்தியக்காரப் பட்டத்தையே சூட்டி விடுவார்களே. உளுந்தங்களி கொடுக்கப்பட்டதே அதன் புரதச்சத்திற்காகத்தான். அதையே நாம் இக்காலத்துக்குத் தகுந்தவாறு சற்று மாற்றிக் கொடுக்கலாமே. ஒரு வகைப் பருப்பிற்கு பதிலாக அதை ஒரு தானிய வகையுடன் சேர்த்துச் சமைக்கலாம். இது அந்த உணவின் சத்து விகிதத்தை அதிகரிக்கும். கீழ்க்கண்ட 'ரெடி மிக்ஸை'ச் செய்து பார்க்கிறீர்களா?

ராகி 900 கிராம், வறுத்த கடலைப்பருப்பு 300 கிராம் (அல்லது எந்த ஒரு தானியமும், பருப்பும் 3:1 என்ற விகிதத்தில்) ராகியை அதன் வைட்டமின் சத்து அதிகரிப்பதற்காக முளை கட்டுங்கள். ஈரச்சத்து குறைந்து நெடுநாள் கெட்டுப் போகாமலிருப்பதற்காக வெயிலில் காய வையுங்கள். சுவை கூடுவதற்காக எண்ணெய் விடாமல், வெறும்

வாணலியில் வறுத்துக் கொள்ளுங்கள். இரண்டையும் மாவாகத் திரித்து காற்றுப் புகாத ஜாடிகளில் வைத்துக் கொள்ளுங்கள். இந்த மாவை உங்கள் கற்பனைக்கும், விருப்பத்துக்கும் தகுந்தவாறு பற்பல உணவுப் பொருட்களாகத் தயாரிக்கலாம்.

2 டேபிள்ஸ்பூன் மாவை 2 கோப்பை குளிர்ந்த தண்ணீரில் கரைத்துக் கொண்டு 2 நிமிடங்கள் கொதிக்க வைத்து அதில் பால், வெல்லம் சேர்த்துப் பாயாசமோ இனிப்புக் கஞ்சியாகவோ செய்யலாம். சற்று இறுக வைத்து அல்வாப் பதத்திலும் இறக்கிக் கொள்ளலாம். நீரில் கரைத்துக் கொதித்த மாவில், இனிப்புப் பிடிக்காதவர்கள், உப்பும், மோரும் கலந்து அருந்தலாம். சப்பாத்தி, பரோட்டா, ரொட்டி, தோசை, புட்டு, பக்கோடா என்ற பல அவதாரங்கள் எடுக்கவும் இந்த மாவு ஏற்றது.

பருவம் அடைந்த பெண் ஒரு புதுவாழ்வின் வாயிலில் நிற்கிறாள். உடலில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள், உள்ளத்திலே தோன்றும் புதிய கிளர்ச்சிகள் யாவுமே அவளுக்குப் புதிய பரிமாணங்களிலே தோன்றுகின்றன. இரத்தப் போக்குச் சற்று அதிகமாகி விட்டாலும் கிலி பிடித்து விடுகிறது. அடிவயிறு சற்றுக் கனமானாலும், வலியால் உயிரே போகிற மாதிரி இருக்கிறது. "இளம் பெண்களுக்கு மாத விலக்கு பற்றிய ஓர் ஆரோக்கியமான கண்ணோட்டத்தை ஏற்படுத்த வேண்டியவர்கள் அவர்களுடைய தாய்மார்களே. இது இயற்கையாக ஏற்படும் உடலியல்மாற்றம். இதற்காகப்பயப்படவோ, அன்றாட நடவடிக்கைகளிலிருந்து விலகியிருக்கவோ வேண்டிய அவசியமேயில்லை என்கிறார் குந்தளா.

எண்ணப் போக்கிலே மட்டுமல்ல, உணவுப் பழக்கத்திலும் சரியான முறைகளைக் கடைப் பிடிக்க வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். 'உரிய நேரங்களில் உணவை உட்கொள்ள வேண்டும். சாப்பாட்டுக்கு இடையே'சிறுதீனிகளைக் கொறிக்கும்.பழக்கத்தைக் கட்டுப்படுத்திக் கொள்ள வேண்டும். அதிகமான அளவில் இனிப்புகளை உட்கொள்வது இந்தப் பருவத்தில் தேவையான அதிகமான கலோரிகளைக் கொடுக்குமே தவிர, புரதச்சத்துக் குறைவை ஏற்படுத்தும். வறுத்த வேர்க்கடலை புரதத்துக்கும் புரதம்; ருசிக்கு ருசி. பள்ளி செல்லும் மாணவர்கள் பள்ளி நேரத்துக்குச் செல்ல வேண்டுமே என்ற கவலையில் காலை உணவைக் கொறித்து விட்டு ஓடுவார்கள். மதிய உணவோ, தோழிகளுடன் சேர்ந்து அடிக்கும் அரட்டையிலும், விளையாட்டிலும், அலட்சியமாக ஒதுக்கப்பட்டு விடும். பள்ளியிலிருந்து திரும்பியதும், தாகமே முக்கியமாகத் தோன்ற தண்ணீரை நிறையக் குடித்துப் பசியையே மறக்கடித்துக் கொண்டு விடுவர்.

பள்ளிப் பருவம் முடிந்து கல்லூரியில் காலடி வைத்ததும் பெண்களில் பெரும் பகுதியினர் தம் எடையிலும், உடல் வடிவமைப்பிலும் பெருங்கவனம் செலுத்த ஆரம்பிக்கிறார்கள். என்றாலும் சமவயதினருடன் உல்லாசமாக வெளியே செல்லும் போது கடைகளிலே அணிவகுத்திருக்கும் குளிர்பான வகைகள், "Fast Foods" என்று தற்கால நாகரிகம் பெயர் சூட்டியிருக்கும் 'திடீர்' உணவுகள், ஐஸ்கிரீம் வகைகள், கேக் வகைகள் போன்றவற்றின் அழைப்புகளிலிருந்து தப்புவது மிகக் கடினம்.

மேற்கூறிய உணவு வகைகளிலே கொழுப்புச் சத்து மிகுந்து இருப்பதால் நம் உடலின் கொழுப்புத் திசுக்களின் எண்ணிக்கையை அதிகரித்துப் பிற்கால உடல் பருமனுக்கு வழி வகுக்கின்றன. **Diet** என்ற பெயரில் பட்டினியும் போடாமல், அதிகமாகவும் சாப்பிடாமல் சரியான உணவுப் பழக்கங்களை கடைப்பிடிப்பது இந்தப் பருவத்தில் மிக அவசியம். இந்தப் பருவத்தினருக்கான உணவுப் பட்டியலைத் தருகிறார்.

## சேர்த்துக் கொள்ள வேண்டிய உணவு வகைகள்:

1. பால், தயிர், பாலாடை, மோர்
2. பச்சைக் காய்கறிகள், பழங்கள் அதிக அளவில்.
3. கீரை வகைகள்.
4. முளைகட்டிய தானிய வகைகள்.
5. காய்கறி அல்லது அசைவ சூப் வகைகள்.
6. தீட்டாத, முழுத் தானிய உணவு வகைகள்.
7. அசைவ உணவுக்காரர்களுக்கு — முட்டை, மீன், கறி முதலானவை.

> தேநீர் தயாரிக்கும் போது துளசி இலைகளையும் போட்டால் (கொதிக்கும் தண்ணீரில்) தேநீர் மணமாகவும், அதே சமயம் ஜலதோஷத்திற்கும் நல்லது.
>
> — நிரஞ்சனா.

## கீழ்க்கண்டவற்றைத் தவிர்க்க வேண்டும் என்று கூறினால் இப்பகுதியைப் படிக்கவே மாட்டார்கள். எனவே மிதமாகவோ அல்லது அவ்வப்போதோ சேர்த்துக் கொள்ள வேண்டியவை:

1. சாக்லேட், கேக் வகைகள், ஐஸ்கிரீம்கள்.
2. ஒரு சத்துமேயில்லாத, வெறும் கலோரிகளை மட்டும் கொண்ட குளிர் பானங்கள்.
3. எண்ணெயில் பொரித்த உணவு வகைகள்.
4. மிகவும் சுத்திகரிக்கப்பட்ட மைதா போன்றவற்றில் செய்த பதார்த்தங்களை — அதிகம் சுத்திகரிக்கப்படுவதால் இவைகள் தம் உணவுச்சத்தை இழக்கின்றன.

## இப்பருவத்தினருக்கான மாதிரி உணவுப் பட்டியல்:

**காலை உணவு:**

(ஒரு தானிய வகையும், பருப்பு வகையும் சேர்ந்த) இட்லி/தோசை/பொங்கல்/கிச்சடி, புதினா/கொத்துமல்லி/கருவேப்பிலை/தக்காளி துவையல். பால்/அந்த வகையைச் சேர்ந்த பானம்.

**மதியம்:**

(பெரும்பாலும் 'பேக்' செய்து எடுத்துப் போவது போன்று) சாம்பார் சாதம், காய் கறி, தயிர்.

**சாயுங்காலம்:**

ரொட்டி 'சாண்ட்விச்' சுண்டல் பால். பால் வகையைச் சேர்ந்த பானம்.

**6 P.M.:**

ஏதாவது பழம்.

**இரவு உணவு:**

சாதம், சாம்பார், காய்கறி, தயிர்/சப்பாத்தி, கூட்டு, தயிர்.

**படுக்கப் போகுமுன்:**

பால் 1 கோப்பை.

அசைவ உணவுக்காரர்கள் மீன், இறைச்சி, முட்டை வகைகளைச் சேர்த்துக் கொள்ளலாம்.

**பருவ காலங்களில் வேப்ப மரத்தில் பூத்துக் குலுங்கும் வேப்பம் பூக்களை உதிர விடாமல் கொத்துக்கொத்தாகப் பறித்துப் போதுமான உப்பு, காயம் சேர்த்து ஜவ்வரிசி வடகக் கூழில் தோய்த்துக் காயப் போட்டு எடுத்து வைத்துக் கொண்டால், அவ்வப்போது பொரித்துச் சாப்பிட உபயோகமாகவும், ருசியாகவும் இருக்கும். மேலும் இரத்த அழுத்தம், சர்க்கரை சத்து போன்ற வியாதிகள் உள்ளவர்களுக்கு இந்த வடகம் ஒரு வரப்பிரசாதமான மருந்தும் கூட.**

**— கே. லலிதா.**

தற்காலப் பெண்களிடையே மிகவும் பிரபலமாக விளங்கும் மற்றொரு பெயர் 'PMT' எனப்படும் Pre Menstural Tension' அதாவது மாதவிலக்குக்கு முன்னால் ஏற்படும் கோபம், எரிச்சல், பதற்றம். மார்பகங்களில் வலி, உடல் எடை அதிகப்படுதல், தலைவலி, அடிவயிறு, இடுப்புப் பாகங்களில் அசௌகரியம் போன்றவை தோன்றலாம். மிக மிகச் சிலருடைய உணர்வுகள் அதீதமாகத் தூண்டப்பட்டு தற்கொலை முயற்சி, மற்றும் சட்ட விரோதச் செயல்களில் ஈடுபடச் செய்யலாம். (ஓர் ஆங்கில நாவலில் கொலையாளியை ஒரு பெண்ணாகவும், அவள் ஒவ்வொரு மாதவிலக்கின் முன்னும் மனநலம் பாதிக்கப்பட்டு ஒவ்வொரு கொலையைச் செய்வதாகவும் கற்பனை கட்டறுந்து ஓடியிருக்கிறது.) "Progesterone" என்ற ஹார்மோன் பற்றாக்குறையே இந்த PMTக்கு முக்கிய காரணம் என்கிறார் டாக்டர் ஈ.வி.கல்யாணி. அதனால் இந்த ஹார்மோன் மாத்திரைகளால் இந்த நிலை பெரிதும் கட்டுப்படுத்திவிடும் என்கிறார் அவர்.

'அந்தக் காலப் பெண்களாவது 'அந்த மூன்று நாட்களில் 'ஆசாரம்' என்ற பெயரில் கட்டாய ஓய்வு எடுத்தார்கள். ஆனால் பாருங்களேன்! 'என் மாமியார் இந்த விஷயத்தில் மட்டும் ரொம்ப 'மாடர்ன்' ஏனென்றால் நான் மூன்று நாட்கள் 'ஒதுங்கி' விட்டால் வீட்டு வேலைகள் 'அந்தப் பக்கம் விழுந்து விடுமே' என்று ரகசியமாக முணுமுணுக்கிறாள் ஒரு தோழி.

இல்லத்தையும், அலுவலகத்தையும் இரு பாரங்களாகச் சுமக்கும் இக்காலப் பெண்களுக்குக் களைப்பும் அதனால் உள்ளச் சோர்வும் வருவது தவிர்க்க முடியாதது. இருந்தாலும் இரத்த சோகை இவற்றுக்குக் காரணமாகாமல் கவனமாக இருக்க வேண்டும். அதற்கு முருங்கைக் கீரை, முளைக் கீரை போன்றவற்றையும், பேரீச்சம்பழம், முட்டைக்கோஸ், தக்காளி, வெங்காயம், பழவகைகள் ஆகியவற்றையும் தாராளமாக உண்ண வேண்டும் என்கிறார் குந்தளா. அடிக்கடி காபி, டீ போன்ற பானங்களை அருந்துவதையும், பாக்கை மெல்லுவதையும் தவிர்க்க வேண்டும்.

வயது ஏறிக் கொண்டே போகும்போது, நம் உடல் என்னும் இயந்திரத்திற்கும் வயது அதிகமாகிறது. பழுதாகும் வாய்ப்புகள் அதிகமாகின்றன. இரத்த அழுத்தம், இதய நோய்கள், சர்க்கரை வியாதி போன்ற பல பூதங்கள் உள்ளே நுழைய ஒரு சந்தர்ப்பத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றன. மணமாகி, குழந்தைகளும் பெற்றபின் கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடுவது உடல் நலத்துக்கு ஊறு விளைவிக்கும் என்பது டாக்டர் ஈ.வி. கல்யாணியின் கருத்து. மாத்திரைகளுக்குப் பதிலாக IUD எனப்படும் உடலுக்குள் பொருத்தப்படும் கருத்தடைச் சாதனங்களை உபயோகிக்கலாம். அல்லது கருத்தடை அறுவைச் சிகிச்சையைச் செய்து கொள்ளலாம். நாற்பது வயதிற்கு மேல் கடைப்பிடிக்க வேண்டிய உணவுப் பழக்கங்களைக் கூறுகிறார் குந்தளா. பொதுவாக உப்பைக் குறைக்க வேண்டும். (மோர் சாதத்துக்கு உப்புப் போட்டுக் கொள்வதைத் தவிர்க்கலாம்)

**குறைவாக உட்கொள்ள வேண்டிய உணவு வகைகள்:**

1. ஊறுகாய் வகைகள், எண்ணெயில் பொரித்த அப்பளம், வடகம் வகைகள்.
2. நெய், டால்டா, தேங்காய் எண்ணெய் க்ரூட் பாம் ஆயில் போன்ற கொழுப்புச் சத்து மிகுந்த உணவு வகைகள்.
3. ஐஸ்கிரீம், கேக் வகைகள்.
4. தேங்காய், முந்திரி, பாதாம், பிஸ்தா.
5. கிழங்கு வகைகள்.

இவற்றுக்குப் பதிலாகப் பச்சை காய்கறிகளையும், பழவகைகளையும் அதிகமாகச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.


ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்ளுங்கள்: ஒவ்வொரு குடும்பமும், அதன் இல்லத் தலைவியைச் சுற்றித்தான் சுழல்கிறது. எனவே தன் ஆரோக்கியம் குலையாமல் பார்த்துக் கொள்ள வேண்டியது அவருடைய கடமை.

**— நிர்மலா சக்கரவர்த்தி**

உணவுப் பதார்த்தங்கள் தயாரிப்பதற்கு, எப்படி சரியான விகிதத்தில் பொருட்களைச் சேர்ப்பது என்பதை அறிந்து கொள்ள எனக்கு பல்லாண்டுகள் ஆயின. அதைப் போலவே பல ஆண்டுகளுக்கு முன்பாக கண்டு கொண்டேன் அசல் நெய்க்குப் பதிலாக மாற்று: ஸன்ஃப்ளவர் பிராண்டு வனஸ்பதி. இந்தப் பக்குவத்தை செய்து பார்க்கும் போது நீங்களே கண்டு கொள்வீர்கள்!

**உருளைக்கிழங்கு ருமாலி வடை**

தேவையான பொருட்கள்: 2 சிறிய கோப்பைகளில், மசித்த உருளைக் கிழங்கு.



½ சிறிய கோப்பை கடலைமாவு,
5-6 பச்சை மிளகாய்,
¼ தேக்கரண்டி மஞ்சள் பொடி,
1 தேக்கரண்டி சீரகம்,
1 தேக்கரண்டி மல்லித்தூள், ¼ சிறிய கோப்பை புதிதாக துருவிய தேங்காய்ப்பூ;
பொடித்த கொத்தமல்லி இலை,
2-3 தேக்கரண்டி கசகசா
உப்பு,
ஸன்ஃப்ளவர் வனஸ்பதி.

**செய்முறை**

2 சிறு கோப்பைகள் கொள்ளும் அளவிற்கு, உருளைக்கிழங்கை அவித்து தோலுரித்து மசித்து எடுத்துக்கொள்ளவும். ருசிக்கேற்ப, மிளகாய் மற்றும் உப்பைச் சேர்க்கவும். கடலைமாவு, மஞ்சள் பொடி, சீரகம், மல்லித்தூள், அரைத்த மிளகாய் ஆகியவற்றை உருளைக் கிழங்கோடு சேர்க்கவும் பின்பு அதை நன்கு பிசையவும்.

தேங்காய்ப்பூ கொத்தமல்லி மற்றும் கசகசாவை சேர்த்து ஃபில்லிங் செய்யவும். மசித்த உருளைக் கிழங்கை பிளாஸ்டிக் ஷீட்டினுல்

கமலாபாய் ஒகலே*
விளக்குகின்றார்,



''துல்லியமாக சமைப்பதற்கு
கற்றுக் கொள்ள
பல்லாண்டாயின எனக்கு.
அதை நிமிடங்களில் கற்றுக்
கொள்ளுங்கள்!''

WIPRO LIMITED
Closer to the consumer

"ஸன்ஃப்ளவர் வனஸ்பதி-

கையை வைத்து அழுத்தி. ½ அங்குல கடிப்பிற்கு கொண்டுவரவும். இதன் மீது ஃபில்லிங்கை தூவவும்.


இப்போது அதை பிளாஸ்டிக் ஷீட் மூலம் இறுக்கமாக உருட்டவும். உருளைக்கிழங்கை உருட்டும் போது ஷீட்டை வெளியே எடுக்கவும். தட்டில் ஸன்ஃப்ளவர் வனஸ்பதியை தடவவும். அதன் மீது ரோலை வைக்கவும். ரோல் பெரிதாக இருந்தால் அதை இரண்டு பாகமாக்கவும். பின்பு ரோலை, பிரஷர் குக்கர் அல்லது இட்லி குக்கரில் வைத்து சமைக்கவும்.



பின்பு அதை வெளியிலெடுத்து ஆறவிடவும். பின்பு ½ அங்குல அகல துண்டுகளாகவெட்டவும். ஸன்ஃப்ளவர் வனஸ்பதியை வாணலியில் காயவிடவும். துண்டுகளை வாணலியில் போட்டு அவை பொன்னிறமாகும் வரை வறுக்கவும்.

இவ்வளவு பிரமாதமான ருசிகர வடையை நிமிடங்களிலே சமைக்க முடியும் என்பதைக் கண்டு நீங்கள் வியப்பீர்கள். அத்துடன் சுவை குன்றாமல் சிக்கனத்தோடும் சமைக்கிறது ஸன்ஃப்ளவர்.
இதை சமைத்து மகிழுங்கள்.

‘ருசிரா’ சமையல் புத்தக ஆசிரியர்.



இதைவிடச் சிறந்தது தூய நெய் மட்டுமே’’

# இம்மாத இல்லத்தரசி

**முதல் பரிசு:**

**கசகசா கவர் கட்லெட்**

தேவையான பொருட்கள்:

சேனைக்கிழங்கு — ¼ கிலோ,
பப்பாளிக்காய் — 300 கிராம்,
முருங்கைக்கீரை — ஒரு கைப்பிடி அளவில் (உருவியது)
சின்ன வெங்காயம் — 100 கிராம்,
தக்காளிப்பழம் — பெரியது ஒன்று,
பூண்டு — 11 பருப்புகள் (பற்கள்),
இஞ்சி — 2 சுண்டைக்காய் அளவில்,
கறிவேப்பிலை, கொத்துமல்லி — 1 கைப்பிடி
மிளகு — 1 ஸ்பூன்,
சீரகம் — 1 ஸ்பூன்,
நெய் — 1 ஸ்பூன்,
பச்சரிசி மாவு — 2 ஸ்பூன்,
கோதுமை மாவு — 2 ஸ்பூன்,
கசகசா — 100 கிராம்,
பொரிப்பதற்கு — தேங்காய் எண்ணெய்,

செய்முறை:

சேனைக்கிழங்கைத் தோல் சீவி சுத்தம் செய்து, துண்டுகள் போட்டு, திட்டமான உப்பு சேர்த்து வெந்நீரில் பதமாக வேக வைத்து எடுத்துக் கொள்ளவும்.

(பதமாக என்பது அதிகம் வேகாமலும், அதிகம் வெந்தும் இல்லாமல் 'நறுக்' கென்று இருப்பது.)

பப்பாளிக்காயைத் தோல் சீவி விதைகளை எடுத்துவிட்டுத் துண்டுகள் போட்டு, உப்புப் போட்டு அளவாக நீர் வைத்து, அதில் வேக வைத்து பதமாக வெந்ததும் எடுத்துக் கொள்ள வேண்டும்.

பின் ஓர் இலுப்பச் சட்டியை அடுப்பில் காய வைத்து ஒரு ஸ்பூன் நெய் விட்டு மிளகு, சீரகம் இவற்றை வறுத்து எடுக்கவும். அதன்பின்,

அதிலேயே சிறிது தேங்காய் எண்ணெய் விட்டு, இஞ்சி, பூண்டு இவற்றைப் போட்டு வதக்கி, பிறகு நறுக்கிய வெங்காயம், தக்காளி, முருங்கைக் கீரை, கறிவேப்பிலை, கொத்துமல்லி இவற்றைப் போட்டு வதக்கி எடுத்து அம்மியில் வைத்து நைசாக அரைத்து எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதில் வறுத்த மிளகு சீரகத்தைப் பொடி செய்து போட வேண்டும்.

பிறகு வேக வைத்த சேனைக் கிழங்கு, பப்பாளிக்காய் இவற்றை அம்மியில் விழுதாக அரைத்து முன்பு அரைத்து வைத்த வெங்காய விழுதில் போட்டுக் கலக்கவும். நன்றாகப் பிசையவும்.

பிறகு, பச்சரிசி மாவு 2 ஸ்பூன், கோதுமை மாவு 2 ஸ்பூன் இவற்றை இந்த விழுதில் போட்டு நன்றாகப் பிசைந்து வைத்துக் கொண்டு, ஒரு வாழை இலையை எடுத்து அதில் கட்லெட் விழுதைச் சதுரமாக ஷேப் செய்து, கசகசா தூளில் புரட்டி எடுத்து வைத்துக் கொள்ள வேண்டும்.

பிறகு, தோசைக் கல்லை அடுப்பில் வைத்துச் சிறிது தேங்காய் எண்ணெயைக் கல்லில் தடவி ஒவ்வொரு கட்லெட்டாகப் போட்டுச் சுற்றிலும் ஒரு ஸ்பூன் தேங்காய் எண்ணெய் விட்டு அடுப்பை மிதமாக எரிய விடவும். இரண்டு பக்கமும் சிவக்க எடுக்கவும். கசகசா கருகி விடாமல் இருப்பதற்காக அடிக்கடி திருப்பித் திருப்பிப் போட வேண்டும்.

— கஸ்தூரி ஜெயபாலன், பண்ருட்டி.



• கஸ்தூரி ஜெயபாலன்

**இரண்டாம் பரிசு:**

**பழ கட்லெட்**

தேவையான பொருட்கள்:

அன்னாசிப் பழம் — 1,
ஆப்பிள் — 2,
ரஸ்தாளி அல்லது மலைவாழைப் பழம் — 2,
சாத்துக்குடி அல்லது கமலா ஆரஞ்சு — 1,
விதை அதிகமில்லாத கொய்யாப் பழம் — 1,
பேரீச்சம்பழம் — 10,
உருளைக் கிழங்கு — ½ கிலோ,
மைதா மாவு — 50 கிராம்,

பொடி செய்யப்பட்ட ரஸ்க் — 250 கிராம்.
உப்பு — 5 சிட்டிகை.
தண்ணீர் — தேவையான அளவு.
நெய் அல்லது டால்டா — 200 கிராம்.
முந்திரி — 10.
உலர்ந்த திராட்சை — 10.
ஏலக்காய் — 10.
பச்சைக் கற்பூரம் — 1 சிட்டிகை.

செய்முறை:

வாழைப்பழம், பேரீச்சம்பழம் ஆகிய வற்றை மிகச் சிறிய துண்டுகளாக வெட்டி வைத்துக் கொள்ளவும். அன்னாசி, கொய்யா, ஆப்பிள் ஆகியவற்றைத் துருவி யில் துருவிக் கொள்ளவும். ஆரஞ்சுப் பழத் தின் தோல், கொட்டை நீக்கிச் சுளைகளை



• பத்மாசினி

நன்கு உதிர்த்துத்துருவி வைத்திருக்கும்பழங்க ளுடன் சேர்க்கவும். முந்திரி, திராட்சையை டால்டாவில் வறுத்துப் பழக்கலவையில் கொட்டி ஏலக்காய்ப் பொடி, பச்சைக் கற்பூரம் சேர்த்து நன்கு கலக்கவும்.

உருளைக்கிழங்கை வேக வைத்துத் தோல் நீக்கி நைசாகப் பிசைந்து (துருவியில் துருவிக் கொள்ளலாம்), சலித்த மைதா மாவு, உப்பு சேர்த்துத் தேவையான தண்ணீர் விட்டுப் பிசைந்து மாவு தயாரித்துச் சிறு உருண்டை களாகச் செய்து கொள்ளவும். வாழை இலை, அல்லது பிளாஸ்டிக் பேப்பரில் சிறிது டால்டா தடவி கிழங்கு மாவு உருண்டையை வட்டமாகத் தட்டி நடுவில் பழக்கலவையை வைத்து மூடிப் பின்னர் சிறிய வட்டமாகப் பரப்பி ரஸ்க் தூளில் புரட்டி வைத்துக் கொள்ளவும்.

ஸ்டவ்வில் தோசைக் கல்லை ஏற்றிச் சூடா னதும் நெய் அல்லது டால்டா தடவி, ரொட் டித் தூளில் புரட்டி வைத்துள்ள கட்லெட் டைப் போட்டுச் சிறிது நெய் அல்லது டால்டா விட்டு வேக விடவும். புரட்டிப் போட்டுச் சிறிது நெய் விட்டுப் பொன்னிற மாக வெந்ததும் எடுத்துப் பரிமாறவும்.

— திலகம், வாலாஜாப்பேட்டை.

## மூன்றும் பரிசு:
## ஸ்வீட் கட்லெட்

தேவையான பொருட்கள்:

சர்க்கரை வள்ளிக்கிழங்கு — ½ கிலோ.
காரட் — ¼ கிலோ;
சர்க்கரை — 100 கிராம்.
ரொட்டித் துண்டுகள் — 4 to 6.
பால் — சிறிதளவு.
ஏலக்காய்ப் பொடி.
ரஸ்க் தூள்,

• நிரஞ்சனா



டால்டாவோ நெய்யோ சிறிதளவு.

செய்முறை:

முதலில் சர்க்கரை வள்ளிக்கிழங்கையும், காரட்டையும் நன்றாக வேக வைத்து எடுத்துக் கொண்டு, பாலில் ஊற வைத்த ரொட்டித் துண்டுகளோடு கலந்து கட்டியில்லாமல் பிசையவும். சர்க்கரையை அடிகனமான பாத்திரத்தில் போட்டுக் கரையுமளவு தண்ணீர் விட்டு நன்கு கரைந்தவுடன் ஏலப் பொடியையும், இந்தக் கிழங்கு மாவையும் போட்டுக் கிளறவும். இந்தக் கலவையை வடை மாவு பதத்தில் வைக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் சிறிது வறுத்த கோதுமை மாவைச் சேர்த்துக் கொள்ள லாம். இந்தக் கலவையைக் கட்லெட் வடி வில் தட்டி ரஸ்க் தூளில் புரட்டி எடுத்து, நன்கு காய்ந்த தோசைக் கல்லில் டால் டாவோ நெய்யோ விட்டு வாட்டி எடுக்க ஸ்வீட் கட்லெட் ரெடி.

— நிரஞ்சனா, சென்னை — 20.

## ஆறுதல் பரிசு:
## மிக்ஸட் காய்கறி கட்லெட்

தேவையான பொருட்கள்:

சர்க்கரை வள்ளிக்கிழங்கு — ¼ கிலோ.



**பரிசுப் பொருட்கள்:**

காரட் — 100 கிராம்,
முட்டைக்கோஸ் — ¼ கிலோ,
குடை மிளகாய் — 100 கிராம்,
பெங்களூர் கத்தரிக்காய் — 1,
உப்பு — தேவையான அளவு,
கடுகு — தாளிப்பதற்கு,
மிளகாய்ப் பொடி — 1 டீஸ்பூன்,
கறிவேப்பிலை, கொத்துமல்லி — 1 கட்டு,
பொட்டுக் கடலை மாவு — ¼ கிலோ,
எண்ணெய் — 300 கிராம்.

செய்முறை:

சர்க்கரை வள்ளிக்கிழங்கை வேக வைத்து, தோல் உரித்து, மசித்து வைத்துக் கொள்ளவும். கறிகாய்களைச் சிறு துண்டுகளாக நறுக்கிக் கொள்ளவும். கறிவேப்பிலை, கொத்துமல்லியையும் பொடிப் பொடியாக நறுக்கவும். அடுப்பில் வாணலியில் எண்ணெய் வைத்துக் கடுகைத் தாளிக்கவும். கடுகு வெடித்தவுடன் கறிகாய்களை அலம்பிப்போட்டு நன்கு வதக்கவும். கறிவேப்பிலை, கொத்துமல்லி, உப்பு சேர்க்கவும். கீழே இறக்கி, மசித்த சர்க்கரைவள்ளிக் கிழங்கையும் சேர்த்துக் கலந்து கொள்ளவும்.

நன்கு காய்ச்சிய எண்ணெய் இரண்டு கரண்டி பொட்டுக்கடலை மாவில் சேர்க்கவும். அதற்கு மிளகாய்ப் பொடி, சிறிதளவு உப்பு சேர்த்துக் கெட்டியாகப் பிசைந்து கொள்ளவும். மாவைத் தட்டை போலத் தட்டிக் கொண்டு அதன் மேல் சிறிதளவு கறிகாய்க் கலவையை வைக்கவும். மற்றொரு தட்டை மாவினால் செய்து இதை மூடவும். அடுப்பில் தோசைக் கல்லில் சிறிதளவு எண்ணெய் விடவும். எண்ணெய் காய்ந்தவுடன் கட்லெட்டை தோசைக்கல்லில் இருபுறமும் மொர மொரப்பாகும் வரை வேக வைக்கவும். இக்காய்கறி கட்லெட் சூடாக, சட்னி அல்லது சாஸுடன் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

— பத்மாசினி, பெங்களூர் — 4.

## ஆறுதல் பரிசு:

## சீஸ் ரைஸ் கட்லெட்

தேவையான பொருட்கள்:

குழைந்த சூடான சாதம் — 1 கப்,
அமுல் சீஸ் (துருவியது) — ½ கப்,
உப்பு — ½ தேக்கரண்டி அல்லது ருசிக்கேற்ற அளவு,
பொடிப் பொடியாக நறுக்கிய பச்சை மிளகாய் — 1 தேக்கரண்டி,
பொடிப் பொடியாக நறுக்கிய வெங்காயம் — 2 தேக்கரண்டி,
ரொட்டித் தூள் (**Bread Crumbs**) — ¾ கப்
கறிவேப்பிலை, கொத்துமல்லி — சிறிது,
தக்காளி பேஸ்ட் 1 மேசைக்கரண்டி,
பொரிப்பதற்கு — இஷ்டமான சமையல் எண்ணெய் அல்லது டால்டா.

செய்முறை: மேற்குறிப்பிட்ட அனைத்தையும் (எண்ணெய் தவிர) ஒரு பாத்திரத்தில் போட்டு நன்றாகப் பிசைந்து கொள்ளவும். தளர இருந்தால் இன்னும் சிறிது பிரெட் தூள் சேர்த்துக் கொள்ளவும். மிகவும் கெட்டியாக இருந்தால் சிறிது பாலைத் தெளித்துக் கொள்ளவும். (மொத்தத்தில் மசால்வடை மாவு பக்குவத்திற்கு இருக்க வேண்டும்.)

எலுமிச்சை அளவு உருண்டைகளாக எடுத்து உருட்டி வைத்துக் கொள்ளவும்.

சாப்பிடுவதற்குச் சிறிது நேரத்திற்கு முன்பாக வாணலியில் எண்ணெய் ஊற்றி சீஸ் ரைஸ் உருண்டைகளை ஒவ்வொன்றாக எடுத்து வடை போன்று தட்டிப் பொரித்து எடுக்கவும். சுடச் சுட, தக்காளி அல்லது சில்லி சாஸுடனோ, சட்னி அல்லது சாம்பாருடனோ சேர்த்துச் சாப்பிடச் சுவையாக இருக்கும்.

— எஸ். இ. பாத்திமா, புதுடெல்லி.

# “அதிக அளவு நெய், அதிக மணம் தருகிறது ஆவின் வெண்ணெய்”




ஆம். இந்த இல்லத்தரசி கூறுவது நூற்றுக்கு நூறு உண்மை. அனுபவத்தில் கண்ட உண்மை! ஆவின் வெண்ணெய் புதிய, சுத்தமான பாலிலிருந்து தயாரிக்கப்படுகிறது. நவீனமான முறையில் தானியங்கி இயந்திரங்கள் மூலம் வெண்ணெயிலிருந்து தண்ணீர் முழுமையாக அகற்றப்பட்டு, பேக் செய்யப்படுகிறது. இதனால் வெண்ணெய் காய்ச்சும்போது அதிக அளவு நெய் கிடைக்கிறது.

ஆகவே ஆவின் வெண்ணெய் சிக்கனமானதாக அமைகிறது.

புதுத்தன்மை மற்றும் உயர்ந்த தரம் காரணமாக நெய் மிகுந்த மணமுள்ளதாகவும் இருக்கிறது. ஆவின் வெண்ணெய் நிகரற்று விளங்குகிறது... அதன் தரம், தூய்மை, புதுத்தன்மை காரணமாக! இன்றே வாங்கிப் பாருங்கள். உண்மை உங்களுக்கு விளங்கும்.

## ஆவின்

வெண்ணெய்

வெண்மையானது · தரமானது · சிக்கனமானது.



### நிறவெறி நல்லதல்ல!

தென்னாப்பிரிக்காவில் நிறவெறி தலை விரித்தாடுகிறது. கறுப்பு இன மக்கள் பல தொல்லைகளைத் தொடர்ந்து அனுபவித்து வருகிறார்கள். நிறவெறிக்கு எதிராக எடுக்கப்பட்ட சர்வதேச முயற்சிகள் அனைத்தும் புறக்கணிக்கப்பட்டு வருவதால் அங்குள்ள விடுதலைப் போராட்ட வீரர்களுக்குப் போராட்டத்தை நடத்துவதைத் தவிர வேறு வழியில்லை. நிறவெறியில் இந்தியாவுக்கு நம்பிக்கை இல்லை. உலக மக்களின் கருத்தை நிறவெறிக்கு எதிராகத் திரட்ட வேண்டும் என்று ஆப்பிரிக்க தேசிய காங்கிரஸின் 75 வது ஆண்டு நிறைவு விழாவின் போது ராஜீவ் காந்தி பேசியுள்ளார்.

### ரஷ்யக் கவிஞருக்கு நோபல் பரிசு!

1940 ஆம் வருடம் ரஷ்யாவின் யூத குடும்பம் ஒன்றில் பிறந்த ஜோசப் பிராட்ஸ்கி தமது 18 வயதிலே கவிஞராகத் திகழ்ந்தவர். இவருடைய கவிதைகளை ஸ்டாலின் காலத்திய ரஷ்யாவில் மக்கள் ரகசியமாகப் படித்து வந்தார்கள். அப்போது இவரது கவிதைகள் தடை செய்யப்பட்டிருந்தன. பின்பு இவர் ரஷ்யாவில் இருந்து வெளியேறி அமெரிக்காவில் தஞ்சமடைந்து வாழத் தொடங்கினார். உணர்வும், அறிவின் வீச்சும் ததும்பிப் பொங்கும் இவரது கவிதைகளுக்கு இந்த ஆண்டு நோபல் பரிசு கொடுக்கப்படுமென நோபல் பரிசு கமிட்டி அறிவித்துள்ளது. 47 வயதான இந்த இளைஞர்தான் உலகிலேயே இத்தனை இளம் வயதில் நோபல் பரிசினைப் பெறும் முதல் நபர்.

### விடுவிக்கப்பட்ட இந்திய விமானம்

நைஜீரியா சென்ற இந்திய விமானம் 'பியாஸ்' 32.5 கிலோ ஹெராயின் என்ற போதைப் பொருளை ஏற்றிச் சென்றதால் ஆகஸ்ட் 26 ஆம் தேதி நைஜீரியா நாட்டுச் சுங்கத் துறையினரால் பிடித்து வைக்கப்பட்டது. இதில் உள்ள விமானிகளும் கைது செய்யப்பட்டனர். ஆனால் நைஜீரியா கோர்ட் விசாரணையின் போதும், இராணுவ உயர் விசாரணையின் போதும் விமானிகள் எந்தத் தவறும் செய்யவில்லை என்று தெரிய வந்தது. இப்போது 57 நாட்களுக்குப் பிறகு அக்டோபர் 23 ஆம் தேதி இந்தியாவுக்கு விமானம் பத்திரமாகத் திரும்பி வந்தது. விமானம் முடக்கி வைக்கப்பட்டதால் ஏர் இந்தியாவுக்குக் கணிசமான நஷ்டம் ஏற்பட்டிருக்கும். நைஜீரியா, இத்தனை நாட்கள் தாமதப்படுத்தி விமானத்தை விடுவித்தது கண்டிக்கத் தக்க செயல் என்று உலக அரசியல் நிபுணர்கள் சொல்கிறார்கள். இந்தியா — நைஜீரியா உறவு கூட பாதிக்கப்படவிருந்தது. ஆனால் இந்தியாவின் சகிப்புத் தன்மையால் இரு நாடுகளுக்கும் உறவு பழைய முறையிலே நல்லதாக நீடிக்கிறது.

## தெரிந்து கொள்ள சில

### எய்ட்ஸ் கொடுமை

எய்ட்ஸ் நோயின் கொடுமை உலகெங்கும் நீடிக்கிறது. கொசு, கரப்பான் பூச்சிகளால் கூட எய்ட்ஸ் நோய் பரவலாம் என்று விஞ்ஞானிகள் சொல்கிறார்கள். முறை கேடான வாழ்க்கையில் இருந்து மாறி ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து வாழ்பவர்களுக்கு இந்த நோய் வருவதில்லை. எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்த உலகெங்கும் பல ஆராய்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இங்கே வெளியாகியுள்ள படத்தில் அமெரிக்க அதிபர் எய்ட்ஸ் நோயுடைய தாயின் குழந்தையோடு கொஞ்சுவதைக் காணலாம்.

### வயதானவர்களுக்கான விளையாட்டு!

முதுமை பலருக்குப் பலவிதத்திலும் பிரச்னை தரக்கூடியது. முதுமையில் தனியாக வாழ நேர்ந்தால் அதைவிட கஷ்டமான ஒன்று வேறு எதுவுமில்லை. சரியான உடற்

பயிற்சியைச் சின்ன வயது முதலே மேற்கொண்டால் முதுமையில் நோய் இன்றி வாழலாம். அது மட்டுமல்ல. விளையாட்டில் சின்ன வயது முதலே இருக்கும் ஆர்வம் முதுமையில் கைகொடுக்கும். மனத்திற்கும் உற்சாகத்தைக் கொடுக்கும். இந்த உலக வாழ்க்கையும் வெறுப்பாக இல்லாமல் இனிக்க விளையாட்டு ஒரு கருவிதான். சென்னை ராஜரத்தினம் ஸ்டேடியத்தில் அண்மையில் நடைபெற்ற வயதானோருக்கான போட்டியில் பலர் கலந்து கொண்டனர். முதுமை ரேகைகள் தெரிந்தாலும் உற்சாகம் அதை மறைத்தது என்று சொல்லும்படி இரண்டு வயதான பெண்மணிகள் மாணவிகளின் பிடியில் விறுநடை போடுவதைப் படத்தில் பாருங்களேன்!



## இரட்டையர் நூற்றாண்டு விழா!

ஆற்காடு இரட்டையர்கள் எனப்படும் டாக்டர் சர் ஏ. ராமசாமி முதலியார் மற்றும் டாக்டர் சர் ஏ. லட்சுமண முதலியார் இருவருமே உழைப்பால் உயர்ந்தவர்கள். இவர்களின் நூற்றாண்டு விழா அண்மையில் நடைபெற்றது. இந்த ஆண்டு தனது 300 வது ஆண்டு நிறைவு விழாவைக் கொண்டாடும் சென்னை மாநகராட்சியில் ராமசாமி முதலியார் பல் ஆண்டுகள் உறுப்பினராக இருந்தவர். திருவிதாங்கூர் பல்கலைக்கழகத்தில் துணை வேந்தராகவும் இவர் பணியாற்றியிருக்கிறார். மகப்பேறு மருத்துவத்தில் திறம்பட

# ஜாலங்கள்!—

கவனம் செலுத்தி மகப்பேறு மருத்துவ நூலையும் எழுதியவர் லக்ஷ்மண முதலியார். 1939 ஆம் ஆண்டில் மருத்துவக் கல்லூரி முதல்வரானார். இப்பதவிக்கு பிரிட்டிஷ் இந்தியாவில் வந்த முதல் இந்தியர் இவர்தான். 1942 ஆம் ஆண்டு முதல் 1967 ஆம் ஆண்டு வரை சுமார் 25 ஆண்டுகள் சென்னைப் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தராகச் செயல்பட்டார். இவ்வளவு காலம் ஒருவர் துணை வேந்தராகப் பொறுப்பேற்றது இந்தியக் கல்வித் துறையில் ஒரு மிகப் பெரிய சாதனையாகும்!

## காடுகளைக் காப்போம்!

நாட்டில் காடுகள் அழிந்து கொண்டு வரு



கின்றன. வறட்சி, மழையின்மை ஆகியவற்றுக்குக் காடுகள் அழிவதுதான் காரணம். தொடர்ந்து தற்போதைய வேகத்தில் காடுகள் அழிக்கப்படுமானால் 2020 ஆம் ஆண்டிற்குள் இமய மலைக்காடுகள் முழுவதும் அழிந்துவிடும் என்று ஜம்மு காஷ்மீரத்தின் சுற்றுப்புறச் சூழல் மையத்தின் இயக்குனர் எம். ஏ. கோவா ஓர் ஆய்வின் மூலம் கண்டு பிடித்துள்ளார். காடுகள் முற்றிலும் அழிந்து போனால் நிரந்தர வறட்சிப் பிடியில் நாடு சிக்குண்டு தவிக்க வேண்டிய நிலை ஏற்படலாம். எனவே காடுகளைக் காப்பாற்ற ஒரு பொதுக் கொள்கையை நாடெங்கும் கடைப் பிடிக்க வேண்டிய தருணம் இது!

## குப்பைப் பொறுக்கும் சிறுவர்களுக்கு உதவும் வங்கி!

தெருக்களில் குப்பை, கூளங்களில் உள்ள காகிதங்களைச் சேகரித்துப் பழைய காகித விற்பனையாளர்களுக்கு இடைத் தரகர்கள் மூலம் கொடுத்து அதற்கு உரிய விலையைப் பெறாமல் அவதிப்படும் ஏழைச் சிறுவர்கள் நிறையப் பேர் இருக்கின்றனர். இவர்களின் நலனில் அக்கறை காட்டச் சென்னை தேனாம் பேட்டையிலுள்ள இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முன்வந்துள்ளது. ஏழைச் சிறுவர்களுக்காக ஒரு கூட்டுறவு சங்கத்தை அமைத்து, இந்தச் சங்கத்தின் மூலம் ஏழைச் சிறுவர்கள் காகிதங்களை நேரடியாகவே பழைய பேப்பர் வியாபாரிகளிடம் விற்று அதற்கான தொகையைப் பெற இந்த வங்கி உதவ முன் வந்துள்ளது.

## பழுப்பு நிலக்கரி

நெய்வேலியில் பழுப்பு நிலக்கரி கிடைப்பது நமக்கெல்லாம் தெரியும். தமிழ்நாட்டில் மேலும் இரண்டு இடங்களில் பழுப்பு நிலக் கரி கிடைப்பதற்கான சாத்தியக்கூறுகள் மிக அதிகமாக உள்ளன. ஜயங்கொண்ட சோழ புரத்தில் இந்த நிலக்கரி கிடைப்பதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதால் தோண்டி எடுக்கும் முயற்சிகள் தீவிரமாக நடை பெற்று வருகின்றன. மன்னர் குடியில் கிடைக்கும் வாய்ப்பு நிறைய உள்ளதாகப் பூர்வாங்க ஆய்வில் இருந்து தெரிய வந்துள்ளது. இதனால் தஞ்சை மாவட்டம் தொழில் துறை மாவட்டமாக மாற வாய்ப்புள்ளது.

தொகுப்பு:

**தாம்பிரவருணி**

## பெண் வங்கி ஊழியர்கள் சிந்திக்க — சிரிக்க!

வங்கியில் பெண்ணிற்கு வேலை கிடைத்தவுடன் அடையும் பெற்றோரின் மகிழ்ச்சி நீடிப்பது சில காலமே. பிள்ளை வீட்டாரின் முதல் கேள்வி: "பெண் பேங்கில் எத்தனை வருடம் வேலை "பார்க்கிறாள்? நிறைய சேர்த்து வைத்திருப்பீர்கள் என்று சொல்லுங்கள்" — மற்றவர்களை விட அதிக எதிர் பார்ப்பு!

திருமணம் முடிந்த சில நாட்களில், கணவன் வங்கி ஊழியராக இல்லாது அவளை விட ஒரு சில ரூபாய்கள் குறைந்த ஊதியம் வாங்குபவராக இருந்து விட்டால் கூட கிடைக்கும் அதிரடி "என்னை விட அதிகம் சம்பாதிக்கும் திமிர்" மற்றவர்களுக்குக் கிடைக்காத பரிசு!

பெண் வங்கி ஊழியர்களுக்கு பணத்தை எண்ணத் தெரிந்திருந்தால் மட்டும் போதாது வார்த்தைகளையும் எண்ணிப் பயன்படுத்த வேண்டும் என்பதற்கு ஓர் உதாரணம்: தப்பித் தவறி பேங்கில் வேலை பார்ப்பது இவருடைய பிள்ளையின் நர்சரி ஸ்கூல் ஹெட்மிஸ்ட்ரஸ்ஸுக்குத் தெரிந்தால் கூட போதும்— வாஞ்சையுடன் எடுத்து நம்மிடம் நீட்டுவார் 500/— ரூபாய் டொனேஷன் டிக்கெட் ஒன்றை. 'நீங்கள் கூட் தயங்கினால்



எப்படி' என்று கேள்வி வேறு!

இப்படி எங்கே போனாலும் எங்களுக் கென்று 'ஸ்பெஷ'லாக செலவு வைக்கும் நிலைகள் தான் அதிகம்.

— இந்திரா சந்திரபிரகாசம்.

# காதிற்குள் பூச்சி புகுந்தால்..?



டாக்டர் வி. டி. கௌதமன் (காது, மூக்கு, தொண்டை நிபுணர்) விளக்குகிறார்:

**காது:**

கே: நமது காது, கேட்கும் செயலைத் தவிர வேறு என்ன வேலை செய்கிறது?

ப: காது வெளிச்செவி, நடுச்செவி, உட்செவி, என்ற மூன்று பகுதிகளை உடையது. உட்செவியில் உள்ள ஒரு திரவத்தில் மயிரிழை போன்ற ஹேர் ஸெல்கள் மிதக்கின்றன. இவைதான் ஒலி அதிர்வை காக்லியோ வெஸ்டிப்யூலார் நரம்பு மூலம் மூளைக்குச் செலுத்துகிறது. இதே ஹேர் ஸெல்கள் நம் உடலைச் சமநிலையில் நிற்க வைக்கிறது.

கே: காது கேளாமல் போவது எதனால்?

ப: காது கேளாமையை, 1. கேட்கும் சக்திக் குறைவு என்றும்; 2. முற்றிலுமாகக் கேட்கும் சக்தி இழத்தல் என்றும் இருவகைப் படுத்தலாம். உங்கள் கேள்விக்கு விளக்கமளிக்கும் முன் காது மூன்று பகுதிகளாக அமைந்துள்ளது என்பதால் ஒவ்வொரு பகுதியில் ஏற்படும் குறை எவ்வாறு கேட்கும் சக்தியைப் பாதிக்கும் என்பதைக் கூறுகிறேன்.

## வெளிச்செவி:


பெரும்பாலும் நாம் அழுக்கு, குரும்பி என்று குறிப்பிடும் ஸெருமன் என்ற மெழுகு போன்ற பொருள் அடைத்திருப்பதாலேயே காது கேட்காமல் போகிறது. இ. என். டி. மருத்துவரிடம் சென்றால் இந்த அழுக்கை நீக்கி விடுவார். அதன் பின் காது கேட்கும். சிறு குழந்தைகள் காதில் ஏதாவது பாசிமணி, பலப்பம், கொட்டை போன்றவற்றைப் போட்டுக் கொள்வதாலும், செவிப் பறையில் ஓட்டை ஏற்படுவதாலும், காது கேட்காது. செவிப்பறையை கூரிய குச்சியால் குத்துவதாலோ, அழற்சி காரணமாகவோ துளை ஏற்படும். மருத்துவச் சிகிச்சையின் மூலம் இழந்த ஒலி உணர்வை மீண்டும் பெறலாம்.

## நடுச்செவி:

இதில் பட்டை எலும்பு, காறை எலும்பு, சுத்தி எலும்பு எனப்படும் மூன்று சிறுசிறு எலும்புகள் ஒன்றை ஒன்று தொட்டுக் கொண்டு இருக்கும். செவிப்பறை ஏற்படுத்தும் ஒலி அதிர்வுகள் இந்த மூன்று எலும்புகள் மூலம் பெருக்கப்பட்டு எண்டோலிம்ப் திரவத்தில் அலைகளை ஏற்படுத்தும். அதில் மிதக்கும் ஹேர் ஸெல்கள் மூலம் கேள்வி நரம்பு ஒலியை மூளைக்கு அறிவிக்கும். நடுச்செவியில் இந்த மூன்று எலும்புகளில் ஏதேனும் ஒன்று இடம் பிறழ்வதாலோ, சுத்தி எலும்பு மட்டும் அதிராமல் இறுகிப் போவதாலோ, அழற்சி காரணமாகச் சீழ் வந்து எலும்புகள் அரிக்கப்படுவதாலோ ஒலி உணர்வை மூளை உணர முடியாமல் போகிறது. இப்பகுதி பாதிக்கப்பட்டால் அறுவை சிகிச்சை மூலம் குணம் பெறலாம்.

**உட்செவி:**

உட்செவியில் பாதிக்கப்படும் பகுதி ஹேர் செல்கள்தான். ஸ்டெப்டோமைசின் ஊசியினாலும், சிகரெட் பிடிப்பதால் அதிலுள்ள நிகோடின் காரணமாகவும், அதிக இரைச்சல் காரணமாகவும், வயோதிகம் காரணமாகவும் ஹேர் செல்கள் இறந்துவிடும் அல்லது உதிர்ந்துவிடும். இந்நிலையில் காது கேட்காமல் போவதுடன் உடலின் சமநிலையும் கெடுவதால் நடை தள்ளாடும். எதையாவது பிடித்துக் கொண்டுதான் நடக்க வேண்டும். இப்பகுதி பாதிக்கப்பட்டால் சிகிச்சை பலனளிக்காது.



கே: கருவுற்ற காலத்தில் தாய் உண்ட மாத்திரைகள் பிறக்கும் குழந்தையின் கேட்கும் திறமையைப் பாதிக்குமா?

ப: காசநோய் வந்தால் தாய் ஸ்டெப்டோமைசின் ஊசி போட்டுக் கொள்வதாலும் சிறு நீர்க்குழாயில் அழற்சி (யூரினரி இன்ஃபெக்ஷன்) ஏற்பட்டு அதற்காக காராமைசின் ஊசி போடுவதாலும் பிறக்கும் குழந்தையின் செவி பாதிக்கப்படலாம். கருவுற்ற காலத்தில் முதல் மூன்று மாதங்களுக்குள் தட்டம்மை, ருபெல்லா என்னும்ஒரு வகை அம்மை தாய்க்கு வந்தாலும் குழந்தையின் செவியின் எப்பகுதியும் பாதிக்கப்படலாம். நெருங்கிய உறவினர்களிடையே ஆணும் பெண்ணும் மணம் புரிவதாலும் குழந்தை பிறவியிலேயே கேட்கும் திறமையை இழக்கலாம்.

கே: இரைச்சலான சூழ்நிலை சிறு குழந்தைகளை எவ்வாறு பாதிக்கும்?

ப: தொடர்ந்து இரைச்சலான சூழ்நிலையில் இருந்தால் குழந்தைகளின் செவியிலுள்ள ஹேர் செல்கள் உதிர்ந்து விடலாம். பெரிய வெடிச் சத்தம் கேட்டால் செவிப் பறை கிழியவும், நடுச்செவியிலுள்ள மூன்று எலும்புகள் பாதிக்கப்படவும் வாய்ப்பு உண்டு. சத்தம் அதிகமான இயந்திரங்களுள்ள தொழிற்சாலைகளில் வேலை செய்ய நேரிடும் போது பெரியவர்களும் இத்தகைய பாதிப்புக்கு உள்ளாகலாம்.

கே: செவிப்பறை கிழிந்தால் மீண்டும் செயற்கை முறையில் அமைக்க முடியுமா?

ப: முடியும். பாதிக்கப்பட்ட மனிதரின் காதுக்கு முன் நெற்றிப் பொட்டின் பக்கமுள்ள டெம்போரல் ஃபேசியா என்ற பகுதியிலுள்ள சதையை எடுத்துப் பொருத்தி விடலாம்.

கே: சிலர் காது அடைப்பதாகக் கூறுகிறார்களே, எதனால்?

ப: ஜலதோஷம் காரணமாக யூஸ்டேஷியன் குழாயில் அடைப்பு ஏற்படலாம். அதனால் காது அடைப்பது போல் தோன்றும். ஜலதோஷம் சரியானவுடன் காது அடைப்பு நீங்கிவிடும்.

கே: மிகக் குளிர்ந்த தட்ப வெப்பநிலை காதை எவ்வாறு பாதிக்கும்?


ப: வட இந்தியாவில் குளிர் காலத்தில் வெப்பநிலை மிகக் குறைவாக இருக்கும். அச்சமயம் ஃப்ராஸ்ட் பைட் ஏற்படும். அதாவது செவி மடலின் இரத்தக் குழாய்கள் சுருங்குவதால் மடலில் வீக்கம் ஏற்பட்டு மிகவும் வலிக்கும். மூக்கு வழியாக ஈரக்காற்று உள்ளே செல்வதால் குழாய் அடைப்பு ஏற்பட்டு செவிப்பறை உட்புறமாகக் குழியும். இதனால் வலி ஏற்படும். சில சமயம் முகத்திலுள்ள நரம்புகள் பாதிக்கப்பட்டு ஃபேஷியல் பராலிஸிஸ் **(facial paralysis)** ஏற்பட்டு வாய் கூட கோணிவிடும். 24 மணி நேரத்திற்குள் மருத்துவச் சிகிச்சை பெற்றால் வாயைப் பழைய நிலைக்குக் கொண்டு வரலாம்.

கே: காது, மூக்கு, குத்துவதால் கண் பார்வை தெளிவு பெறும், கேட்கும் சக்தி அதிகமாகும் என்பது உண்மையா?

ப: இல்லை. இது முற்றிலும் தவறான நம்பிக்கை. காது, மூக்கு குத்துவது அழகுக்காக அணிகலன்களை அணிவதற்கே.

கே: காதில் சிறு பூச்சிகள் நுழைந்து விட்டால் தண்ணீர் விடுவது நல்லதா? எண்ணெய் விடுவது நல்லதா?

ப: இது ஒரு நல்ல கேள்வி. காதுக்குள்



நான் அப்பொழுது பாங்க் ஆஃப் இந்தியா, கன்டோன்மென்ட் (பெங்களூர்) கிளையில் வேலை செய்து கொண்டிருந்தேன். ஒரு சனிக்கிழமை, ஒரு பெரிய தொகை கணக்கு வைத்திருப்பவரின் கணக்கர் (எப்பொழுதும் வருபவர்) என்னிடம் ரூ.2000/ காசோலை ஒன்றை பணமாக்க கொடுத்தார். அந்த காசோலையைப் பார்த்தவுடன், இது அந்தத் தொழிலதிபரின் கையெழுத்தில்லை என்று தெரிந்து விட்டது. அவரை சந்தேகத்துடன் பார்த்தேன். அவரோ, ஒன்றும் தெரியாதவர் போல் வேறு கேள்விகளைக் கேட்டார். எப்பொழுதும் வருபவர் என்பதினால் சந்தேகிக்கவும் முடியவில்லை. டோக்கன் கொடுத்து விட்டு, மேலதிகாரியிடம் சென்று காசோலையைக் காண்பித்து, என்னுடைய சந்தேகத்தையும் கூறினேன். அவரோ, கையெழுத்தை ஒப்பிட்டு பார்த்துவிட்டு, வித்தியாசம் ஒன்றுமில்லை என்று கூறிவிட்டார். வேறு எந்த காரணத்தாலும் பணம் இல்லை என்று சொல்ல முடியாத நிலையில் அந்த காசோலையை காஷியரிடம் அனுப்பினோம். அந்த கணக்கரோ நான் சந்தேகப்படுகிறேன் என்று தெரிந்து கொண்டு, திரும்பவும் 12.30 மணிக்குள் வந்து பணம் பெற்றுக் கொள்கிறேன் என்று சொல்லி டோக்கனுடன் சென்று விட்டார்.

சனிக்கிழமை, ஆதலால் நாங்கள் 2.30 மணிக்கு வங்கியை மூடி விட்டோம். திங்கள் காலையில் அந்தத் தொழிலதிபர் வந்து வங்கி மானேஜரை சந்தித்துப் பேசியவுடன், என்னையும் அழைத்தார். நானோ, வம்பில் மாட்டிக் கொண்டோம் என்று தயக்கத்துடன் உள்ளே சென்றேன். என் தயக்கத்தைப் பார்த்த மானேஜரும், தொழிலதிபரும், அந்த கணக்கர் வேலைக்கே வரவில்லை என்றும், போலீசுக்குத் தகவல் தெரிவித்து இருப்பதாகவும் கூறினர். வங்கியின் செயலையும், என்னையும் மிகவும் பாராட்டி, அவருக்கு வரவிருந்த பொருள் விரயத்தையும் தவிர்த்ததாகக் கூறினர். அந்தக் கணக்கர் செய்த முதல் கள்ளக் கையெழுத்து (போர்ஜரி) அதுதான் என்றும், நாங்கள் முதலிலேயே கண்டு பிடித்ததாகவும் கூறி மகிழ்ந்தார். அப்பொழுதுதான் நிம்மதியாக மூச்சு வந்தது எனக்கு.

— பத்மா நாராயணன்.

பூச்சி நுழைந்தால் எண்ணெய் ஊற்றக் கூடாது. உப்பை நீரில் கரைத்து அந்தக் கரைசலை விடலாம். பூச்சி பறப்பது நின்றவுடன் செவியைச் சாய்த்து நீரை வெளியேற்றினால் பூச்சியும் வந்துவிடும். கரப்பான் பூச்சி, பூரான் போன்றவை புகுந்து விட்டால் முதலில் அவற்றை மயக்கமடையச் செய்ய வேண்டும். எனவே முதலுதவி என்று எதுவும் செய்து நேரத்தை வீணாக்காமல் மிக விரைவில் இ. என். டி. நிபுணரையோ, பொது மருத்துவரையோ நாட வேண்டும். சிறு குழந்தைகள் ஏதாவது பொருளைக் காதில் போட்டுக் கொண்டால் கூட இ. என். டி. மருத்துவரிடமே சென்று அப்பொருளை எடுக்க வேண்டும். வீட்டிலுள்ளவர்கள் எடுக்க முயலும்போது செவிப்பறை கிழியும் வாய்ப்பு உள்ளதை உணருங்கள்.

கே: சிறு குழந்தைகளின் செவியைப் பாதுகாக்கப் பெற்றோர்களுக்கு நீங்கள் கூறும் அறிவுரைகள் யாவை?

ப: 1. நீங்களாகவே அழுக்கை எடுக்காதீர்கள். 2. ஆறு மாதங்களுக்கு ஒருமுறை காதைச் சுத்தம் செய்ய வேண்டும். 3. காது வலிக்கு எந்தவிதமான எண்ணெயையும் காய்ச்சி ஊற்றிக் கை வைத்தியம் செய்யாதீர்கள். 4. நீங்களாகவே கடைக்காரரிடம் சென்று காது வலிக்கான சொட்டு மருந்தை வாங்கிப் பயன்படுத்தாதீர்கள். 5. கண்ணை விட நுட்பமானது காது. எனவே கன்னத்திலோ, காதிலோ ஓங்கி அறைந்து உங்கள் குழந்தையின் செவியைப் பழுதடையச் செய்து விடாதீர்கள். 6. கூடியவரை இரைச்சல் குறைவான குடியிருப்புப் பகுதியில் குடியிருங்கள்.

கே: ஒரு குழந்தை பிறந்த பிறகு கேட்கும் திறன் உள்ளதா என்பதை எந்த மாதத்தில் அறியலாம்?


ப: இது ஒரு முக்கியமான கேள்வி. மூன்று மாதக் குழந்தை திடீரென்று பெரிய ஒலி கேட்டால் கை, கால்களை உதறிக் கொள்ளும். அழுது கொண்டிருக்கும் குழந்தையாக இருந்தால் அழுகையை நிறுத்தி விட்டு ஒலியைக் கவனிக்கும். ஐந்து மாதங்களில் ஒலி வரும் திசையில் கண்களையும், ஆறுவது மாதத்தில் தலையையும் திருப்பும். இரண்டு முதல் ஐந்து வயதுக் குழந்தைகளிடம் ஒரு காரியத்தைச் சொல்லிச் செய்ய வைக்கும் சோதனை மூலம் ஒலியின் விஷயத்தை மூளை புரிந்து கொள்கிறதா என்று சோதிக்கலாம். மூளை வளர்ச்சி குறைவான குழந்தைகள் ஒலியை உணர்ந்தால் கூட, செய்தியைப் புரிந்து கொள்ள மாட்டார்கள்.

(அடுத்த இதழில் மூக்கு)

பேட்டி: லக்ஷ்மி சங்கர்

# ஏகாதசி வந்தது எப்படி?


கதை: சுபயோகம் விவேகா
படம்: கோபலீ











விஷ்ணு பகவானும் முரனும் போர்க்களத்தில் சந்தித்துக் கொண்டனர். இரு புறங்களிலும் அஸ்திரங்கள் அனல் தெறிக்கப் பறந்தன!
அசுரர்கள் அனேகர் மாண்டனர். ஆனால்- பெண்ணால்தான் மரணம் என்னும் தலை விதிதான் முரனைத் தப்பிக்கச் செய்ததோ? தற்காலிகமாகப் போர் நிறுத்தப்படும் வரை அவன் சளைக்கவுமில்லை; இறக்கவுமில்லை!
முரன் தாக்குப்பிடிக்கும் விதம் ஆச்சரியமூட்டுகிறது! அடுத்துப் போர் தொடங்கும் வரையில் ஓய்வெடுத்துக் கொள்ளலாம்.
அதர்மத்தின் நிரந்தர ஓய்வுக்காகப் போனாரோ? விஷ்ணு பகவான் பத்ரிகாச்ரமம் என்னுமிடத்திலுள்ள குகையினுள் சென்று பள்ளி கொண்டார்.
மறைவாகப் பின் தொடர்ந்தான் முரன்.
நல்ல சமயம். நாராயணன் உறங்குகிறார். தூக்கம் கலைவதற்கு முன் அவரை மீளாத் தூக்கத்தில் ஆழ்த்திவிடுவோம்!


விழி மூடியிருக்கும் விஷ்ணுவின் முன்பாய் வந்து உடைவாளை ஓங்கினான்.
ஆனால் — ஓங்கிய வாள் கீழிறங்குவதற்குள் பள்ளி கொண்டிருந்தவரின் திருவுடலிலிருந்து —
ஆயுதங்கள் தாங்கிய அழகிய பெண்ணுருவம் தோன்றியது!
பெண்ணுருவின் ஹுங்கார சப்தத்திலேயே முரனின் உடலுறுப்புகள் நொறுங்கின! காலாக்கினியாய் சீறிக் கொண்டு வந்த மூச்சுக் காற்று பட்டதுமே முரன் திகுதிகு வென்று எரிந்து சாம்பலானான்!
விஷ்ணு பகவான் எதிரே நின்ற பெண் ணுருவை நோக்கி முகம் மலர்ந்தார்.
முரனின் விதி உன்னால் முடிந்தது. இன்று வளர்பிறைச் சந்திரன் தோன்றிப் பதினோராம் நாள். எனவே இத்தினத்தில் உதித்த நீ 'ஏகாதசி' எனப் பெயர் பெறுவாயாக!
பாபம் தொலைந்த இந் நாளை ஏகாதசி விரத மாக ஏற்று உபவாச மிருந்து வழிபடுவோர், துன்பங்கள் அகன்று இன்ப வாழ்வைப் பெறுவார்கள்.'
இதுவே ஏகாதசி பிறந்த விதம்.


விஷ்ணு பக்தனான வைகானஸன் என்னும் அரசன், ஒரு நாள் கனவு ஒன்றைக் கண்டு கலங்கினான். அவனுடைய பெற்றோரும், முன்னோரும் நரகத்தில் கொடிய துன்பங்களை அனுபவிப்பது போன்ற காட்சி அக்கனவில் தெரிந்தது...
மகனே வைகானஸா! நீ மார்கழி மாதத்தில் ஏகாதசி விரதமிருந்து ஸ்ரீரங்கநாதரை வழிபட்டால்தான் எங்கள் பாவம் தொலையும். அதனால் நரகத்தின் வேதனையிலிருந்து விடுபட்டு மோட்சமடைவோம்!
கனவில் தன் தந்தை அறிவித்தபடியே, மார்கழி மாத வளர்பிறை ஏகாதசியில் உபவாச விரதமிருந்து அரங்கநாதரை வழிபட்டான் வைகானஸன்...
அதன் பலனாய், வைகானஸனின் பெற்றோரும் முன்னோரும் நரகத்திலிருந்து விடுபட்டனர். அன்று திறக்கப்பட்டிருக்கும் சொர்க்க வாயில் வழியாக ஆத்ம சொரூபமாய் சொர்க்கம் சென்றடைந்தனர்.
ஒவ்வொரு மாதமும் வளர்பிறைக் காலத்திற்கு ஒன்று, தேய்பிறைக் காலத்திற்கு ஒன்று என்ற விதம், ஆண்டு ஒன்றிற்கு இருபத்து நான்கு ஏகாதசிகள். அவற்றில் மார்கழி மாதத்து வளர்பிறை ஏகாதசியே 'மோட்ச ஏகாதசி' வைகுண்ட ஏகாதசி!
அன்று அனைத்து விஷ்ணு ஸ்தலங்களிலும் சொர்க்கவாயில் கதவுகள் திறக்கும். பள்ளிகொண்ட பெருமாளின் தரிசனம் பாவங்களை நீக்கிப் புண்ணியங்களை அருளும்.
முற்றும்




பிறந்த தேதி 1, 10, 19, 28 மற்றும் பெயர் எண்: 1.

முதல் 15 நாட்களுக்கு எந்தச் சிறு விஷயத்தையும் நன்கு கவனித்துச் செய்ய வேண்டும். குருவின் கடாட்சம் பூரணமாக இருப்பதால் சுபநிகழ்ச்சிகள் நடைபெறும். புதியதொரு தொழில், வியாபாரம் அல்லது பதவி உயர்வுக்கு உகந்த கால கட்டம். உங்கள் முன்னேற்றத்திற்குத் தேவையான ஆக்கபூர்வமான ஆலோசனையில் அல்லது சிந்தனையில் ஈடுபட வேண்டியிருக்கும். ஞாயிறு, திங்கள், புதன் ஆகிய தினங்களில் சுபநிகழ்ச்சிகள், எதிர்பாராத தனலாபம், புதிய நண்பர்களின் வருகை என நல்ல நிகழ்ச்சிகள் நடைபெறும். சனிக்கிழமைகளை ஒதுக்கவும். மாதத்தின் பிற்பகுதியில் எதிலும் ஒரு மந்த நிலை ஏற்படலாம். எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டியிருக்கும். குறிப்பாக நகைகளை இரவல் கொடுக்காதீர்கள். நஷ்டத்திற்கு வாய்ப்பு உண்டு. 1, 14, 23, 4 ஆகிய தேதிகள் ஏற்றவை.

பிறந்த தேதி 2, 11, 20, 29 மற்றும் பெயர் எண்: 2.

உங்கள் எதிர்காலத்திற்குத் தேவையானதொரு பொருள் பற்றியோ, திட்டம் பற்றியோ உங்கள் நெருங்கிய நண்பர் ஒருவருடன் ஆலோசிக்க இருக்கிறீர்கள். அது வீடாகவும் இருக்கலாம். வாகன சம்பந்தமாகவும் இருக்கலாம். திங்கட்கிழமை அதற்கு உகந்த நாளாகும். ஏற்கெனவே நீங்கள் செய்து முடித்திருக்கும் ஒரு செயல் சம்பந்தமான நல்லதொரு முடிவு உங்களை நாடி வர இருக்கிறது. வீட்டில் ஒருவரின் திருமண விஷயமாகவோ, தேர்வின் முடிவோ அல்லது உத்தியோக சம்பந்தமானதொரு போட்டியின் முடிவோ என ஏதாவது ஒன்றாக இருக்கும். பயன்தரத்தக்க கால கட்டம். உங்கள் கைத்திறன் ஆக்கபூர்வமான செயல் திறன் அனைத்தும் உங்களுக்குத் தற்போது வெற்றியைத் தேடித் தரும். மாதம் பூராவும் உற்சாகமாக இருப்பீர்கள். குறிப்பாகப் புது வீடு புகுதல் அல்லது வாங்குதல், பழைய வீட்டை விற்றல் என ஏதாவது ஒரு விதத்தில் மகிழ்ச்சி ஏற்படும். ஒரு கேளிக்கையில் ஈடுபடுவீர்கள். அங்கு உங்களுக்கு நல்ல வரவேற்பு இருக்கும். ஆனால் வயிற்றுக் கோளாறு ஏற்படுவதற்கு வாய்ப்பு உண்டு. எனவே உணவு விஷயத்தில் உஷாராக இருங்கள். 2, 7, 16, 20, 25 தேதிகள் ஏற்றவை.

பிறந்த தேதி 3, 12, 21, 30 மற்றும் பெயர் எண்: 3.

இம்மாதம் கடுமையாக உழைக்க வேண்டியிருக்கும். அதற்குப் பலன் இல்லாமல் போகாது. தூரத்திலிருந்து நல்ல செய்தி ஒன்று வரும். குறிப்பாக வடகிழக்கு திசையிலிருந்து ஆதாயம் தரத்தக்க தகவல் வரும். கல்யாணம் ஆகாதவர்களுக்கு இது நாள் வரை இருந்த தடங்கல் நீங்கித் திருமணம் கைகூடி வரும். மஞ்சள் நிறமுள்ள ஆடைகளை அணிந்து செல்வதால் நன்மை சற்றுக் கூடுதலாக நடக்கும். சிவப்பாகவும், உயரமாகவும் உள்ள ஒருவர் உங்களுக்கு உதவுவார். சிலருக்கு நகைகள் வாங்கும் வாய்ப்பு உண்டு. தீர்த்த யாத்திரை செல்லும் பலன் சிலருக்குக் கிடைக்கும். பொதுவாக 3, 9,

6, 15, 26 தேதிகள் ஏற்றவை. 5, 7 தேதிகளை ஒதுக்கவும்.

பிறந்த தேதி 4, 13, 22, 31 மற்றும் பெயர் எண்: 4.

எதிர்பாராத லாபம் கிடைக்கும். உருது மொழி பேசும் முகமதிய நண்பர் ஒருவர் உங்களுக்கு உதவி செய்வார். கறுப்பு நிறத்தில் பூப்போட்ட உடைகளைத் தேர்ந்தெடுங்கள். வெளியுலகப் பழக்க வழக்கங்கள் உற்சாகமாகவும், உதவியாகவும் இருக்கும். ஒரு சிலருக்கு காலில் பித்தவெடி போன்றவை ஏற்படலாம். கால் நடைத் தீவனங்கள் ஜவுளி மற்றும் க ரு ங் க ல் சம்பந்தமான தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு லாபமுண்டு. சிவப்பு நிறமுள்ள ஓர் அம்மையாரால் நன்மை விளையும். ஒரு குறுகிய கால வெளிநாட்டுப் பயணம் அல்லது தூர பிரயாணம் ஒரு சிலருக்கு ஏற்படும். விருந்தினர்களை உபசரிப்பதற்கு ஏற்ற காலம். 2, 4, 6 தேதிகள் நல்லவை.

பிறந்த தேதி 5, 14, 23 மற்றும் பெயர் எண்: 5.

மிகவும் பொறுப்புடன் நடந்து கொள்ள வேண்டும். வம்புகள் வருவதற்கு வாய்ப்புகள் உண்டு. குறிப்பாக வெள்ளை நிறமுள்ள ஒரு பெண்மணியால் கலவரம் ஏற்படலாம். மாதம் முழுவதுமே எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஒரு சில பெண்களுக்கு கர்ப்ப சம்பந்தமான கோளாறுகள், பிறப்புறுப்பில் சில கோளாறுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. எனவே எச்சரிக்கையுடன் நடந்து கொள்ளுங்கள். கேரள நாட்டு மருந்துகள் உடல் நலத்திற்கு எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும். கிராம்பு அதிகம் சாப்பிட வேண்டும். வெள்ளிக்கிழமைதோறும் கருட சேவை செய்வது நல்லது. நல்ல நாட்கள் 5, 6, 8 மற்றவை சுமாரானவை.

பிறந்த தேதி 6, 15, 24 மற்றும் பெயர் எண்: 6.

இம்மாதம் முழுதும் இறை சம்பந்தமான பணியில் ஈடுபட வேண்டியிருக்கும். பக்திப் பாடல்கள், கதைகள், சொற்பொழிவுகள் ஆகியவைகளைக் கேட்கும் வாய்ப்பு அதிகம் இருக்கும். சிலர் மேடை ஏறித் தங்களது கலைத்திறனைக் காட்டும் வாய்ப்பு உண்டு. செலவு கூடுதலாகும். குடும்பத்தில் திருமண சம்பந்தமான பிரச்னைகள் உருவாகும். சிலருக்கு வடநாட்டு யாத்திரை ஏற்படும். ஒரு சிலருக்குக் கழுத்தில் ஏதேனும் ஒரு தொந்தரவு ஏற்படலாம். மற்றபடி இம்மாதம் மகிழ்ச்சியுடன் இருக்கக் கூடிய கால கட்டம். எல்லாத் தேதிகளும் உகந்த

# சிலருக்குத் திருமணம் தடைப்படுவது ஏன்?

சிலரது குடும்பத்தில் வயது வந்த பெண்களுக்கும் சரி, ஆண்களுக்கும் சரி, திருமணம் குறித்த காலத்தில் நடைபெறாமல் காலம் கடந்து செல்லுவதைக் காண்கிறோம். அத்தகைய தடைக்குக் காரணமென்ன என ஜோதிடர்களிடம் ஜாதகங்களைக் காட்டிக் கேட்பதும் உண்டு. ஜோதிடர்களும் ஏதேனும் ஒரு காரணத்தைக் கண்டறிந்து, குறை நீங்க சில பரிகாரங்களைக் கூறுவதும் வழக்கமே. சிலர் பரிகாரம் செய்தும் பலன் இல்லையே என்பார்கள். அவ்வாறு திருமணம் காலந்தாழ்த்தி நடைபெறுவதை ஆண்களின் வலது கை ரேகையும், பெண்களின் இடது கைரேகையும் வெகு துல்லியமாகக் காட்டும். அவ்வாறு கைரேகையைக் கொண்டு காரணம் அறிந்து, அதற்கேற்ப பரிகாரங்களை மணி, மந்திரம், ஔஷதம் எனும் மூன்று முறைகளில் ஏதேனும் ஒன்றைச் செய்து பயன் அடைந்தவர்கள் ஏராளம்.



குறிப்பாக ஒரு பெண்ணின் இடது கையில் (a — b) எனும் ரேகையை வேறு ஒரு ரேகை வெட்டி நின்றால் குருபலம் 25 ஆண்டுகளுக்கு மேல் தான் வரும் எனக் கண்டறியலாம். ஒரு சிலருக்கு (c — d) (a — b) எனும் ரேகைகள் இருந்தால், சொந்தத்தில் நடக்கும் என எதிர்பார்த்து, பிறகு அது நடக்காமல் போவதைக் காட்டும். சிலர் கையில் (m — n) எனும் ஒரே ரேகை

வையே.

பிறந்த தேதி 7, 16, 25 மற்றும் பெயர் எண்: 7.

வெளிநாட்டுப் பிரயாணம் சிலருக்கு ஏற்படலாம். வேற்று மொழிக்காரர்கள் உதவுவார்கள். உங்களுடைய தொழில் சம்பந்தமான முன்னேற்றத்திற்குரிய ஆலோசனை செய்வதற்கு ஏற்ற காலம். இனிப்பு சம்பந்தமான தொழில் நடைபெறும். கேளிக்கையில் ஈடுபட வேண்டியிருக்கும். எதையும் கட்டாயத்தின் பேரில் சாதிக்க முடியாது. வளைந்து கொடுக்கும் மனப்பான்மை தேவை. மேலதிகாரிகளை நேரடியாக சந்தித்து உங்கள் குறைகளை முறையிட ஏற்ற கால கட்டம். அதனால் பயன் உண்டு. மோட்டார் போன்ற வாகனத்தை உடையவர்கள் நஷ்டத்தை அடைய ஆளாவார்கள். [illegible], 15, 16, 25 ஏற்ற தேதிகள்.

பிறந்த தேதிகள் 8, 17, 26 மற்றும் பெயர் எண்: 8.

நீங்கள் எடுத்துக் கொண்ட செயல்களை நன்கு வெற்றியுடன் இம்மாதத்தில் முடிப்பீர்கள். அது தொழில் சம்பந்தமாகவும் இருக்கலாம். அல்லது வாங்குதல் விற்றல் போன்ற பேரங்களாகவும் இருக்கலாம். ஒரு சிலருக்கு திருநள்ளாறு போக வேண்டிய வாய்ப்புக் கிடைக்கும். கறுப்பு நிறமுள்ள நண்பர் ஒருவர் தக்க சமயத்தில் பண உதவி செய்வார். இம்மாதத்தில் ஏராளமான நண்பர்களுடன் பழகும் வாய்ப்பு உண்டு. உணர்ச்சிக்கும் மன எழுச்சிக்கும் இடம் கொடுக்காதீர்கள். அப்படி ஒரு நிகழ்ச்சி நடக்க இருக்கிறது. அது நல்ல நிகழ்ச்சியாகவே இருக்கும். 6, 5, 2 ஆகியவை நல்ல தேதிகள். மற்றவை சுமார்.

பிறந்த தேதி 9, 18, 27 மற்றும் பெயர் எண்: 9.

மாதத்தின் முற்பகுதி சாதாரணமாக இருக்கும். பிற்பகுதியில் எதிர்பாராத தனலாபம், பதவி உயர்வு பணவரவு கிடைக்கும். வீடோ, நிலமோ விற்கப்பட்டால் உங்களுக்குரிய பங்குத் தொகை உங்களை நாடி வரும். கொதிகலன் இரசாயனப் பொருட்கள், வெடி மருந்துகள் சம்பந்தமான தொழில்கள் இதுவரை இருந்த மந்த நிலையிலிருந்து மாறி, வெற்றி வாய்ப்பை நோக்கிச் செல்லும். ஒரு சிலர் கலை சம்பந்தமான நிகழ்ச்சிகளில் பங்கேற்பீர்கள்., அது இசையாகவும் இருக்கலாம். நாட்டிய நாடகமாகவும் இருக்கலாம். சில பெண்கள் குல தெய்வத்திற்கு ஆராதனை செய்யும் வாய்ப்பை பெறுவார்கள். 3, 6, 9, 18 நல்ல தேதிகள். 7 ஆம் தேதி தவிர்க்கவும்.

---

நீளமாக இருந்தால் அப்படிப்பட்டவர்கள் சொந்தத்தில் நடக்கும் என எதிர்பார்ப்பதற்கில்லை. வெகு தூரத்திலிருந்துதான் திருமண உறவு ஏற்படும் எனலாம். விதி ரேகைக்கு அருகே படத்தில் கண்டபடி (s — t) எனும் ஒரு சிறு ரேகை தோன்றினால் ஆறு மாத காலத்திற்குள் திருமணம் நடக்கும் என அறியலாம். அத்தகைய ரேகையில் ஒரு வெட்டு (o — p) இருந்தால் நிச்சய தார்த்தம் வரை வந்து, திருமணம் தடங்கலாகி விட்டது எனலாம். ஒரு பெண்ணின் கையில் குரு மேட்டில் (x — y) ஒரு ரேகையானது அவளுக்கு நல்ல இடத்துச் சம்பந்தம் காலாகாலத்தில் ஏற்பட்டுச் சீராக வாழ்வாள் எனக் காட்டும்.

குறைகள் உள்ள கையில் கால தாமதமாவதற்குரிய காரணத்தை அறிந்தால் மட்டும் போதாது. அதை நீக்குவதற்குரிய வழி முறைகளைப் பின்பற்ற வேண்டும். நம்பிக்கையுடன் அந்த முறைகளைப் பின்பற்றுவதுதான் சிறந்தது. படத்தில் உள்ளபடி குறைகள் தெரிந்தால் அதற்குரிய வந்தனை வழிபாடுகளைச் செய்ய வேண்டும். குறிப்பாகத் திருமணம் கைகூட குரு, சுக்கிரன், செவ்வாய், சூரியன், ஆகியவர்கள் அனுகூலமாக இருக்க வேண்டும். மேற்குறித்த குறைகள் உள்ளவர்களின் ஜாதகத்தைப் பார்த்தால் அதில் 8 இல் சூரியன், செவ்வாய் அல்லது 7 இல் சுக்கிரனும் சனியும் இருப்பார்கள். அல்லது 5 வது வீட்டில் ராகு இருப்பார். களஸ்திர தோஷம் ஒன்று மட்டும் திருமணத்திற்குத் தடங்கல் எனக் கூற முடியாது. புத்திர தோஷம் இருந்தாலும் திருமணம் காலந்தாழ்த்தி நடக்கும். எனவே, மேற்குறித்த நவ நாயகர்களுக்கு உரிய பரிகாரங்களை, உரிய முறையில் செய்வதால் விரைவில் திருமணம் கைகூடி வருவதைப் பார்க்கலாம்.

— ஜெயலட்சுமி கிருஷ்ணன்

புகையிலையைத் தண்ணீரில் போட்டு அந்தத் தண்ணீரை எறும்புப் புற்றுகளிலோ, எறும்பு இருக்கும் இடங்களிலோ ஊற்றினால் எறும்பு வராது.

— சே. லலிதா.

மஞ்சள் காமாலை போன்ற எண்ணெய் சேர்க்கக்கூடாத வியாதி வந்தால் டாக்டர்கள் இட்லி சாப்பிடலாம் என்பார்கள். அப்போது ப்ரீத்தில் எண்ணெய் தடவி வார்ப்பதற்குப் பதிலாகத் தண்ணீர் தடவி வார்த்தாலே நன்றாக வரும்.

— நிரஞ்சனா.

திடீரென்று இப்படி ஒரு சூடு வருமா உடம்புக்கு? வந்திருக்கிறதே. நெருப்பை வாரிக் கொட்டினாற்போல் அப்படி ஒரு கொதிப்பு மங்களத்துக்கு வந்திருந்தது. காலையில் கூட லேசான ஜுரம் என்றுதான் அலட்சியமாக ஒரு மாத்திரை சாப்பிடச் சொல்லி விட்டு, ஹரி வரும் அவசரத்தில் உமாவும் மலாதேவனும் கிளம்பியிருந்தனர்.

திரும்பி வருவதற்குள் இப்படியா நெருப்பாய்ச் சுடும்? உமா கவலையுடன் டாக்டருக்கு போன் பண்ணினாள்.

''அம்மா என்னம்மா பண்றது? திடீர்னு

# 23

நெருப்பா கொதிக்கறதே?'' என்றாள் கவலையோடு. அந்த ஜுரத்திலும் மங்களம் லேசாகச் சிரித்து விட்டு, ''உமா, ஹரி வரலையா?'' என்றாள் மெதுவாக.

''வந்திருக்கான்மா. ஹால்லயே உட்கார்ந்திருக்கான். உன்னைக் கூட்டிண்டு போலாம்னு உள்ளே வந்தா நீ இப்படிப் படுத்துண்டிருக்கே.''

''பரவால்ல உள்ளே கூட்டிண்டு வா. எனக்கு அவனைப் பார்க்கணும்.''

''இதோ வரேன்'' என்று எழுந்து ஹாலுக்கு வந்தாள்.

''ஹரி அம்மாவுக்கு நல்ல ஜுரமடிக்கறது உன்னைப் பார்க்கணுங்கறா. உள்ள கூட்டிண்டு வரச் சொல்றா. வாயேன்'' என்று அவனை அழைத்துக் கொண்டு உள்ளே போனாள்.



ஒரு நிமிடம் அவளையே உற்று நோக்கினாள் மங்களம். அந்த முகம்... சட்டென்று அவனை அருகில் இழுத்து நெற்றியில் முத்தமிட்டாள். "ஹரி உங்கப்பா பேரென்ன?" அவசரமாகக் கேட்டாள்.

"ஈஸ்வரி."

"உங்கப்பா பேரென்ன?" இன்னும் கொஞ்சம் சத்தமாகக் கேட்டாள்.

"ஈஸ்வரி."

"இன்னொரு தடவை சொல்லு."

"ஈஸ்வரி."

"இன்னொரு தடவை."

"ஈஸ்வரி."

"சொல்லிண்டேயிரு ஹரி. சொல்லிண்டே இரு." என்ற மங்களம் 'ஹோ' வென்று கதறி அழத் தொடங்கினாள்.

ஹரி பயந்து விட்டான். உமாவுக்கு ஒன்றும் புரியவில்லை.

"மங்களா, மங்களா என்ன இது குழந்தை மாதிரி?" மஹாதேவன் அவசரமாக அவள் அழுகையை நிறுத்தப் பார்த்தார்.

"எனக்குத் தெரிஞ்சுடுத்துங்க. இவன்தான் உங்க ஈஸ்வரியோட பிள்ளை. உங்க பிள்ளை. இனிமேலும் ஏன் மறைக்கறீங்க. சொல்லிடுங்க!"

"அம்மா! என்னம்மா சொல்றே? உனக்கும் இந்த விஷயம் தெரியுமா? எப்படிம்மா?" உமா பதறினாள். ஹரி திடுக்கிட்டு மஹாதேவனைப் பார்த்தான்.

"உனக்கும் தெரியுமான்னு கேக்கறேன்னா அப்ப உனக்குத் தெரியும்னுதானே அர்த்தம் உமா? உமா உங்கப்பா குழந்தை மாதிரி. மனசால யாருக்கும் துரோகம் பண்ண மாட்டார். எந்த ஜென்மத்துப் பாவமோ, அவரை இப்படி ஒரு பாவம் பண்ணத் தூண்டிடுத்து. ஆனால் அவர் அதை எங்கிட்டே மறைக்கலை. உடனேயே எங்கிட்டே சொல்லி அழுதார். அவளை எப்படியாவது கூட்டிண்டு வந்துடுங்கோ, நம்பளோடேயே இருந்துடட்டும்னு சொன்னேன். போய்ப் பார்த்தார். ஆனா அவ அங்கே இல்லை. செத்துப் போயிருக்க மாட்டான்னு மட்டும் மனசு நிச்சயமா சொல்லித்து. அன்னிலேர்ந்து இன்னி வரை தேடிண்டிருந்தோம்.

அப்பா மாதிரி ஒரு பையன்னு நீ சொன்னப்போ நாங்க அது ஈஸ்வரியோட பிள்ளையா யிருக்குமோன்னு நினைச்சோம். பல முறை ஹரியைப் பத்தி உங்கிட்ட கேட்டோம். ஏனோ நீ அவனைப் பத்தி சொல்றதையே விட்டுட்டே.

"நேத்திக்கு சித்ரா குழந்தையைப் பார்க்க ஆஸ்பத்திரிக்குப் போயிருந்தேன். அப்போ அவ அப்பாவைப் பார்த்தேன். ரெண்டு பேரும் பேசிண்டு இருக்கறப்போதான் அவ பேரு ஈஸ்வரின்னு தெரிஞ்சது. உடனே எனக்கு புகை படபடன்னு அடிச்சுண்டது. ஈஸ்வரிங்கற பேரைக் கேட்டதுமே அவதான் இவரோட ஈஸ்வரியான்னு தோணித்து. பக்குவமா அவகிட்டே விசாரிச்சேன். புருஷன் விட்டுட்டு ஓடிப் போயிட்டான்னு மட்டும் சொன்னா. ஆனா அவ வார்த்தைல கண்டிப்பா ஒரு பொய் மறைஞ்சிருக்கறது எனக்கு நன்னாத் தெரிஞ்சது. அவளோட வேதனை எனக்கு எத்தனையோ கதை சொல்லித்து. அதே வேதனையோட திரும்பி வந்தேன். ராத்திரி முழுக்கத் தூக்கம் வரலை. அவதான்னு சரியாத் தெரியாம அதைப் பத்தி இவர்கிட்டே சொல்லவும் தயக்கம்.

"இப்போ தெரிஞ்சுப் போச்சு உமா. இதோ உங்கப்பாவோட அச்சா இருக்கற இந்த முகத்தைப் பார்த்து எனக்கு நல்லாவே தெரிஞ்சுடுத்து." என்று மங்களம் மறுபடியும் கேவினாள்.

"அம்மா" என்று அழுது கொண்டே அவளைக் கட்டிக் கொண்டாள் உமா.

"என்னை மன்னிச்சுடும்மா. ஏதோ எனக்குத்தான் அப்பாவோட ரகசியம் தெரிஞ்சு போயிடுத்துங்கற நினைப்பிலே எல்லாத்தையும் மறைக்க வெச்சேன்."

"உனக்கு நல்லது செய்யறேங்கற நினைப்புல என்னையறியாமலே ஈஸ்வரி மாமிக்குத் துரோகம் பண்ணிட்டேன். இந்த ரகசியம் உனக்குத் தெரியாதுன்னு நினைச்சுண்டு, இதை நீ இத்தனை வயசுக்கு மேல தாங்க மாட்டேங்கற பயத்துல எனக்குள்ளேயே புதைச்சுண்டு. அப்பா பண்ணின தப்புக்கு நாமாவதுபிராயச்சித்தம்பண்ணலாம்னு உங்களிடமிருந்து ஈஸ்வரியை மறைத்து. சந்திக்க விடாமல்... சத்தியமா உனக்கு இந்த விஷயம் தெரிஞ்சிருக்கலாம்னு நெனக்க எனக்குத் தோணலைம்மா" உமா பெரிதாக அழுதாள். மஹாதேவன் கண்களைத் துடைத்துக் கொண்டார்.

"போ, போய், அந்த ஈஸ்வரியைக் கூட்டிண்டு வா. எனக்கு என்னமோ நெஞ்சை அடைக்கறு மாதிரி இருக்கு."

"இரும்மா இதோ கூட்டிண்டு வர்றேன்."

"தேவையில்லை உமா. இதோ ஈஸ்வரி மாமியே வர்றா" என்று முரளி சொன்னான்.

இத்தனை நேரம் கேட்டதெல்லாம் கனவா நனவா என்று புரியவில்லை அவனுக்கு. பிரமிப்பாக இருந்தது. இதனால்தான் போட்டோவை ஈஸ்வரி மாமியிடம் காட்ட வேண்டாம் என்றுனோ? காட்டினால் அவளுக்கு அப்பாவை அடையாளம் தெரிந்துவிடும் என்ற எண்ணத்தில்தான், காட்டாமலே மறைத்தானோ*?

தன் அப்பாதான் ஹரிக்கும் சித்ராவுக்கும் அப்பா என்ற உண்மை தெரிந்தே, பாவம் எத்தனை காரியம் பண்ணியிருக்கிறுள்? ஹரியைப் படிக்க வைத்து, அப்பா கையாலேயே சித்ராவுக்குக் கல்யாணம் பண்ணி, தன் மூலம் கிடைக்க முடியாத பாக்கியத்தை எல்லாம் சித்ரா மூலம் கொடுத்து... ஓ! உமா நீ ஒரு பெண் தெய்வம். இப்படித்தான் அவனுக்கு நினைக்கத் தோன்றியது.

**வித்யா சுப்ரமணியம்**

ஈஸ்வரியின் கண்களில் முதலில் ஹரிதான் பட்டான். கிட்டே வந்து விழுங்கி விடுகிறாற்போல் பார்த்தவள், லேசாக அவன் கன்னத்தைத் தடவி, "எப்படிடா கண்ணு இருக்கே? நீ வந்தாச்சுன்னு சொன்னா. இங்கே இருக்கான்னும் சொன்னா. எனக்குப் பொறுமையில்லே. ஓடி வந்துட்டேன்" என்றாள் பாசம் பொங்கிய குரலில்.

மகாதேவன் அவளையே பார்த்தார். அந்த ஈஸ்வரியா இவள்? அந்தத் துறுதுறுப்பும் இளமையும் போய் கறுத்து இளைத்து, ஓடாகி. ஓ! நான் இவளுக்குச் செய்த கொடுமை... இவளை நிறையவே கஷ்டப்பட வைத்திருக்கிறது. அவர் கண்கள் கலங்கின.

ஹரிக்குப் பைத்தியமே பிடித்துவிடும் போல் இருந்தது. 'உமாவும் நானும் ஒரு... உமா என்னோட அக்காவா? அவளுக்கு இது தெரிஞ்சுதான் எனக்கு இத்தனை உதவி பண்ணினாளா? அப்படின்னா என் மேல் அவளுக்கு இயல்பான பாசம் வரலையா? தன் அப்பா செஞ்ச துரோகத்துக்குப் பரிகாரம் தேடத்தான் என்னை பகடைக்காயா ஆக்கிண்டாளா?' ஒரு நிமிடத்தில் உமா தன் மனத்தின் அதல பாதாளத்தில் விழுந்து விட்டதாகத் தோன்றியது அவனுக்கு.

"இதைவிட என்னைக் கொன்னு போட்டிருக்கலாம்: என் மேலே நீங்க வெச்சிருந்த பாசத்துக்குக் கீழ இத்தனை சுயநலமா?" இரண்டே வார்த்தைகளில் தன் வெறுப்பை உமாவின் மேல் கொட்டிவிட்டு 'விர்' ரென்று வெளியே போய் விட்டான் ஹரி.

"ஹரி" என்று அலறினாள் உமா. ஈஸ்வரி எதற்குப் பிள்ளை அவனிடம் அப்படிப் பேசி விட்டுப் போகிறான் என்று திகைத்து விட்டு நாலு பக்கமும் பார்த்தாள்.

ஒரிடத்தில் அவள் பார்வை நிலைகுத்தியது. இருபத்தெட்டு வருடங்களுக்கு முன்பு ஓடைக்கரையில், அதன் சலசலப்பில் தன்னை ஆக்கிரமித்துக் கொண்ட உருவம் கண் முன்னே வயதான கோலத்தில் தெரிந்த போது... அவளுக்குக் கண் இருட்டிக் கொண்டு வந்தது. தன்னையே கிள்ளிப் பார்த்துக் கொண்டாள்.

"நானேதான் ஈஸ்வரி!"

அதே குரல்!

அடுத்த நிமிடம் ஈஸ்வரி, 'கோ' என்ற கதறலுடன் வேரற்ற மரமாய் அவர் பாதங்களில் விழுந்தாள்.

நன்றாக அழட்டும் அவள். இருபத்தெட்டு வருடங்களின் துக்கங்களை இப்போது அழுது கரைத்துக் கொள்ளட்டும். அப்போதுதான் அவள் மனசு கொஞ்சம் லேசாகும் என்று விட்டு விட்டார் மகாதேவன்.

கோபத்துடன் போன ஹரியின் பின்னாலேயே ஓடினாள் உமா. அவன் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை.

"ஹரி, நான் சொல்றதைக் கேளு. இந்த உண்மை தெரியறதுக்கு முந்தியே நான் உன் மேலே பாசம் வெச்சேன் ஹரி. உன்னைப் படிக்க வெக்கறேன் நீ எவ்வளவு வேணும்னாலும் படின்னு உங்கிட்டே சொன்னப்புறம்தான் எனக்கு இந்த உண்மை தெரியும். இது சத்தியம். என்னை நம்பு ஹரி. சத்தியமா எனக்கு எந்தச் சுயநலமுமில்லை. அப்பா செய்ய வேண்டிய கடமையைத்தான் செய்யணும்னு நினைச்சேன். அது என் கடமைன்னும் நெனைச்சேன். ப்ளீஸ் நில்லு ஹரி!"

உமா அழுது கொண்டே பின்னால் ஓடினாள். அவன் காதிலேயே போட்டுக் கொள்ளாமல் வாசலில் நிறுத்தியிருந்த காரில் ஏறி உட்கார்ந்து ஒரு வெறியோடு கிளப்பிக் கொண்டு பறந்தான்.

(தொடரும்)

சிலருக்கு வாய்வு உபத்திரவத்தால் அடிக்கடி ஏப்பம் வரும். அதற்குச் சிறிது சீரகத்தை எடுத்துக் கரண்டியில் படபடவென்று பொரியவிட்டுப் பின் அதைப் பொடித்து ஒரு ஸ்பூன் தேனில் நன்கு குழைத்து ஒரு நாளுக்கு மூன்று முறை சாப்பிட்டு வர ஏப்பம் குறையும். மூன்று நாட்களில் நல்ல குணம் தெரியும்.

— கமலா நாராயண்

அவியல் செய்யும் போது அரைத்த தேங்காய் விழுதைத் தயிரில் கலக்காமல் வேக வைத்த கறிகாய்களுடன் சேர்த்து பிறகு தயிர் சேர்க்கவும். இதனால் அவியல் நீர்த்துப் போவதைத் தவிர்க்கலாம்.

— இந்திரா கோபாலன்.

கறிக்கோ, கூட்டிற்கோ, துருவிய தேங்காயில் 1 ஸ்பூன் தேங்காய்ப் பால் எடுத்து, இறக்கும் போது ரசத்தில் விடுங்கள். ரசத்தின் ருசியே ருசி.

— கமலா.

# "எனது 20-வருடத்திய டூத் பேஸ்ட்டைவிட உங்களுடையது எந்த விதத்தில் சிறந்தது?"



## ஒரு சிறப்பு மட்டும் அல்ல- மூன்று சிறப்புகள்.
## கிராம்பு+ஃப்ளோரைட்+மின்ட்.

கிராம்பின் நற்குணம் துர்நாற்றம் விளைவிக்கும் பாக்டீரியாக்களிடமிருந்து பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது.

ஃப்ளோரைட் தரும் பாதுகாப்பு சொத்தையும், பற்குழிகளும் ஏற்படாமல் தடுக்கிறது. பல் எனாமலை பலப்படுத்துகிறது.

மின்ட் தரும் புத்துணர்ச்சி வாய் மணக்கும் சுவாசத்தை வழங்குகிறது.

ப்ருடண்ட் மட்டுமே பற்களைப் பராமரிக்க இத்தகைய நிகரற்ற சிறப்புகளை ஒரு சேர அளிக்கிறது—அதுவும் அருமையான சுவை கொண்ட டூத்பேஸ்ட்டில்!

அரிய ஸாஃப்ட் ஸ்க்வீஸ் ட்யூப் சேர்த்தியானது. ஆகையால் இறுதிவரை டூத்பேஸ்ட்டை உபயோகிக்கலாம்.

பார்லே




**மகத்தான மூன்று- பற்களைப் பராமரிக்க நன்று.**



nutrine
MILK
மீண்டும் மீண்டும்
சுவைக்கத் தூண்டும்
நியூட்ரின்
மில்க் பிஸ்கட்ஸ்
nutrine
BISCUITS
MILK
nutrine
nutrine

# என்ன சொல்கிறார்கள் வாடிக்கையாளர்கள்!

ஒரு வீட்டில் காலடி எடுத்து வைத்ததுமே அந்த வீட்டின் பெண்மணியின் முகம் எப்படி இருக்கிறதோ அதற்கேற்பதான் விருந்தினர்கள் அந்த வீட்டில் தங்குவார்கள். வீட்டிற்கு மட்டுமல்ல இந்த உதாரணம் அலுவலகங்களுக்கும் பொருந்தும். அலுவலகங்களில் வேலை பார்க்கும் பெண்மணிகள் முகமலர்ச்சியுடன் நம்மை வரவேற்று கேட்ட கேள்விகளுக்கு பதில் சொன்னால் தான் அந்த அலுவலகத்தைத் தேடி போவோம். அலுவலகமே இப்படியென்றால் பொது மக்களுடன் நெருங்கிய தொடர்புடைய வங்கித் துறையைப் பற்றி கேட்கவே வேண்டாம். அநேகமாக இன்று வங்கிகளில் ஆண்களை விட பெண்கள் அதிகமாக வேலை பார்க்கிறார்கள். இந்தப் பெண்மணிகள் வரும்,வங்கி வாடிக்கையாளர்களிடம் எப்படிப் பழகுகிறார்கள்?



**ஆனந்தராவ்:**

இன்று நம் நாட்டில் தேசியமயமாக்கப் பட்ட வங்கிகளிலும் சரி, தனியார் வங்கிகளிலும் சரி, பெண்கள் சிறப்பாக வேலை செய்கிறார்கள். பொதுச் சேவைக்குத் தேவையான பொறுமை, சகிப்புத் தன்மை, அமைதியான மனோபாவம் ஆகிய தகுதிகள் ஆண்களை விட பெண்களுக்குத்தான் அதிகமாக இருக்கின்றன. நான் இரண்டு வங்கிகளில் கணக்குகள் வைத்திருக்கின்றேன். ஒரு வங்கியில் என் கணக்கை ஒரு ஆணும், இன்னொரு வங்கியில் ஒரு பெண்ணும் பற்று வரவு வைக்கிறார்கள். ஆண் என்னிடம் தேவைக்கு அதிகமாக் பேசவே மாட்டார். ஆனால் பெண் வங்கி ஊழியர் என்னிடம் காசோலையைப் பெற்று பதிவு செய்து தருவதுடன், ''சௌக்யமா சார்? வீட்ல எல்லாம் எப்படி இருக்காங்க'' என்றெல்லாம் விசாரிப்பார். ஊழியர் — வாடிக்கையாளர்கள் என்று வியாபார முறையில் பெண் ஊழியர்கள் பழகாமல் குடும்பப்பாங்குடன் பழகுவதால் நமக்கும் அந்த வங்கியின் மேல் ஓர் அன்னியோன்யம் ஏற்படுகிறது.



**முகமது இக்பால்:**

பெண்கள் எங்கு வேலைக்குச் சென்று

னும் நமக்குத் தொல்லை தான்! அவங்க ஆடி, அசைந்து வருவதற்கு நேரமாகும். அலுவலகத்திற்கு வந்தோமா, வந்தவுடன் வேலையைப் பார்த்தோமா என்பது கிடையாது. வந்ததும் சக ஊழியர்கள் என்ன பேசிக் கொள்கிறார்கள் என்பதை முதலில் கவனிப்பார்கள். சுவையான குடும்பப் பேச்சாக இருந்தால் இவர்களும் உடனே அதில் கலந்து கொள்வார்கள். வீட்டுக் கதை, புடவை, நகை பற்றிய கருத்து பரிமாற்றங்களை எல்லாம் வங்கியில்தான் வைத்துக் கொள்ளுவார்கள். இதனால் வேலையில் குறுக்கீடு ஏற்பட்டு வேலை காலதாமதம் ஆவது உண்டு! இவர்களிடம் பாராட்ட வேண்டிய ஒரே அம்சம் ஆண் ஊழியர்களைப் போல் கோபப்படாமல் பொறுமையாக எதற்கும் தெளிவாக பதில் சொல்வார்கள்! அவ்வளவுதான்.



**சாரதா:**

நான் கணக்கு வைத்திருக்கும் வங்கியில் பணி புரியும் பெண்கள் மிகச் சிறப்பாகவே பணியாற்றுகிறார்கள். பெண்களைப் பொறுத்த வரையில் தாம் இந்த வேலையைத் தான் செய்ய வேண்டும், இவர் இந்த வேலையைத் தான் செய்ய வேண்டும் என்ற மனப்பான்மை கிடையாது. ஆனால் ஆண்களைப் போல் சுறுசுறுப்பாக இவர்கள் இயங்குவதில்லை. சந்தேகப் பேர் வழிகளும் கூட. வங்கியில் நம் செக்கை பணம் பெறுவதற்காக கொடுத்ததும் நாம் அவர்களுக்குத் தெரிந்தவர்களாக இருந்தாலும் கூட திரும்ப திரும்ப பார்ப்பார்கள். அதில் சின்ன தவறு இருந்தால் கூட பணம் தராமல் செக்கை திருப்பி அனுப்பி விடுவார்கள்.



**சித்ரா கிருஷ்ணமூர்த்தி:**

வங்கித் தொழிலில் வேலை பார்க்கும் பெண்களுக்கு அதிகம் பொறுமை வேண்டும். கூட்டல், கழித்தல் கணக்குகளை போடுவதால் மன சிந்தனை சிதறாமல் வேலை பார்க்க வேண்டும். மன சிந்தனை பெண்களுக்குத்தான் சிதறாமல் இருக்கும். மேலும் பெண்களைப் பொறுத்த வரையில் அவர்களின் உடல் நிலையே அவர்களுக்குப் பெரிய மைனஸ் பாயிண்ட். வங்கிகளில் இருக்கும் பெரிய பெரிய லெட்ஜர்களை அவர்களால் எளிதில் தூக்க முடியாது. லெட்ஜர்களை மேஜையின் மீது கொண்டு வருவதற்குக் கூட ஒரு பியூனின் உதவி அவசியம். முக்கியமான முடிவுகள் எடுக்க வேண்டும் என்றாலோ அல்லது வாடிக்கையாளர்களுக்கு வங்கியின் சார்பாக ஏதாவது சந்தேகம் நீங்க வேண்டும் என்றாலோ பெண்கள் தாங்கள் பொறுப்பு எடுத்துக் கொள்ளாமல் மேல் அதிகாரிகளிடம் அனுப்பி விடுகிறார்கள். எதையுமே துணிச்சலோடு எதிர் கொண்டு செயல் ஆற்றும் திறன் இவர்களுக்குக் கிடையாது. வங்கித் தொலை பேசியில் பேச ஆரம்பித்து விட்டால் கேட்கவே வேண்டாம். நாம் நின்று கொண்டே இருக்க வேண்டியதுதான். ஆனாலும் தாய்மை உணர்வோடு கனிவாக வரும் வாடிக்கையாளர்களிடம் நடந்து கொள்கிறார்கள். அதைப் பாராட்டலாம்.

பேட்டி: **பி. ஆர். வி.**

---

மிக்ஸருக்காக அவலைப் பொரிக்கும் போது, சிதறிப் போகும். இதைத் தவிர்க்கக் கைப்பிடியோடு கூடிய வடிகட்டியில் அவலைப் போட்டுக் கொதிக்கும் எண்ணெயில் முக்கிப் பொரித்து எடுத்து வைக்கலாம்.

— விஷி

சாம்பார், மோர்க் குழம்பு ஆகியவற்றிற்கு பருப்பு உருண்டை செய்து போடும் பொழுது ஒரு டீஸ்பூன் அரிசி மாவை உருண்டை கலவையுடன் கலந்து உருட்டி செய்தால் அவை கரைந்து போகாமல் முழுசாக இருக்கும்.

— சாஸ்வதி.





# வங்கியில் வேலைக்குச் சேர ஆசையா?

திருமணம் நிச்சயமான கையோடு எல்.ஐ.சி. யிலே ஒரு 'சீட்'டுக்குப் பதிவு செய்து விடும் 'கன்கார்ட் யுகம்' இது. பள்ளியில் காலடி எடுத்து வைத்த உடனேயே பல பெற்றோர்கள் இந்தத் துறையில்தான் தம் குழந்தைகள் இடம்பெற வேண்டுமென்ற திட்டத்துடன் செயல்படத் துவங்கி விடுகிறார்கள்.

இவற்றில் நல்ல ஊதியம், முன்னேறும் வாய்ப்பு, மருத்துவ மற்றும் விடுமுறை வசதிகள், எல்லாவற்றுக்கும் மேலாக வீடு கட்ட, வாகனம் வாங்கக் கடன் சலுகைகள் போன்ற பல காரணங்களால் வங்கியிலே வேலை பலர் கண்களுக்குக் கவர்ச்சிகரமாகக் காட்சி தருகிறது. இப்படிப்பட்ட ஒரு வேலையைப் பெற என்னென்ன தகுதிகள் வேண்டும், வேலையில் சேர்ந்தபின் படிப்படியாக முன்னேறுவதற்கு எப்படித் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று பாங்க் ஆஃப் இந்தியாவின் தி.நகர் கிளையில் அக்கவுண்டண்டாகப் பணிபுரியும் திருமதி லீலா இராமநாதன் சில யோசனைகளைத் தருகிறார்.

**கல்வித் தகுதி:**

பலர் நினைப்பது போலப் பொருளாதாரப் படிப்பு இன்றியமையாதது அல்ல. விஞ்ஞானப் பாடத்தில் பட்டம் பெற்றிருந்தால் கூட, எந்த விஷயத்தையும் 'சட்'டென்று கிரகித்துக் கொண்டு விடும் தன்மை, பொது அறிவு ஆகியவையே அடிப்படைத் தகுதிகள். முன்பெல்லாம் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்குக் கூட வங்கியிலே வேலை கிடைத்தது. ஆனால் இப்போதிருக்கும் கடும் போட்டி காரணமாகப் பட்டப்படிப்பு அவசியமாகி விட்டது. கிளார்க் வேலைக்கான வயது வரம்பு 18 முதல் 25 வரை. **B.S.R.B.** எனப்படும் **Banking Service Recruitment Board** தான் தேசியமாக்கப்பட்ட எல்லா வங்கிகளின் கிளார்க் வேலைகளுக்கும் ஆட்களைத் தேர்ந்தெடுத்துத் தருகிறது.

காலியிடங்கள், சில வங்கிகளின் விரிவுபடுத்தும் திட்டங்கள் ஆகியவற்றைப் பொறுத்து செய்தித் தாள்களில் விளம்பரங்கள் அளிக்கப்படுகின்றன. பின்பு தேர்வுகளும் அந்தந்த மாநில மையங்களில் நடத்தப்படுகின்றன. இறுதிக் கட்டமான நேர்முகத் தேர்வுகளும் உண்டு. வங்கியின் செயல் முறைகளைப் பற்றிய ஆழமான கேள்விகளைச் சந்திக்க நேரிடுமோ என்று அச்சப்படத் தேவையில்லை. பொதுவாக புத்திக் கூர்மை, பிரச்னைகளைப் புரிந்து கொண்டு தீர்வு காணும் திறன், அடிப்படைக் கணக்குப் பயிற்சி ஆகியவற்றை வைத்தே கேள்விகள் தயாரிக்கப்படுகின்றன.

அதிகாரிகளாக நேரடியாக எடுத்துக் கொள்ளப்படுபவர்களும் உண்டு. இவர்கள் முதல் வகுப்புப் பட்டதாரிகளாக இருக்க வேண்டும். வயது வரம்பு 21 முதல் 28 வரை. இத்தகவல்களால் நாம் அறிந்து கொள்ள வேண்டிய முக்கிய விஷயம், வங்கியிலே வேலை பார்க்க வேண்டுமென்ற ஆசை இருந்தால் அதற்கான முயற்சிகளை பட்டப்படிப்பு

முடித்த உடனேயே எடுத்து விடுங்கள். சிலரைப் போலத் திருமணமாகிக் குழந்தைகளும் பிறந்து பின்பு "நாமும் வேலையொன்று தேடிக் கொண்டாலென்ன?" என்ற விழிப்புணர்ச்சி வரும்போது வங்கியொன்றிலே வேலை வாய்ப்பு அனேகமாகக் கை நழுவிப் போயிருக்கும்.

**பயிற்சி:**

வங்கியிலே வேலை கிடைத்த பின் தான் அதிலுள்ள பல பிரிவுகளும் எவ்வாறு செயல்படுகின்றன என்று அறிந்து கொள்வது அவசியமாகிறது. இதற்கான பயிற்சியை அவர்களே தருகிறார்கள். உதாரணம் ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் இதற்காக 30 கோடி ரூபாய்ச் செலவில் மிக விரிவான ஒரு திட்டமே வைத்திருக்கிறார்கள். இவர்களுக்கு நாடு முழுவதிலும் 72 பயிற்சி மையங்கள் உள்ளன. வேலையில் சேர்ந்தவுடன் மூன்று நாட்கள் மிக மிக அடிப்படையான அளவில் வங்கியின் செயல் முறைகள் கற்றுத் தரப்படுகின்றன. பின்பு ஒரு வருடம் முடிந்ததும் 12 நாட்கள் பயிற்சியும், திரும்ப 3 முதல் 5 வருடங்கள் அளவில் திரும்பவும் ஒரு பயிற்சி முகாமும் நடத்துகிறார்கள். 'டம்மி பேங்க்' என்றழைக்கப்படும் மாதிரி வங்கியிலே இப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. செயல் முறைப் பயிற்சி தவிர ஒரு பிரிவினருக்குத் தலைமை தாங்கித் திட்டங்களைச் செயல்படுத்துதல், தன் கீழ் இயங்கும் சிப்பந்திகளை இணைந்து செயலாற்ற வைக்கும் திறன் ஆகியவற்றிலும் பயிற்சிகள் தரப்படுகின்றன.

**வாய்ப்புகள்!**

வேலை நிலையான பின் பதவி உயர்வு கொடுப்பதற்கு ஒவ்வொரு வங்கியிலும் ஒவ்வொரு விதமான மதிப்பெண்கள் வழங்கும் முறைகள் கையாளப்படுகின்றன. **C.A.I.I.B.** போன்ற வங்கிகள் தொடர்பான பரீட்சைகளில் தேர்ச்சி பெற்றால் பதவி உயர்வுக்கான வாய்ப்புகள் அதிகரிக்கின்றன.

[redacted]

துணிகளுக்கு இஸ்திரி போடும் போது அவைகளுக்கு வாசனையும் ஏற்றலாம். எப்படி? முதலில் இஸ்திரி போடும் மேஜையின் மீது கொஞ்சம் 'ஓடி கொலோன்' தெளித்துக் கொள்ள வேண்டும்; அவ்வளவுதான். இஸ்திரி போடும் போது இருக்கும் லேசான சூடு அந்த வாசனையை இழுத்துத் துணிகளுக்கு ஏற்றி விடும்.

— கே. வனிதா.

அதிகாரிகள் பகுதியில் ஒவ்வொரு வங்கியிலும் ஜூனியர் மேனேஜ்மெண்ட், மிடில் மேனேஜ்மெண்ட் என்று பலவிதமான உட்பிரிவுகள் உண்டு. அவற்றிற்கு 12 ஆண்டுப் பணிக்குப் பின்னரும், பின்பு ஐந்தைந்து ஆண்டுகளுக்குப் பின்னும் அந்த வங்கியாலேயே நடத்தப்படும் உட்தேர்வுகளும் உண்டு. இந்த முறைகள் வங்கிக்கு வங்கி மாறுபடுகின்றன.

ஸ்டேட் பாங்க் ஆஃப் இந்தியாவில் 25 வருடங்களுக்கு மேல் பணியாற்றிய திரு. கே. எஸ். ரங்கநாதன் கூறுகிறார்: "**Regional Manager** பதவிக்கு ஒரு பெண் ஆசைப்பட்டால் அவளுக்குக் கிராமப் புறங்களில் வேலை பார்த்த அனுபவமும் இருந்தால்தான் அப்பணியை அவளால் சிறப்பாக ஆற்ற முடியும். கிராமங்களில் பால்பண்ணை நடத்துதல், வயல் வேலைகளுக்கான காலங்கள் போன்றவற்றைப் பற்றி ஓரளவாவது தெரிந்திருந்தால் தான் அவை போன்ற வேலைகளுக்காகக் கடன் வாங்க வருபவர்களிடம் சரியாகப் பேசி நிலைமையைப் புரிந்து கொள்ள முடியும்."

**உணர்வுபூர்வமான தகுதிகள்:**

அதென்ன புதுத்தகுதி என்று கேட்கிறீர்களா? ஆங்கில இலக்கியத்தை ஒருவர் கரைத்துக் குடித்திருந்தாலும், தன்னிடம் புதுச் செய்யுள் ஒன்றைக் கற்க வரும் மாணவனிடம் தான் கண்ட சுவையின் நூறில் ஒரு பகுதியையாவது காணும்படி தூண்டுவதுதானே ஒரு நல்ல ஆசிரியரின் இலக்கணம்? கல்வித் தகுதிகளை மட்டுமே கொண்டு வேலையிலே வெற்றியின் உச்சிக்குச் செல்ல முடியுமா? வங்கிகளிலே முன்னேற அங்கே வேலை பார்க்கும் சிலரின் அனுபவ பூர்வமான ஆலோசனைகள்:

வேலைகளை உடனுக்குடன் முடித்துக் கணக்குப் புத்தகங்களைச் சீராக வைத்திருத்தல். உதாரணமாக வெளிநாட்டில் வேலை பார்த்து அந்நாட்டுப் பணத்தை இங்கே தன் கணக்குக்கு அனுப்பும் ஒருவருடைய 'செக்'குகளை நம் நாட்டுப் பணத்தில் மாற்றுவதற்கான "**Courier Service**" ஐ பகியம் 2 மணிக்குள் பயன்படுத்திக் கொண்டுவிட வேண்டும். அன்று கோட்டை விட்டுவிட்டு அடுத்த நாள் சாவகாசமாகக் கணக்கிலே பதிவு செய்தால் அவருக்கு ஒருநாள் வட்டி நஷ்டம். உங்கள் பெயரிலும் ஒரு கரும்புள்ளி.

பொறுமை. வாடிக்கையாளரின் திருப்திதான் வங்கியின் வளர்ச்சி. இந்த முக்கியக் கோட்பாட்டை மனதில் கொண்டு, தான் ஏதாவது கணக்கில் தவறு செய்திருந்தால் அதைத் தாராளமாக ஒப்புக் கொண்டு, வாடிக்கையாளரிடம் தவறிருந்தால் அவர் மனம் நோகா வண்ணம் அதைச் சுட்டிக் காட்டுதல்.

வேலையில் ஏதாவது சந்தேகம் வந்தால் வீண் கௌரவம் பார்க்காமல் அடுத்தவரிடம் கேட்டுத் தெரிந்து கொள்வது. ஒரு தவறு பல தவறுகளுக்கு அடிகோலுமல்லவா?


ஜ்வெல்
ஆயுளுக்கும் அயராத பணி
நிர்ணயப்படி கொள்ளளவு
ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் வெண்ட் ட்யூப்- துருப்பிடிக்காதது.
ஐ எஸ் ஐ முத்திரை தரத்திற்கும் பாதுகாப்பிற்கும் உத்தரவாதம்
துரு ஏறாத ஸ்க்ருகளுடன் உறுதியான கைப்பிடி.
Jewel
நேர்த்தியான ஃபினிஷ் ஆண்டுக்கணக்கில் புதுமை மெருகு.
நீடித்துழைக்கும் திடமான அலுமினிய 'காஜ்'
2517 ad
ஆனந்தா ஏஜன்ஸீஸ்
45-46, தெற்கு ஆவணி மூலவீதி
மதுரை-625 001 போன்: 31118

**விழிப்புணர்வு:**

செய்தித்தாள்களில் இப்போது அடிக்கடி தென்படும் பொன் பரப்பை போன்ற சம்பவங்கள் 'கேஷ்' கையாளுபவர்களுக்குக் கிலியை ஏற்படுத்தலாம். அதற்கெனத் தற்போது எல்லா வங்கிகளிலும் நிறுவப்பட்டுள்ள அபாய அறிவிப்பு முறைகளை எப்படிக் கையாள வேண்டுமென்று அறிந்திருத்தல், சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையில் எவரேனும் நடந்து கொண்டால் தாமதம் செய்யாமல் உடனே உரிய நடவடிக்கை எடுத்தல், கரன்ஸி நோட்டுகளைக் கையாளும் போது பிறருடைய உழைப்பின் பயனைப் பாதுகாக்கும் பெரும் பணி தங்கள் கையிலிருக்கிறது என்பதை உணர்ந்து நடத்தல். வங்கியின் விதிமுறைகளைப் பற்றி நன்கு அறிந்து வைத்திருத்தல். மாறிவிட்ட புதுவிதிகளைப் பற்றி நன்கு தெரிந்திருந்தால்தான் வாடிக்கையாளர்களுடைய சந்தேகங்களைத் 'திரு திரு' வென விழித்துக் கொண்டு நின்றிருக்காமல் தெளிவான முறையில் தீர்த்து வைக்க முடியும். அவர்களுக்கும் வங்கியின் மீது நம்பிக்கை பிறக்கும். கடன் கேட்டு வருபவர்களிடமும் அதற்கான விதிகளைத் தெளிவாகக் கூறிவிட்டால் பின்பு ''நீங்கள் இப்படியெல்லாம் உண்டு என்று சொல்லவேயில்லையே'' என்பது போன்ற சிக்கல்களுக்கு இடமிருக்காது. கடன் கேட்டு வருபவர்கள் தரும் பத்திரங்கள் உண்மையானவை தானா, அவர்கள் நிஜமாகவே தாங்கள் சொல்லும் பணிக்குத் தான் அந்தப் பணத்தைப் பயன்படுத்தப் போகிறார்களா போன்றவற்றையெல்லாம் தீர விசாரித்துக் கொள்ள வேண்டும்.


**வாடிக்கையாளர்களிடம் நல்லுறவு:**

வாடிக்கையாளர்களிடம் சுமுகமாகப் பேசி, அவர்கள் குடும்ப நலன்களை விசாரித்து அவர்கள் குடும்பத்தில் ஒருவராகவே பழகுவது. பிற்காலத்தில் ஏதாவது பிரச்னை ஏற்பட்டாலும் நட்பு முறையில் அதை அணுகி இரு தரப்புக்கும் மனக் கசப்பு ஏற்படாமல் தீர்த்துக் கொள்ளலாம்.

இந்தக் கடைசிப் பகுதியை மட்டும் ஓர் அவசர நோட்டம் விட்ட என் தோழி கூறுகிறாள். 'இந்த தகுதிகளைப் பொதுவான முறையில் கடைப் பிடித்தால் வங்கியில் என்ன, வாழ்க்கையிலும் கூட வெற்றி பெற்றுவிடுவோமே!' இனியும் என்ன தடை? முயன்று தான் பார்ப்போமே!

— **நிர்மலா சக்கரவர்த்தி**

புகைப்படம்: ஏ. எஸ். திவாகர்





நந்தினி குல்வாடி



சுமதி ஐயர்



• மீனு



சுதாஷா,
சாந்தா ரங்கசாமி



மீரா வேம்பு •

# விளையாட்டில் வங்கி வீராங்கனைகள்!

தமிழகப் பெண்கள் கிரிக்கெட் சங்கத்தின் காரியதரிசியான ஸ்ரீமதி மீரு மஞ்ஜுநாதலால், வங்கிகளில் பணிபுரியும் கிரிக்கெட் வீராங்கனைகளை அறிமுகப்படுத்துகிறார்—

"பெங்களூரில் கனரா வங்கியின் தலைமையகத்தில் தலைசிறந்த ஆட்டக்காரர்களான சாந்தா ரங்கசாமி, ஜானவி தேசாய், கல்பனா, முக்தா போன்ற எட்டு கிரிக்கெட் விளையாட்டு வீராங்கனைகளுக்கு வேலை கிடைத்திருக்கிறது. தமிழக காப்டன் சுதாஷாவும் சுமதி ஐயரும் 'ஸ்போர்ட்ஸ் கோட்டா'வில் கனரா வங்கியில் டெஸ்ட்களின்றிச் சேர்த்துக் கொள்ளப்பட்டவர்கள். இந்தியன் ஓவர்சீஸ் வங்கியில் பணிபுரியும் சுருனா பரீட்சைகள் எழுதி, வங்கியில் சேர்ந்தவர்."

"பல தடவை கிரிக்கெட் பந்தயங்களுக்கு இவர்கள் போக வேண்டியிருக்குமே, என்ன மாதிரி சலுகைகளைத் தருகிறார்கள்?"

"கிரிக்கெட் பெண்மணிகளுக்கு எளிதான வேலைதான் வங்கிகளில் தந்திருக்கிறார்கள். சுதாவுக்கும் சுமதிக்கும் ஒவ்வொரு பந்தயத்துக்கு முன்னாலும் பதினைந்து நாட்கள் ஆன் டியூட்டி விடுமுறை வங்கிகளில் தருகிறார்கள். ஆகவே பந்தயங்களுக்கு முன்னால் நன்கு பயிற்சி பெற முடிகிறது. ஒவ்வொரு பந்தயத்துக்குப் போகும் போதும் அவர்களுக்குப் போக வர முதல் வகுப்புப் பயணக் கட்டணமும், தினசரி அலவன்ஸூம் வங்கியில் தருகிறார்கள். தினசரி கிரிக்கெட் பயிற்சிக்காக மத்தியானம் ஒரு மணி வரை வங்கியில் இவர்கள் பணி புரிந்தால் போதுமென்று வைத்திருக்கிறார்கள். ஆகவே கிரிக்கெட் பயிற்சிகள் தடங்கலில்லாமல் செய்ய முடிகிறது!"

— குண்டுமணி

---

இந்தியன் வங்கியில் பணிபுரியும் மீரா வேம்பு ஓட்டப் பந்தயம், கூடைப் பந்தாட்டம் போன்றவற்றில் பல பரிசுகள் பெற்றவர். தலைசிறந்த ஆட்டக்காரி விருதுகள் பல தடவை கிட்டியுள்ளன. சமீபத்தில் ராஜபாளையம் மாவட்ட கூடைப் பந்தாட்ட நிர்வாகிகள் இவருக்கு 'முன்னுக்கு வரும் நட்சத்திரம்' விருதை வழங்கிக் கௌரவித்திருக்கிறார்கள்.

---

கூடைப் பந்தாட்ட வீரர் நந்தினி குல்வாடி சிண்டிகேட் வங்கியின் ஊழியர். 1985-ஆம் ஆண்டில் சிண்டிகேட் வங்கி நந்தினி குல்வாடிக்கு அவரது விளையாட்டுத் திறமைக்காகப் பதவி உயர்வு கொடுத்துக் கௌரவித்தது. இன்று சென்னையில் சிண்டிகேட் வங்கியில் அதிகாரியாகப் பணிபுரிகிறார் நந்தினி குல்வாடி.

# ஒரு வெற்றிகரமான

வங்கியில் வேலை' என்பது மிகக் கவர்ச்சிகரமான விஷயம்தான். நல்...ல சம்பளம், நல்ல சூழ்நிலை எல்லாம் உண்டு. ஆனால் பணப்புழக்கம், லோன்கள் தர வேண்டி இருப்பதால் வருகின்ற பிரச்னைகள் இவற்றினால் பொறுப்பான பதவி வகிப்பவர்களுக்குத் தலைக் குடைச்சலும் அதிகம்.

நகரத்திலேயே இந்த நிலை என்றால் கிராமங்களில் இன்னும் கேட்கவே வேண்டாம். அதுவும் அங்கு ஒரு பெண் மானேஜராக இருந்தால் எப்படிச் சமாளிப்பார்?

மதுரையருகில் உள்ள திரிபுவனம் என்னும் கிராமத்தில் 'பேங்க் ஆஃப் மதுரை'யின் மானேஜராக இருக்கும் திருமதி சியாமளா புன்னகைமாறாமல்இதைப்பற்றிப்பேசினார் —

''கிராமத்து மக்களின் சைக்காலஜியையும், பொதுவாக மனிதர்களின் சைக்காலஜியையும் புரிஞ்சுக்கிட்டாலே இதை சமாளிச்சுடலாம்னு நான் சொல்லுவேன்.

அடிப்படையில் கிராம மக்கள் நல்லவாங்கதான். அவர்களை தனித்தனியா அணுகறப்ப எனக்குப் பிரச்னைகளே வர்றதில்லை. ஒவ்வொருத்தரையும் தனித்தனியாச் சந்திச்சுப் பேசும்போது அவங்க தர்மம், நியாயத்துக்குப் பயந்துதான் நடந்துக்கிறாங்க...''

''பாங்க் கடன் வாங்கறப்ப வாங்கிடறாங்க. ஆனா, திருப்பிக் கொடுக்கிறப்ப 'ஏன் திருப்பிக் கொடுக்கணும், உங்கப்பன் வீட்டுச் சொத்தா என்ன? கவர்மெண்ட் பணம் தானே'ன்னு சொல்றாங்களே, நீங்க எப்படிச் சமாளிக்கிறீங்க?'' என்று கேட்டேன்.

சியாமளா சிரித்தார். ''பொறுமைதான் வேணும். பொண்ணு புகுந்த வீட்டிலே போகும் போது பொறுமையா இருக்கணும்னு உபதேசிப்பாங்க. ஆனா பேங்க்வேலையில இருக்கறப்ப நிச்சயமா ரொம்பப் பொறுமை வேணும்.

''நீங்க சொல்ற மாதிரி பேசினா அவங்களுக்கு விளக்குவேன், ''உங்களை மாதிரி பொது மக்கள் போடற பணத்திலிருந்துதான் கடன் கொடுக்கிறோம். எனவே நீங்க திருப்பிக் கொடுத்தாத்தான் அவங்களுக்கும் நாங்க கொடுக்க முடியும்'னு எல்லாம் சொல்லுவேன்.

அது தவிரவே ஒரு தடவைக்குப் பத்து தடவை நானே போனேன்னா, 'ஐயோ பாவம், இந்தம்மாவே வர்றாங்களே'ன்னு கொடுத்துடுவாங்க. அந்த மக்களை அணுகுகிற முறையிலேயே கடனைத்திருப்பி வாங்க முடியும்!''

''அதே மாதிரி கடன் வாங்கறப்பவும் மிரட்டறவங்க இருக்காங்க இல்லையா?''

''நிறைய அந்த மாதிரி நடக்கறது உண்டு. ஒரு 'குரூப்'பா ஆட்கள் வந்து நாங்க இன்ன கட்சிக்காரங்க' அப்படீன்னு அறிமுகப்படுத்திப்பாங்க. ஒரு லிஸ்ட் கொடுத்து இவங்களுக்கெல்லாம் லோன் கொடுத்தாகணும்பாங்க. ஆனா நான் தேவைப்பட்டவங்க ஒவ்வொருத்தரையும் பார்த்து, பேசி, நிஜமா அவங்களுக்குத் தேவைதானான்னு தெரிஞ்சுக்கிட்டுக் கொடுப்பேன்.

இந்த மாதிரி குழுவா வந்தாத்தான அவங்களுக்குத் தவறான தைரியம் வரும். ஆனா அவங்களைத் தனித்தனியா பிரிச்சு, ஒவ்வொருத்தர் கிட்டேயும் பேசி உண்மையைத் தெரிஞ்சுக்கிட்டோம்னா பிரச்னை இல்லை. தனியொருத்தரா தவறா நடந்துக்க யாருமே துணிய மாட்டாங்க. இதைத்தான் 'மொதல்ல மனித மனங்களோட சைக்காலஜி'ன்னு

# வங்கி



திருபுவனம் கிராமம்

வாடிக்கையாளர்கள்





சொன்னேன்!..''

''இது ரொம்பப் பொறுப்பான வேலே. அதுவும் மதுரையின் அந்தக் கோடியிலி ருந்து வர்றீங்க. இங்கேயும் டென்ஷன். ஒரு குடும்பத் தலைவியா நீங்க எப்படி பிரச்னை களைச் சமாளிக்கிறீங்க...?''

''என்ன பண்றது? காலையில் எட்டு மணிக் குக் கிளம்பறேன். சாயந்தரம் நான் போய்ச் சேர ஏழு மணியாயிடும். என் கணவர் கல் லூரியிலே பேராசிரியரா இருக்கார். அவர் அஞ்சு மணிக்கு வந்துடுவாரு. அம்மா இல்லேன்னாலும், அப்பாவாவது குழந்தை களுக்குப் பக்கத்துலே இருக்காருங்கற மனத் திருப்தி பட்டுப்பேன்....

''இன்னொண்ணு, வீட்லேருந்து கிளம்பிட் டேன்னு வீட்டை மறந்துட்டு ஆபீஸ் பிரச் னைகளைப் பற்றித்தான் யோசிப்பேன். அதே மாதிரி பேங்கை விட்டு கிளம்பிட் டேன்னு வீட்டைப் பத்திதான் யோசிப் பேன். ரெண்டுத்தையும் போட்டுக் கொழப் பிக்காம இருக்கறதால என்னால டென்ஷன் இல்லாம இருக்க முடிகிறது'' என்றார்.

• கிராமத்தின் பசுமையான சூழலில் பல சின்ன கிராமங்களுக்குத் திரிபுவனம்தான் பெரிய கிராமம். அங்காடி மங்கலம், பூவந்தி, மடப்புரம், அல்லிபுரம் போன்ற குட்டி கிராமங்களில் இருந்தெல்லாம் இங்கே வருவார்களாம்.

எஸ். எஸ். எல். சி. படித்து விட்டு மாடு லோன் வாங்கி தன் உடன் பிறந்தவர்களைப் படிக்க வைக்கும் புஷ்பலதா —

வங்கியில் குறைந்த வட்டி என்பதால் நகைக் கடன் வாங்கியிருக்கும் ராக்கு ராஜி —

இன்னும் வாடிக்கையாளர்களாக ஜனார்த் தனன், புஷ்பலதா, அன்னபூரணி, கிருஷ்ண

# ...னேஜர்





• பெண் வாடிக்கையாளர்கள்

* சக அதிகாரிகளுடன்





* வங்கிக் கடனைத் திருப்பிக் கேட்கிறார்.

வேணி என அந்த எளிய கிராமத்து மக்களைப் பார்க்கும் போது அவர்களுடைய எளிமையான தோற்றங்களைப் பார்க்கும் போது ஒரு சிந்தனை எழத்தான் செய்தது.

லோன் மேளாக்கள் எப்படி இருந்தாலும், அதிலும் ஒரு நன்மை இருக்கிறது. வேலை தேடி நகரத்தை நாடி கிராம மக்கள் ஓடிவர வேண்டியதில்லை. வங்கிக் கடன்களை சரியாக பயன்படுத்திக் கொண்டால் இருந்த இடத்திலேயே தானும் வாழ்ந்து மற்றவர்களையும் வாழ வைக்கலாமே!

"பாங்கில் கொள்ளை பற்றி நிறைய கேள்விப்படுகிறோம். இந்த வங்கிக்குப் பொறுப்பான உங்களுக்குப் பயமாக இல்லையா?"

"என்ன பயம்? இந்த கிராமத்தில் இருக்கும் ஒவ்வொருத்தரையும் எனக்குத் தெரியும். நான் யாருக்கும் எந்தவிதத்திலும் அநியாயம் செய்வதில்லை. கூட்டமா யாரையும் உள்ளே அனுமதிப்பதில்லை. தவறு நடக்கவாய்ப்புக்கொடுத்தால்தானே நடக்கப் போகிறது?" என்றார்.

"உங்க குடும்ப வாழ்க்கையை விட இதற்கு நிறைய நேரத்தைச் செலவிடுகிறீர்களே? இதைப் பற்றி நீங்கள் வருத்தப்பட்டதுண்டா?" என்றேன்.

"இல்லை. நான் விரும்பி ஏற்றுக் கொண்ட வேலை. அப்புறம் அதில் வருத்தப்படறதுக்கு ஒண்ணும் இல்லை. அதுவும் தவிர இந்த வேலையின் மூலமாக நாலு பேருக்கு உதவி செய்ய முடிகிறது. பல பேர் வங்கிக் கடன் மூலமா வாழ்க்கையிலே முன்னுக்கு வராங்க. வேலையிலே இருந்துக்கிட்டே சேவையும் செய்ய முடியறதாலே நான் வருத்தப் படறதில்லை. அதே சமயம் என் கணவர், குழந்தைகளும் என்னைப் புரிஞ்சுக்கிட்டு இருக்கிறதாலே எனக்குப் பிரச்னையில்லாமல் இருக்கு" என்றார்.

உடன் வந்திருந்த அதே வங்கியைச் சேர்ந்த வங்கி அதிகாரிகள் ரத்தினமும், சுசிலாவும்,

"இவர் கடந்த ஆண்டு நியமித்திருந்த தொகைக்கும் அதிகமாக டெபாசிட் பிடித்தவர், கடன்களையும் வசூலிப்பவர். வெற்றிகரமான பாங்க் மானேஜர்!" என்றார்கள்.

—— மஞ்சுளா ரமேஷ்

பேட்டிக்கு உதவி, புகைப்படங்கள்:

அழ. காசி விஸ்வநாதன்

---

வளமான எதிர்காலக் கனவுகளில்
வங்கியில் உழைக்கும் பெண்ணே!
வன்முறையும் வரலாம்
கவனமாயிரு! கண்ணே!

— மீனு ரமணி.



அதி மென்மையான சோப்புகளை விட மென்மையானது.

## அழுத்துவீர் புத்துணர்ச்சி பெறுவீர் !

மிருதுவான, நறுமணம் கமழும் ஃபெம். தூய்மையான, க்ரீம் வடிவிலான லக்ஷுரி சோப். விசேஷ டிஸ்பென்ஸர் கொண்ட அழகிய பாலிஸ்டைரின் பாட்டிலில் வருகிறது. டிஸ்பென்ஸரை இலேசாக அழுத்துங்கள். உங்கள் முகம் மற்றும் கைகளுக்கு ஒரு துளி க்ரீம் போதும். இது சௌகரியமானது, சுகாதாரமானது. உங்கள் கைகளில் அழுக்கு படிந்திருந்தாலும், அது மீதமுள்ள சோப்பில் கலக்க வாய்ப்பில்லை.

## இப்போது பணத்திற்கும் அதிக மதிப்பு !

நீங்கள் சிக்கனத்தில் நாட்டமுள்ளவராக இருப்பின், கவர்ச்சிகரமான புதிய எச் டி பி ஈ பாட்டில் மற்றும் டிஸ்பென்ஸர் இவற்றில் விருப்பமானதை தேர்ந்தெடுக்கலாம். இது பிடித்துக் கொள்ள வசதியானது. உடையாது. இடத்தை அடைக்காது. நீங்கள் மேலும் பணத்தை மீதப்படுத்த விரும்பினால், தேர்ந்தெடுக்க இரண்டு ரீஃபில் பேக்குகள் உள்ள. 250 மி.லி ரெகுலர் மற்றும் 1 லிட்டர் ஜயன்ட் கன்டெய்னர்.

## விரயம் இல்லை அழுக்கு இல்லை.

சாதாரண சோப்புகள் சிறுதுண்டுகளாக மிஞ்சி விரயமாகும், ஆனால் ஒரு பாட்டில் ஃபெம் உங்களுக்கு 250 குளியலுக்கு உபயோகப்படுகிறது. அதாவது ஒரு நாளில் நீங்கள் நான்கு முறை குளித்தாலும், இரண்டு மாதங்களுக்கு ஒரு பாட்டில் போதுமானது. ஒரு முறை உபயோகித்துப் பாருங்கள். அதன்பின் சாதாரண சோப்புகளை நீங்கள் உபயோகிக்க மாட்டீர்கள்.

fem

ஃபெம்—ஒரு துளி சோப் போதும்.




| எகானமி டிஸ்பென்ஸர் (250 மி.லி) | லக்ஷுரி டிஸ்பென்ஸர் (250 மி. லி) | ரெகுலர் ரீஃபில் (250 மி.லி.) | ஜயன்ட் ரீஃபில் (1000 மி.லி) |
|---|---|---|---|

மொத்த ஆர்டர்களுக்கு தயவு செய்து கீழ்க்கண்ட ஸ்டாக்கிஸ்டை அணுகவும்.

மெஸர்ஸ் ராஜ்காட் ஏஜென்சீஸ்,
25, பந்தர் தெரு,
சென்னை — 600 001.


ப்ரீத்
2
ரூ. 1249 மட்டுமே
விநியோகஸ்தர்கள் :—
Tel: 451709 / 451747 / 450564
ஏதோ ஒரு மிக்ஸி அல்ல—இது ஒரு ttk தயாரிப்பு

## சொல்ல விரும்புகிறோம்

தையல் சொல்லும் கதை, ஒரு திருடனின் கடிதம் இரண்டையும் படித்துவிட்டு வயிறு வலிக்கச் சிரித்ததை என்னால் எப்போதும் மறக்க முடியாதது.

பழனி. எஸ். நாகேஸ்வரி சரவணன்.

# ஜெ... மீசை போடவில்லையே?

ராஜஸ்தானில் நடந்த சதியைப் பற்றி ஏற்கெனவே பத்திரிகையில் படித்திருந்தாலும், மங்கையர் மலர் விமர்சித்திருந்த விதம் உண்மையிலேயே இதயத்தை நோகச் செய்துவிட்டது. கொலையைச் செய்துவிட்டு அதை நியாயப்படுத்தி அதை விழாவாகக் கொண்டாடும் அளவிற்கு மனிதத் தனமே மறக்கடிக்கப்பட்டுவிட்டதோ என்று சந்தேக மீக இருக்கிறது. பெண் நாடாண்ட நம் நாட்டில் இப்படி ஓர் ஈனத்தனமா?

தூக்குடி. ம. தமிழ்ச்செல்வி.

* ஓர் இயக்கமே ஆரம்பிக்க வேண்டும் என்ற கட்டுரையில் எப்படிக் குடும்பக் கட்டுப்பாட்டிற்கு மிகப் பெரிய பிரசாரம் செய்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தினார்களோ, அதைப் போல, 'வரதட்சணைக் கொடுமை'க்கும் எதிராக ஒரு விழிப்புணர்ச்சியை ஏற்படுத்தலாம் என்று எழுதிய மஞ்சுளா ரமேஷ் அவர்களுக்கு என் பாராட்டுக்கள்.

சென்னை — 33. கே. எஸ்.

* அதிகமான கொலைக் கதைகளைப் படித்து வந்த நான், 'பெற்றோர்களுக்கு எச்சரிக்கை' என்ற கட்டுரையைப் படித்து முதல் கொலைக் கதைகள் படிப்பதை நிறுத்தி விட்டேன். மிக்க நன்றி!

சீர்காழி. இ. ராஜேஸ்வரி.

* 'மெல்லவும் முடியாமல்; விழுங்கவும் முடியாமல்' படித்து நான் சிரிக்கவும் முடியாமல் அழவும் முடியாமல் தவித்தேன். தர்மசங்கடமான இந்தத் தர்மசங்கடங்கள் எனக்கு ஏற்கெனவே ஏற்பட்ட அனுபவங்களை நினைவூட்டின.

விழுப்புரம். கே. வி. துளசிபாய்.

* 'வீடு' என்ற உமாநாராயணசுவாமியின் சிறுகதை, ஒரு தாயின் உள்ளுணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டியது.

பொன்னியம்மன்மேடு. ஜெ. ரமாதேவிப்ரியா

* நவம்பர் இதழில் வித்யா சுப்ரமணியம் அவர்களின் நெஞ்சத்தை நெகிழ வைக்கும், உள்ளத்தைப் பாசத்தால் உருக்கும் "துன்பம் நேர்கையில்" கதையில் ஆசிரியரின் எண்ணப்படி ஹரியைப் பிரதிபலிக்கும் ஓவியத்திற்கு ஓவியர் "ஜெ" அவர்கள், மீசையை வரையாதது ஒரு சிறு குறையே.

குடியாத்தம் (வ. ஆ.). நிரஞ்சனா ஷண்முகம்.

* ஜெயா வி. ராமன் எழுதிய "எதிர்பார்ப்பே ஏமாற்றங்களாகின்றன" மன இயல் கட்டுரை டாப்-கிளாஸ். ஆண், தன் வருங்கால மனைவியிடம் என்ன எதிர்பார்க்கிறான், பெண், தன் வருங்காலக் கணவனிடம் என்ன எதிர்பார்க்கிறாள் என்பதை படுதுல்லியமாக — விரிவாக எழுதியிருந்தார், சகோதரி. அவருக்கு எனது பாராட்டுக்கள்.

கடலூர் — 2. மு. உலகாண்ட ஈஸ்வரி.

* 'இது நியாயமா?' என்கிற தலைப்பில் மஞ்சுளா ரமேஷ் எழுதியிருக்கும் கட்டுரை நியாயமே! யோசனைகள் ஒவ்வொன்றும் மிக அருமையானதாகும்.

சிவகங்கை. சுதாமதி.

* 'பச்சடிகள் பத்து' ம. மலர் தந்திருக்கும் குறிப்புகளைப் பார்த்து என் கணவருக்கு விதவிதமாகப் பச்சடிகள் செய்துதர முடிவு செய்துவிட்டேன். 'எங்கே கத்துக்கிட்டே!' என அசரப் போகிறார், போங்கள்.

வந்தவாசி. வருணா.

* ஜீவநதிகள் ஜீவன் உள்ள நதிகளாக உள்ளத்தில் ஊற்றுப் பெருக்கை உண்டாக்குகின்றன. அந்தக் காமாக்ஷிப் பாட்டி என்ற பெயரைப் படிக்கும் போதே பாட்டியின் காலில் விழுந்து வணங்கி அவர் ஆசியைப் பெற மனம் துடிக்கிறது. பாட்டியின் மனத்தைப் போல, பூ போல் ஒருவர் மனமும் புண்படாமல் பேசி நடந்துகொள்ள எல்லோருக்கும் வந்துவிடுமா என்ன?

நங்கநல்லூர். லட்சுமி ஸ்ரீநிவாஸன்.


"சந்தண மஞ்சள் சோப் என்றால்
நிச்சயம் விலை அதிகம் இருக்கும் என நினைத்தேன்
ஸந்தூர்-வாங்கும் வரை."
ஸந்தூர்—ஒரு அழகிய அதிசயம். மென்மையான நறுமணம் வீசும் சந்தணம். அழகை பராமரிக்கும் மஞ்சள் இவற்றின் அரிய சேர்க்கையிலே உருவானது. எவரும் இந்த இயற்கையான அழகு பராமரிப்பை விரும்பி வாங்குவதற்கு ஏற்ப இதன் விலையும் நயமானது.
ஸந்தூர்
சந்தண-மஞ்சள் சோப்
SANTOOR
இயற்கையின் அரிய பரிசு
மனத்திற்கு இனிய விலையிலே
WIPRO
Closer to the consumer

# திருமண மலர்

◦ திருநெல்வேலி சைவ பிள்ளை, 28 வயது, 162 செ. மீ., நல்ல தோற்றம், பி.ஏ. மத்திய நிறுவனத்தில் பணிபுரியும் வரனுக்கு அதே வகுப்பைச் சேர்ந்த, சிவப்பு நிறம், நல்ல தோற்றம், பட்டப் படிப்புடைய மணமகள் தேவை. விவரங்களுக்கு முகவரி: சி. முத்து கிருஷ்ணன், 234, செயிண்ட் மேரிஸ் ரோடு, மந்தைவெளி, சென்னை — 28.

• Alliance invited for 28 year old Brahacharanam Haritha, Anusham, M. A., Central Government employed Hyderabad based, fair and pretty girl, from Iyer Boys aged 31 to 33 years around 175 cms, well employed. Box No. 5424.

• Alliance for Athreya, Vadama, Utthiram Boy, 28, S.S.L.C., 170 cms, Grade - II Steno in Central Government, New Delhi, drawing Rs. 1800/-. Box No. 5425.

◦ அஷ்டசஹஸ்ரம், தமிழ் ஐயர், கௌண்டின்ய கோத்திரம், சித்திரை நட்சத்திரம், உயரம் 5'11" ஆசிரியர் மேல்நிலைப் பள்ளியில் பி. டி. அசிஸ்டெண்டாக வேலை பார்க்கும் 33 வயதுள்ள சென்னையில் வசிக்கும் வரனுக்கு நல்ல வேலையிலுள்ள அழகான (மணமகள்) தேவை. ஜாதகம், குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 54 26.

• Wanted Non-Srivatsa fair charming Graduate Bride from well to do family of Industrialists/Businessmen/Chartered Accountants/Lawyers etc. for Groom 33 years, Star Rohini, M.A., M.B.A., very fair, handsome, 160 cms height, belonging to a very respectable and well to do Thenkalai Iyengar family, owning property and independant business. Vadakalai no bar. Box No. 5427.

◦ அய்யங்கார், பாரத்வாஜ கோத்திரம், 32, 5'3", கேட்டை, நல்ல குடும்பப்பாங்கான விதவை. வேலையில் உள்ள பெண்ணிற்கு, 40 வயதிற்கு உட்பட்ட வரன் தேவை. அய்யங்கார்/அய்யர்/கன்னட அல்லது தெலுங்கு பிராமணர்களும் விண்ணப்பிக்கலாம். தாரமிழந்தவரும், விகலங்கமின்றி விவாகரத்து பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். உடனடி எளிய திருமணம். பெட்டி எண்: 54 28.

◦ திருச்சிக்கு அருகில் சதுரில் ஒரு பெரிய கம்பெனியில் சேல்ஸ் ஆபீஸராக வேலை பார்க்கும் மூப்பனார் ஜாதியைச் சேர்ந்த, 27 வயது 178 செ. மீ. ரூ. 1500/— சம்பளம் உள்ள பையனுக்கு. படித்த நல்ல குணமுடைய 25 வயதிற்கு உட்பட்ட மணமகள் தேவை. வேலைக்குப் போகும் பெண்ணாயிருந்தாலும் சம்மதம். ஜாதி, மதம் மற்றும் ஜாதக பேதமில்லை. முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 54 29.

• Wanted suitable Sengunthar Mudhaliar Groom for S.S.L.C., 5'2," 26 years, Chithirai Star, simple marriage, middle class family. Reply with horoscope and family details to Box No. 5430.

• Alliance invited for Vadama Vathoola, Karthigai/29/160/1850/-, fair, Graduate Girl, Bank employed Madras from Bank/Insurance/Govt. Co., employed Bridegroom below 36, subsect no bar. Reply with Horoscope to T. V. Pattammal, DD-287, RBI Quarters, Besant Nagar, Madras-90.

• Wanted suitable Iyer match for Graduate Girl aged 30, Central Govt. employee, Delhi, earning Rs. 1500/-, very fair, spectacled. Transferable, no horoscope, marriage, Civil/Temple. No parents; only Guardian. Write to Box No. 5431.

• Wanted, suitable employed, Graduate, goodlooking, Bachelor, upto 37 years for Scheduled Caste Madari, Tamil, fair, smart, B.Sc., 33 years, Girl, looks very young, 155 cms. Rs. 1850/- p.m. Clerk/Nationalised Bank, Caste, dowry, no bar. Box No. 5432.

• Alliance invited for a Keralite Brahmin (42) Athreya Gothram, employed in Delhi earning Rs. 1000/- per month. Box No. 5433.

◦ வடமாள், பாரத்வாஜம், வயது 27, மகம், பி. எஸ்ஸி., டிப்ளமா இன் மார்க்கெட்டிங் அண்ட் சேல்ஸ் மேனேஜ்மெண்ட், மெடிகல் ரெப்ரஸன்டேடிவ், ரூ. 2700/—, உயரம் 5'7" உள்ள அழகான பையனுக்கு, நல்ல அழகான சிவப்பு நிறமுள்ள பட்டதாரி மணமகள் ஜாதகத்துடன் அனுப்பவும். உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 54 34.

◦ தமிழ்நாட்டைச் சேர்ந்த தென்கலை ஐயங்கார், கௌண்டின்ய கோத்திரம், உத்திராட நட்சத்திரம், 21 வயது, எஸ். எஸ். எல். சி. படித்த, அழகான, குடும்பப்பாங்கான பெண்ணிற்குத் தகுந்த தென்கலை வரன் தேவை. பெட்டி எண்: 54 35.

◦ கௌசிக கோத்திரம், 37 வயதுள்ள திருவாதிரை நட்சத்திரம், பையன், 5 அடி உயரம், ஹோட்டல் பார்ட்னர், மாத வருமானம் ரூ. 1000/— நல்ல அழகான குடும்பப்பாங்கான எஸ். எஸ். எல்.சி. பாஸ் செய்த 30 வயதிற்கு உட்பட்ட பெண் ஜாதகத்தோடு விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 54 36.

◦ கார்காத்தார் சைவபிள்ளை 30 வயது தனியார் நிறுவனத்தில் டைப்பிஸ்டாக வேலை பார்க்கும் பெண்ணுக்கு வேலையில் உள்ள மணமகன் தேவை. அதே இனத்தில் 40 வயது அரசு பள்ளியில் செகண்டு கிரேடு ஆசிரியராக வேலை பார்ப்பவருக்கு அரசு பணியில் உள்ள மணமகள் தேவை. பெட்டி எண்: 54 37.

◦ வன்னியகுல க்ஷத்திரிய ஆண், வயது 31, பி. எஸ்ஸி., சொந்தமாக மருந்துக்கடை வைத்திருப்பவர். எல்லோரும் நன்கு படித்த குடும்பத்தில் பிறந்த கடைசிப்

பையன். பார்மஸி படித்துக் கொண்டிருக்கும் அல்லது படித்த பெண் தேவை. விரைவில் திருமணம். முகவரி: டாக்டர் உஷா ராணி எம்.பி.பி.எஸ்., 27, அண்ணாதுரை ரோடு, தர்மபுரி—636 701.

• காசியப கோத்திரம், தெலுங்கு பிராமணர் (கோல்கொண்டா) உத்திரட்டாதி நட்சத்திரம், உயரம் 150 செ. மீ., வயது 26, படிப்பு டி. பி. ஈ., வேளாண்மைப் பொறியியல் துறையில் ஏ. எஸ். டி. ஓ. ஆகப் பணிபுரியும் ரூபாய் 1200 மாத ஊதியம் பெறும் மணமகனுக்கு, அரசு/வங்கிப் பணியிலுள்ள அழகிய பெண் தேவை. உட்பிரிவுகள் சம்மதம். பெட்டி எண்: 54 38.

• ஐயர் வயது 32, நல்ல உயரம், ஹரித கோத்திரம், பிரஹசரணம், பி. ஏ., டிப்ளமா இன் டெக்ஸ். டெக்னலஜி படித்து மில்லில் சூபர்வைசராகப் பணிபுரியும் மிகவும் அழகான எந்தக் கெட்ட பழக்கமும் இல்லாத பையனுக்கு, 30 வயதுக்குள் படித்து நிரந்தர வேலையில் உள்ள வரன்கள் தேவை. (உட்பிரிவுகள் சம்மதம். மனப்பொருத்தம் மட்டும் போதும் என்பவர்களும் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 54 39.

• ஐயர், வடமாள், கௌண்டின்ய கோத்திரம், மாநிறம், 5' 2" வயது 28, படிப்பு பி. எஸ்ஸி., பி. எட்., சம்பளம் ரூ. 700/—. தமிழக அரசு பள்ளியில் ஆசிரியை வேலை, குடும்பப்பாங்கான பெண். பரணி நட்சத்திரம் 2 இல் செவ்வாய் தோஷம். எளிய திருமணம். மேற்படி தகுதியுள்ள பெண்ணிற்குப் படித்த, வேலையிலுள்ள மணமகன் தேவை. பெட்டி எண்: 54 40.

• அருந்ததியார் வகுப்பைச் சேர்ந்த மத்திய அரசு நிறுவனத்தில் (திருவனந்தபுரம்) அக்கௌண்டண்டாகப் பணிபுரியும் சொத்துள்ள ஒரே மகனுக்கு 36/1900/5' 8" அதே வகுப்பைச் சேர்ந்த படித்துள்ள மணமகள் தேவை. வேலை நிர்ப்பந்தமில்லை. பெட்டி எண்: 54 41.



• Alliance invited from Saiva Vellala/Karkatha Pillai, Post Graduate, beautiful, smart, Girl for Boy, 27 years, 165 cms, Post Graduate, Central Government employed. Send horoscope with details to Box No. 5442.

• Wanted, for a 56 years Central Govt. Mudhaliar Bridegroom, Bride aged between 35 to 40 years. Widower or divorcee from decent family without any encumbrance. Box No. 5443.

• டைப்ரைட்டிங், ஷார்ட்ஹாண்ட் பாஸ் செய்துள்ள 38 வயதான கன்னட மாத்வப் பெண்ணிற்கு அரசாங்க/தனியார் துறையில் நிரந்தர வேலையிலுள்ள 40 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. பெண் காசியப கோத்திரம். பிராமணரில் எந்தப் பிரிவும் சம்மதம். பெட்டி எண்: 54 44.

• தமிழ் விஸ்வகர்மா இனத்தைச் சார்ந்த பி. யூ. சி., ஐ. டி. ஐ. படித்து ஒரு தனியார் நிறுவனத்தில் பணிபுரியும் 26 வயது வாலிபருக்கு, இதே இனத்தைச் சார்ந்த படித்த நல்ல அழகிய, நல்ல குடும்பத்தைச் சேர்ந்த மணமகள் தேவை. ஜாதகம் மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 54 45.

• கோவை வெள்ளாளப் பிள்ளை வரன்களுக்கு மணமகன்/மணமகள் தேவை. பெண் 24/5' 1"/பி. ஏ. (ஆங்கிலம்). பையன், 29/5' 10"/பி. ஏ., டி. ஈ. ஈ./2400/— (அரசு). ஜாதி பேதமில்லை. வேலையிலுள்ள பெண்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும். பெண் கொடுத்து/எடுக்கவும் சம்மதம். வயது/படிப்பு/உயரமுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 54 46.

• கௌசிக கோத்திரம், வடகலை ஐயங்கார் 29/150 உத்திரட்டாதி ஹிந்தி பிரவீன் தேறிய அழகான குடும்பப் பாங்கான பெண்ணிற்கு நல்ல வேலையில் உள்ள நடுத்தர வகுப்பைச் சார்ந்த ஐயங்கார் வரன் தேவை. ஜாதகத்துடன் அணுகவும். முகவரி: ஆர். ரங்கதுரை, 17, 37வது தெரு விரிவு, நங்கநல்லூர், சென்னை-61.

• வடமாள், பாரத்வாஜ கோத்திரம், உத்திராட நட்சத்திரம் பி.ஏ. படித்துள்ளாள், சம்பளம் 900 ரூபாய் மாதவருமானம். 32 வயதுள்ள பிகாரில் உள்ள தன்பாத் என்ற இடத்தில் டீச்சர் வேலையில் உள்ள பெண்ணிற்கு சுமார் 36—40 வயதில் மத்திய மாநில நல்ல உத்தியோகத்திலுள்ள பிராமண மாப்பிள்ளை தேவை. கோத்திரம் பாரத்வாஜம், வடமாள் மூலநட்சத்திரம், பி.ஏ. படித்திருக்கிறாள். டீச்சர் வேலை. மாதச் சம்பளம் 900 ரூபாய். பையன் வயது 32, 40 வயதுக்குள் கிடைத்தால் நல்லது. பையன் நல்ல வேலையில் இருந்தால் நல்லது. வடமாள் பையன் கிடைத்தால் ரொம்ப நல்லது. பெட்டி எண்: 54 47.

• தெற்கித்திக்கள்ளர்—தொண்டைமான் பிரிவைச் சார்ந்த தாரமிழந்த அரசுடமையாக்கப்பட்ட வங்கி மேலாளருக்கு படித்த பண்புள்ள 25 முதல் 35 வயதுக்குட்பட்ட அதே இனத்தின் வேறு பிரிவில் மணமகள் தேவை. ஜாதகத்துடனும் இதர விவரங்களுடனும் விண்ணப்பிக்க. பெட்டி எண்: 54 48.

• 38 வயது நிரம்பிய பி.எஸ்ஸி. பி.எட்., முடித்து 17 ஆண்டுகளாகத் தனியார் பள்ளியில் இடைநிலை ஆசிரியையாகப் பணியாற்றும் தெலுங்கு தேவாங்கு செட்டி மணமகளுக்கு அதே இனத்தைச் சேர்ந்த நல்ல அரசாங்க உத்தியோகத்திலுள்ள பட்டதாரி மணமகன் தேவை. ஜாதகத்துடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 54 49.


• நாகப்பட்டினம் மு. ஞானம் எஸ்.எஸ்.எல்.சி. ஓவியர் வயது 32 உயரம் 5.3. மாநிறம் பனையாச்சி குலமகனுக்கு அதே குலத்திலோ அல்லது வேறு குலத்திலோ நல்ல மணமகள் தேவை. அரபு நாட்டில் ஆர்டிஸ்டாக பணிபுரிகின்றேன். மாத சம்பளம் ரூபாய் 4000. என் பெயரில் ஒரு லட்சம் சொத்துள்ளது. அழகு, குணம், படிப்பு, நிறைந்த குடும்பப் பெண் தேவை. வரதட்சணை தேவை இல்லை. பெட்டி எண்: 54 50.

• தென்கலை ஐயங்கார் கௌசிக கோத்திரம் மகநட்சத்திரம். பிறந்த தேதி 26.6.63. நல்ல குடும்பப் பாங்கான எஸ்.எஸ்.எல்.சி. படித்த மாநிறம் 5' 2" உள்ள பெண்ணிற்கு மணமகன் தேவை. பெட்டி எண்: 54 51.

• Suitable Graduate Bridegroom Mudhaliar Vellala — Bank — Government, Railway Service, Doctor, Engineer, Professor for Madras Bank employed Bride Pooram 34/155/1800. Horoscope, Biodata essential. Box No. 5452.

• Alliance invited from decently employed Iyer Boys for Kousika, Brahacharanam, Graduate Girl, 25, 148 cms, bespectacled. Subsect no bar. Early decent marriage. Horoscope, full details to Box No. 5453.

# தபால் மூலம் சித்திரக்கலை!



படம் வரைய,
வர்ணம் தீட்ட வேண்டுமா?

30 வருடங்களுக்கும் மேலாக, தங்கள் நம்பிக்கைக்கும், திறனுக்கும் பெயர் பெற்ற

**சந்தனுவின் சித்திர வித்யாலயத்தின்** மூலம்


தமிழ், ஆங்கிலம், மலையாளம், தெலுங்கு, ஹிந்தி ஆகிய 5 மொழிகளில் வீட்டிலிருந்தபடியே தங்களின் சித்திர ஈடுபாட்டை முன்னேற்றிக் கொள்ளலாம்.

விவரங்களுக்கு ரூ 1/- தபால் தலைகளுடன் விண்ணப்பிக்கவும்.

**சந்தனுவின் சித்திர வித்யாலயம்**
C/o. சித்திரக் குள்ளன் (G), 179 சிங்கண்ண தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை-600 002.
போன் : 566188

# ரக்த தோஷாந்தக்*

## சுவையான ஆயுர்வேத இரத்தசுத்தி



பெரும்பாலான அழகு சாதனங்கள், பருக்களையும் சருமக் குறைபாடுகளையும், மேலெழுந்தவாரியாக சிகிச்சை செய்கின்றன. ஆனால் ரக்த தோஷாந்தக் அப்படியல்ல. இந்த ஆயுர்வேத நிவாரணி, சருமத் தொல்லைகளின் மூலக் காரணமான அசுத்த இரத்தத்தில் செயல்புரிகிறது.

இது இரத்த ஓட்டத்தைச் சுத்தம் செய்து, நச்சுக்கேடுகளை அகற்றி, ஆரோக்கியமான ஒளிவிடும் சரும அழகை உங்களுக்குத் தருகிறது.

மருந்தளவு: சாப்பாட்டுக்குப் பின் தினமும் இரு வேளை, 4 தேக்கரண்டிகள்.




*பதிவுபெற்ற ட்ரேட்மார்க்

**அல்பாலி பார்மாசூட்டிகல்ஸ் லிமிடெட்**

திருமண மலர் பகுதியில் விளம்பரம் செய்யக் கட்டணம் ரூ.50/-. தொகையை ''மங்கையர் மலர்'' என்ற பெயருக்கு போஸ்டல் ஆர்டராகவோ, அல்லது சென்னையில் உள்ள ஏதாவது ஒரு வங்கியில் மாற்றக்கூடிய டிமாண்ட் ட்ராப்டாகவோ அனுப்ப வேண்டும். ஒரு விளம்பரத்தில் ஒரு வரனுக்கு 30 வார்த்தைகளுக்குள் விவரங்கள் தரவேண்டும். திருமணமலர் பகுதியில் விளம்பரம் செய்பவர்களின் விலாசங்களைக் கொடுப்பதற்கில்லை. விளம்பரங்களுக்கு பதில் அனுப்புபவர்கள் ''விளம்பரதாரர், பெட்டி எண்... C/o. மங்கையர் மலர், கிண்டி, சென்னை 600 032'' என்ற விலாசத்துக்கு அனுப்ப வேண்டும். பதில்கள் ஒவ்வொரு வாரமும் விளம்பரம் வெளியிட்ட இதழிலிருந்து விளம்பரம் கொடுத்தவர்களுக்கு மூன்று மாதத்திற்கு அனுப்பப்படும். தனிப்பட்ட கடிதப் போக்குவரத்து கிடையாது. விளம்பரம் முழுவதுமாக ஆங்கிலத்திலோ அல்லது தமிழிலோ இருக்க வேண்டும். இரண்டும் கலந்து எழுதக்கூடாது.

பிரஹசரணம், காஸ்யப கோத்ரம். ஐயர். ரோகிணி நட்சத்திரம். டி.பி.ஈ./33/185 செ.மீ ரூ.1100 ரயில்வேயில் உள்ள பையனுக்கு. எஸ்.எஸ்.எல்.சி./பட்டதாரி படித்த வேலைக்கு செல்லாத நல்ல தோற்றம், குடும்பப்பாங்கான, 25 முதல் 30 வயதிற்குள் மணமகள் தேவை. சங்கீதம், தையற்கலை தெரிந்தாலும் விரும்பப்படும். வடமாள் பிரிவும் சம்மதம். ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். முகவரி: திருமதி. எல். செல்லம்மாள், 27, காந்தி நகர், பொன்மலைப்பட்டி, திருச்சி—620004.

• ஸ்ரீவத்ஸ கோத்ரம், பிரஹசரணம், உத்திராட நட்சத்திரம், 34 வயதும், 154 செ.மீ. உயரமும் எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற குடும்பப்பாங்கான, வீட்டு வேலைகளை மிகவும் பொறுப்புடன் நன்கு செய்யக்கூடிய அழகிய பிராம்மணப் பெண்ணிற்கு நல்ல உத்தியோகத்திலுள்ள அல்லது சிறந்த முறையில் சொந்த தொழில் செய்யும் மாப்பிள்ளை தேவை. வடமாளும் விண்ணப்பிக்கலாம். மிகவும் சிறந்த முறையில் உடனே திருமணம் செய்து தரப்படும். குடும்ப விவரம் ஜாதகத்துடன் உடனே தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5454.



• Alliance for Vadama Bharadwaja 23 years Girl. fair, well trained S.S.L.C. star Bharani. Simple Marriage Box No.5455.

• Wanted well employed Bridegroom for Kousika, 22/160 M.A., Eng. Lit. living in North India, good looking, Vadamal Girl, preferably Engineer/C.A. Box No.5456.

• Alliance invited for Iyer girl, Anusuham, Bharadwaja, Brahacharanam, Graduate, Employed 25/150, with Chevvai dosham. Family settled at Faridabad (near Delhi). Boy should be Graduate, around 30 years, well settled. Please reply with horoscope to: Box No. 5457.

• ஹிந்து ரெட்டி வகுப்பைச் சேர்ந்த டி.ஈ.ஈ. படித்த மாதம் ரூ.4000/— வருமானமுள்ள சொந்த தொழில் நடத்தும், கால் ஊனமுற்ற பெண்ணிற்கு ஹிந்து ரெட்டி அல்லது சமமான வகுப்பைச் சேர்ந்த அரசாங்க உத்தியோகத்திலுள்ள 32—35 வயதுள்ள வரன் தேவை. வீட்டோடு மாப்பிள்ளை தேவை. பெட்டி எண்: 5458.

• ஸ்ரீவத்ஸ கோத்ரம், பூரம் நட்சத்திரம், அஷ்டசஹஸ்ரம், வயது 27, படிப்பு பி. ஏ. ஹிந்தியில் சாகித்யரத்னா வாங்கிய பெண்ணுக்கு நன்கு படித்த வரன் தேவை. உட்பிரிவுகள் பரவாயில்லை. குடும்ப விவரம், ஜாதகத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5459.

• வடமாள், ஐயர், உத்திர நட்சத்திரம், பாரத்வாஜ கோத்ரம், சென்னையில் தனியார் கம்பெனியில் வேலை. மாத வருமானம் ரூ. 1100. 33 வயதுள்ள பையனுக்கு அதே பிரிவிலோ, உட்பிரிவிலோ, வேலையிலுள்ள/வேலையில்லாத மணமகள் தேவை. விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5460.

• சத்திய மங்கல பிரஹசரணம், சடமிர்ஷண கோத்ரம், அனுஷ நட்சத்திரம், வயது 28, உயரம் 5'3'', எஸ்.எஸ்.எல்.சி. வரை படித்துள்ள குடும்பப் பாங்கான பெண்ணிற்கு அதே பிரஹசரணத்தைச் சேர்ந்த அரசு/ தனியார் நிறுவனத்தில் நிரந்தர உத்தியோகத்தில் உள்ள வரன் தேவை. ஜாதகம் மற்றும் குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5461.

• வன்னியகுல க்ஷத்திரியர் நடுத்தர குடும்பம், படிப்பு பி.யு.சி. உயரம் 150 செ.மீ. மாநிறம். மாநில அரசு பணி (மருத்துவம்) மாத வருமானம் 800/28 வயது பரந்த மனப்பான்மை, தெய்வ பக்தி, குடும்ப கலை அனைத்தும் அறிந்த பெண்ணிற்கு, மத்திய, மாநில, சொந்தமாக தொழில் உள்ளவர்கள் 32—35 வயதிற்குள். எளிய திருமணம் உடனடி. உட்பிரிவுகள் சம்மதம். சென்னைவாசிகளுக்கு முதலிடம். பெட்டி எண்: 5462.

• திருநெல்வேலி சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த எம்.ஏ. படித்த குடும்பப் பாங்கான 22 வயது அழகிய பெண்ணிற்கு அதே வகுப்பைச் சேர்ந்த ஓரளவு வசதியுள்ள பி.டெக்., எம்.டெக்., பி.ஈ. எம்.ஈ. போன்ற தகுதியுடன் உத்தியோகத்திலிருக்கும் 28 வயதுக்குட்பட்ட வரன்கள் முழு விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5463.

• சௌராஷ்ட்ரா மத்யதர வகுப்பு 24 வயது எஸ்.எஸ்.எல்.சி படித்த மூல நட்சத்திர பெண்ணிற்கு விவாசிஷ்டி கோத்ரம்,

செவ்வாய் தோஷம் இல்லாத அரசு/வங்கி பணி/ சொந்தமாக வியாபாரம் செய்யும் சௌராஷ்டிர மணமகன் தேவை. ஜாதகம் மற்ற விபரங்களுடன். பெட்டி எண்: 5464.

• Alliance invited for smart Automobile Engineer, Hindu, Parvatha RajaKulam, Gulf returned. We are a well settled respectable, and well to do family in Bombay. Age 30 years, height 5'11." Fair Complexion. Parents of fair, good looking, home loving Girl's below 25 years and minimum S.S. .C. correspond with horoscope for early marriage. Caste no bar. Box No. 5465.

• செங்குந்த முதலியார் (இசை வேளாளர்) வகுப்பைச் சார்ந்த 24, அவிட்டம், அழகான பட்டதாரி பெண்ணிற்கு 30 வயதுக்குட்பட்ட நல்ல வேலையில் இருக்கும் பட்டதாரி மணமகன் தேவை. விபரங்களுடன் ஜாதகம் அனுப்பவும். பெட்டி எண்: 5466.

• சென்னையில் தனியார் நிறுவனத்தில் மாதம் ரூ.2700/– ஊதியம் பெறும் இந்து அகமுடையார் வயது 29 உயரம் 167 செ.மீ. எம்.ஏ. படித்த பையனுக்கு (நட்சத்திரம் மூலம் 4ம் பாதம்) சிவந்த நிறமும் அழகும் உள்ள பட்டதாரி அகமுடையார் பெண் தேவை. பெட்டி எண்: 5467.

• இராஜகுல அகமுடையார் இனத்தைச் சேர்ந்த வயது 26 உயரம் 153 செமீ. கவர்ச்சியான தோற்றம், சிகப்பு நிறம், எம்.ஏ. பி.எட். பெண்ணுக்கு தகுந்த மணமகன் தேவை. தற்சமயம் வேலை பார்க்கவில்லை. ஜாதகம் மற்றும் குடும்ப விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5468.

• சோழிய வெள்ளாளர் பட்டதாரி 30/165 தஞ்சையில் சொந்தத் தொழிலில் மாதம் 2000 வருமானமும் பிரச்னையில்லாத கௌரவமான குடும்பத்தைச் சேர்ந்த நல்ல பழக்க வழக்கங்கள் உடைய பையனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த குணமும் அழகும் லட்சணமுமுள்ள படித்த பெண் தேவை. ஜாதகத்துடன் விவரம் எழுதவும். பெட்டி எண்: 5469.

• சோழிய வெள்ளாளர் 26/155 1200 மாநில அரசுப்பணி திருவோண நட்சத்திரம் அழகும் லட்சணமான பெண்ணிற்கு அதே இனத்தைச் சேர்ந்த வேலையில் உள்ள நல்ல பண்புள்ள மணமகன் தேவை. விரைவில் திருமணம். ஜாதகம் மற்றும் குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5470.



• பலிஜா நாயுடு வகுப்பைச் சார்ந்த மத்திய அரசில் வேலை பார்க்கும் வசதியான பட்டதாரி வாலிபருக்கு 1500/27/180 சென்னையில் வேலை பார்க்கும் அல்லது வசதியுடைய நாயுடு வகுப்பைச் சார்ந்த 25 வயதிற்குள் உள்ள மணமகள் தேவை. (நாயுடு வகுப்பில் உட்பிரிவுகள் சம்மதம்) பெட்டி எண்: 5471.

• தஞ்சாவூர் வடமாள் கௌசிக கோத்ரம், வயது 23 உயரம் 150 செமீ.எம்.பி.பி.எஸ். பெண்ணுக்கு வரன் தேவை. டாக்டர், எஞ்சினீர் ஆடிட்டர் வரன்களின் பெற்றோர்கள் ஜாதகத்துடன் எழுதவும். பெட்டி எண்: 5472.

• திருநெல்வேலி சைவப்பிள்ளைமார் வகுப்பைச் சேர்ந்த நல்ல ஒழுக்கமும் குணமும் வாய்ந்த அரசு வேலை பார்க்கும் இரட்டைப் பட்டதாரி மணமகனுக்கு அதே இனத்தைச் சேர்ந்த, பேங்க், எல்.ஐ.சி., அரசு வேலை பார்க்கும் மணப் பெண் தேவை. உடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5473.

• வயது 22, உயரம் 5 மாநிறம் களையான முகம், மூல நட்சத்திரம் வாணிய செட்டியார், கார்லியா மகரிஷி கோத்ரம், படிப்பு பி.யு.சி. படித்த பெண்ணிற்கு நல்ல குடும்பத்தைச் சேர்ந்த பட்டதாரியோ, அல்லது சொந்தமாக தொழில் புரிபவரோ வரன் தேவை. ஜாதகம் மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5474.

• வாணிய செட்டியார் சொந்தமாக தொழில் புரிபவர், வயது 28, உயரம் 5' 2'' கோத்திரம் கார்லியா மகரிஷி. செவ்வாய் தோஷம் உள்ளவர் +2, அல்லது எஸ்.எஸ்.எல்.சி. படித்த நல்ல அழகும், குணமும் உள்ள குடும்பப் பாங்கான அதே இனத்தைச் சேர்ந்த செவ்வாய் தோஷமுள்ள பெண் தேவை. ஜாதகம், மற்ற விவரங்களுடன் விருப்பம் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம். பெட்டி எண்: 5475.

• பெற்றோர் இருவருமில்லை, இனம் நாயுடு, வயது 31, நட்சத்திரம் மிருகசீரிஷம் 3ம் பாதம் விஷ்ணு பக்தியுடைய அரசுப் பள்ளி இடைநிலை ஆசிரியருக்கு, முற்போக்கு எண்ணமுடைய, பணியில் உள்ள, இந்து பெண்/ பிள்ளைகளற்ற விதவைப் பெண் தேவை. பெட்டி எண்: 5476.

• 31 வயது நிரம்பிய எம்.எஸ்.சி. பி.எட். வேதியியல் ஆசிரியராக சென்னையில் பிரபலமான மேல்நிலைப் பள்ளியில் பணிபுரியும் இந்து - நாடார் மணமகனுக்கு அதே இனத்தில் ஜாதகம் உள்ள பட்டதாரி மணமகள் தேவை. முழு விபரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 5477.

• சோழிய சைவ வேளாளர் பட்டதாரி, ஸ்டேட் பாங்கு பணி, வயது 28 வரனுக்கு அதே இன பட்டதாரி, குடும்பப் பாங்குடைய தெய்வ நம்பிக்கை கொண்ட பாங்கு மற்றும் அரசு பணியில் உள்ள பெண் தேவை. ஜாதகம் குடும்ப விபரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5478.

• க்ஷத்திரிய இராஜகுலம். பி.காம்., சி.ஏ.ஐ.ஐ.பி. டி.சி.ஏ. 25/168/2000 திருவோணம் நட்சத்திரம், அரசுடைமை வங்கியில் உத்தியோகம். இவ்வரனுக்கு அதே குலத்தைச் சேர்ந்த பட்டப் படிப்பும், நல்ல குணமும் 18—22 வயதுக்குள்ளாகவும் உள்ள மணமகள் தேவை. வேலைக்குப் போகும் கட்டாயம் இல்லை. ஜாதகத்துடனும் மற்றும் குடும்ப விபரங்களுடன் எழுதவும். பெட்டி எண்: 5479.

• சோழிய வேளாளர் பிள்ளை வகுப்பைச் சேர்ந்த நல்ல, மதிக்கத்தக்க குடும்பத்தில் உள்ள குடும்பப் பாங்கான நல்ல குலம், மாநிறம், வயது 29 உள்ள பெண்ணுக்கு இஞ்சினியர், பாங்க், மத்திய, மாநில அரசுகளில் பணிபுரியும், வயது 34 முதல் 38க்குள் உள்ள மாப்பிள்ளை தேவை. ஜாதகம், மற்றும் விவரங்களுடன் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5480.

• Alliance invited from wel employed grooms for Thengala Srivatsa Girl (B.Com.) 21, 5' goo looking, employed in Pvt. Co Higher Typing & Shorthan domestically well trained Pious Star Revathi. subseet no bar Simple decent Marriage. Box Nc



உங்கள் அபிமான நிறுவனமான "திருப்பதி எஸ்டேட்ஸ்"
பெருமையுடன் அறிமுகப்படுத்தும் புதுமனைப் பிரிவு

# லக்ஷ்மி நகர்

காஞ்சிபுரத்திலிருந்து 2 கி.மீ. தூரத்திலும், காஞ்சிபுரம் இரயில் நிலையத்திற்கு அருகிலும், சென்னை-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலும், காஞ்சிபுரம்-அரக்கோணம் மாநில நெடுஞ்சாலையும் சந்திக்கும் இடத்தை ஒட்டியும் உள்ள வெள்ளை கேட் என்று கூறப்படும் இடத்தின் அருகில் அமைந்துள்ளது.

## வரலாறு காணாத புரட்சி! சரித்திரம் கண்டிராத சாதனை!!

கான்கிரீட் காணிக்கற்கள்; கான்கிரீட் மனை இலக்கக் கற்கள் உபயோகப்படுத்தி மனைகளை என்றும் தேட அவசியம் இல்லாத வகையில் அமைக்கப்பட்ட மனைப்பிரிவு.

## ஐந்து ஆண்டுகளுக்கு மனைகளை காத்திட உத்திரவாதம்!

எந்த அதிகப்படி செலவும் கிடையாது!

## மனைப்பிரிவிற்கு ஒரு பொதுக் கிணறு!

இப்படி அனைத்து சிறப்பு அம்சங்களும் ஒருங்கே அமையப்பெற்ற இந்த லே-அவுட் அரசாங்க அங்கீகாரம் பெற்றது.

**DTP. APPROVAL NO: CSAR DTCP (M) 87-271 LP. 201**

பத்திரம் சுத்தமானது என்பதற்கு அத்தாட்சியாக அரசாங்க வழக்கறிஞரின் லீகல் ஒப்பீனியனும் பெற்றது.

உடனடியாக பத்திரம் பதிவு செய்பவர்களுக்கு தள்ளுபடி 5 சதவீதம்

சுலப தவணைமுறைத் திட்டமும் உண்டு

31-12-1987க்குள் மனை பதிவு செய்பவர்களுக்கு
எங்கள் அன்பளிப்பு: பிரஸ்டிஜ் பிரஷர் குக்கர்

*மனைகளைப் பார்வையிடவும் மற்ற விபரங்களுக்கும் நேரில் அணுகவும்.*

## திருப்பதி எஸ்டேட்ஸ்

"லக்ஷ்மி நிலையம்"
30, ஆற்காடு முதலியார் தெரு,
(தெற்கு போக் ரோட் பக்கம்)
தியாகராய நகர், சென்னை-600 017
டெலிபோன்: 440741

*கிளை அலுவலகம்:*
18-B, ரயில்வே ரோடு,
ராஜா திரை அரங்கம் அருகில்
காஞ்சிபுரம்-631 501
டெலிபோன்: 2268

• Wanted suitable Alliance from Progessive family for Mudaliar Lady Doctor, MBBS, aged 25, 5'2", Fair, Good looking. Box No. 5482.

• Sourashtra Bride, SSLC/150 CM/Vishagam Star/ Midde Class Seeks Alliance from Sourasthtra State/Central Govt. Employed Bridegrooms. Box No. 5483.

• நல்ல அழகும், உடற்கட்டும், 40ஐ தொட்டாலும் 25 வயதே மதிக்கத்தக்க தோற்றமும், இளமை மனப்பான்மையும் சுறுசுறுப்பும், ஆரோக்கியமான உடல் நலமும், பரந்த மனப்பான்மையுடைய, சுயமாகவே இதுவரை திருமணம் செய்து கொள்ளாத வசதியான பிராமண ஆபீஸருக்கு பண்பும், சிவந்த மேனியும், கட்டுடலும், அழகும், உற்சாக மனப்பாங்குடைய, +2 அல்லது அதற்கு மேல் படித்த, 5'3" க்கு மேல் உயரமுடைய இளம் பெண் தேவை. கலையார்வமும், நாட்டிய பயிற்சியுமிருந்தால் நலம். மணமான பின்பு பெண்ணுக்கு அன்பான, சுதந்திரமான குடும்ப சூழ்நிலை உறுதி. எளிய திருமணம். பெட்டி எண்: 5484.

• Alliance for Brahacharanam Girl, Kasyaba, Bharani, PUC, 30/160 Domestically well trained unemployed. Early decent Marriage. Subsect no bar. Contact K.T. Sitaraman, 4, Subramaniapuram Extension, Salem-7.

• Bride wanted for a boy from a respectable Tirunelveli Saiva Vellala Family, Aged 28 years, B.Sc., (A.M.I.E.) Senior Technician in Tamil Nadu Government Industrial Unit — Rs.2000/ per month. Birth Star Moolam. Contact Box No. 5485.

• காஸ்யபம் வடமாள் ஸ்மார்த்தாள். தமிழ் பிராமணனுள் வடாற்காடு உத்திரம். 4 உயரம் 5'2" சிவப்பு நிறம், தனியார் துறையில் சம்பளம் 450/— குடும்பப்பாங்கான மணமகளுக்கு அரசாங்கம் தனியார் துறை கம்பெனி பேக்டரியிலுள்ள நிரந்தர வேலையிலுள்ள 34/40 வயது பிராமண மணமகன் தேவை. ஜாதியில் எந்த உட்பிரிவும் சம்மதம். குடும்ப விவரத்துடன் தொடர்பு கொள்ளவும். பெட்டி எண்: 5486.

• சிசோ ஃபெரனியா என்ற மன வியாதி உள்ள சென்ட்ரல் கவர்மெண்ட் உத்தியோகத்தில் ரூ. 2500க்கு மேல் சம்பளம் வாங்கும் 35 வயது நிரம்பிய ஆண் மகனுக்குத் தகுந்த பெண் துணை தேவை. ஜாதி, மதம், சிறு குறைகள் தடை இல்லை. விதவைகளும் விண்ணப்பிக்கலாம். படித்த பிராமணப் பெண்களுக்கு முதலிடம் அளிக்கப்படும். பெட்டி எண்: 5487.

• பிரஹசரணம் பராசர கோத்திரம், மகம் 32 வயது எஸ்.எஸ்.எல்.சி. படித்த திருக்கோவில் பணியாளராக பணிபுரியும் (வேலை நிரந்தரம் 1.4.87 முதல்) நல்ல நிறம், நல்ல உயரம், நல்ல குடும்ப பையனுக்கு அரசு வேலையில் உள்ள அல்லது இல்லாத எஸ்.எஸ்.எல்.சி. தேர்ச்சி பெற்ற பெண் தேவை. உட்பிரிவு சம்மதம். மனப்பொருத்தம் இருப்பினும் விண்ணப்பிக்கவும். பெட்டி எண்: 5488.

• வன்னியர் (படையாட்சி) ஜூனியர் என்ஜினியர் 31/165 செ. மீ. 1900 சம்பளம்/மாநிற பையனுக்குத் தகுதியான பெண் தேவை. பையனின் ஒரே சகோதரியை மணந்த ஒரே வருடத்தில் கணவரின் வேலை போய்விட்டதால் அவர் பிரிந்து சென்றுவிட்டார். அதனால், சகோதரி 10 வருடங்களாக இதே இனத்தில் மனைவியை இழந்த வேறு ஒருவருடன் வாழ்ந்து வருகின்றார். எனவே விருப்பம் உள்ள இதே இனத்தவரும், வசதியுள்ள பிற இனத்தவரும் கலப்பு மணம் பெற்றோரும், செவ்வாய் தோஷ பெண்களும், ஜாதகம்/குடும்ப விவரங்களுடன் விண்ணப்பிக்கலாம். ஜாதகம் இல்லாதவர்களும் விண்ணப்பிக்கலாம். சேலம், தர்மபுரி, சென்னை பெண்கள் நலம். பெட்டி எண்: 5489.

• Alliance invited from parents of Balija/Kamma Graduate Brides preferably Employed with Horoscope fora a Balija B.E., Bridegroom 25/170 Mechanical Engineer of a reputed firm in Madras. Box No. 5490.

• Wanted well employed Non-Vathula Gothram, Vadakalai Iyenger Girl below 25/5' for a Boy working in TVS 29/5.' Contact with horoscope to Box No. 5491.

• Alliance invited for Brhacharanam, Kousika Girl, 35/145, Moolam Third Pada, Good looking, Fair complexion, Bank Officer at Nagpur. Iyer/Iyengar no bar. Horoscope optional. Contact — A.B. Shastry, Phone 23100. Box No. 5492.

• Alliance for Vadama, Athreya, Kerala Iyer Girl smart, medium complexion, post graduate, star Swathi/30/5'2"/2800, Officer Insurance Corpn, Bombay. Engineers/Officers in Government Service, Banks, C.A.etc preferred. Reply with horoscope. Box No. 5493.

• அம்மா (ஐயர்), அப்பா (மாத்துவா கன்னடம்) பிராமண தம்பதியின் 23 வயதான அழகான வேலை பார்க்கும் இசையில் தேர்ச்சி பெற்ற பெண்ணிற்கு, 25—30 வயதுக்குள் வேலை பார்க்கும் இசையில் விருப்பம் உள்ள தமிழ் பிராமண மணமகன் தேவை. மனைவி இழந்தோரும், விவாகரத்து செய்தவரும் விண்ணப்பிக்க வேண்டாம். எளிமையான முறையில் திருமணம். வரதட்சணை இல்லை. பெட்டி எண்: 5494.

• Wanted Bride Vellala Pillai, Mudaliar, Forward, from Military Nursing, State Nursing, Railways, Teacher, Others, for Non-Commissioned Officer, Air Force, B.A/DEE/28 years/ 178cms/ Rs.2100 Native Madras. Box No.5495.

• சௌராஷ்டிர குலம், கல்வ மஹாரிஷி கோத்திரம், +2 படித்து ஹிந்தி ராஷ்டிரபாஷா பாஸ் செய்த 22 வயது, நல்ல பக்தியும், குடும்பப்பாங்கான, தனியார் நர்ஸரி பள்ளி நிர்வாகம் செய்யும் பெண்ணிற்கு அதே சௌராஷ்டிர குலத்தைச் சேர்ந்த கௌரவமான உத்தியோகமுள்ள ஆரோக்கியமான மணமகன் தேவை. குடும்ப விவரத்துடனும், ஜாதகத்துடனும் அணுகவும். பெட்டி எண்: 5496.

---

பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாகப் பரதன் அச்சகத்தில் ஆசிரியர் பொறுப்பேற்று அச்சிட்டு வெளியிடுபவர்: வி. முரளி. துணை ஆசிரியர்: மஞ்சுளா ரமேஷ்.
நிர்வாகக் காரியாலயம்: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: 431543, 434157.
ஆசிரியர் குழு அலுவலகம்: 28, ஐந்தாவது தெரு, ஏரிவட்டம், நுங்கம்பாக்கம், சென்னை — 600 034. போன்: 473389.
ஆண்டு சந்தா — உள்நாடு: ரூ. 48/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 120/—; விமானத் தபால் ரூ. 270/—.
ஆறு மாதச் சந்தா — உள்நாடு: ரூ. 24/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 60/—; விமானத் தபால் ரூ. 135/—.

# என்டாப்

## டபுள் ரீபைண்ட் காட்டன் சீட் ஆயில்




காட்டன்சீட் ஆயிலில் ஒரு
சாதாரண மனித
உடலுக்கு தேவையான
அன்சாசுரேட்டட் கொழுப்பு
மிகுதியாக உள்ளது.
இது இதயத்திற்கு மிகவும்
நல்லது. இரத்தக் குழாய்கள்
கடினமாவதை இது தடுக்கிறது.

**yentop**

**DOUBLE REFINED
COTTONSEED OIL**

**M.M. NAGALINGAM REFINERIES**
**VIRUDHUNAGAR-626001**




புன்சிரிப்பு மலரச் செய்வீர்.
உணவு மேசை மீது உல்லாச
வண்ணங்கள் சேர்ப்பீர்.
கணக்கற்ற சுவைகளையும்
கூட்டுவீர். பாதாம் எஸென்ஸ்.
ஸ்ட்ராபெர்ரிகளின் சுவை,
பிஸ்தாவின் ருசி. சாதாரண
ஸ்பஞ்ஜ்கேக்கையும்
மும்மடங்கு சிறப்பாக்கிவிடும்
புஷ். சீஸ் ஸாண்ட்விச்சுக்கும்
வானவில்லின் வண்ணமாயம்
சேர்க்கும். ஏகோபித்த
பாராட்டைப் பெறும்.

**BUSH**

புஷ் ஃப்ளேவர்ஸ்
மற்றும் கலர்களில்
சர்வதேசப்புகழ்
பெற்ற பெயர்




18

BUSH BO
(INDIA) L
St. Thoma
Madras 60

*Marketo*